வாடாமலர்

740

VADA MALAR நவம்பர் 1949

6 அணா

டிக்கட் இன்ஸ்பெக்டர் :—“ஸார், நீங்க எத்தனை ஸீட்

THAT *Fulfils* YOUR NEEDS IN PRINTING

முயற்சி வீணாவதைத் தடுக்கலாம்

EFFICIENT MANAGEMENT

அழகாக அச்சடிப்பது ஒரு தனிக் கலை. அதற்கு நீண்ட நாள் அநுபவம் அவசியம். நானாவித அச்சு வேலைகளிலும், சிறந்த பிளாக்குகள் தயாரிப்பதிலும் எங்களுக்குள்ள பரந்த அநுபவத்தை உபயோகித்துக்கொண்டு, உங்கள் முயற்சி வீணாவதைத் தடுக்கலாம்.

EXCELLENT PRINTING

PHONE 4037

COMMERCIAL PRINTING & PUBLISHING HOUSE.,
(PRINTERS & BLOCKMAKERS)
46, ARMENIAN ST... MADRAS

Post Box No. 1569. Telegrams : "PRINTHOUSE"

223947
12 DEC 1949
MADRAS

இந்தியாவின் தலைசிறந்த

பட்டணம் பொடி

காலையில் எழுந்தவுடன் சுறுசுறுப்புடனிருக்க
ஒரு சிட்டிக்கை

உடல் சுத்தி செய்து உண்டி அருந்தி உறுதியுடன்
உழைப்பிலிறங்க ஒரு சிட்டிக்கை

பகல் போஜனத்திற்குப்பின் பரவசமடைய
ஒரு சிட்டிக்கை

மனோகரமான மாலை வேளையில் மனநிம்மதியுட-
னிருக்க ஒரு சிட்டிக்கை

பெண்டு பிள்ளைகளுடன் உண்டு களித்து
உறங்கப்போகுமுன் ஒரு சிட்டிக்கை

T.A.S. ரத்தினம்
பட்டணம் பொடி

T.A.S. ரத்தினம் பிரதர்ஸ், தபால்பெட்டி 1151, வண்ணாரப் பேட்டை, மதராஸ்.

வாசித்து விட்டீர்களா ?

நம் போர்ப்படைகள்

நமது நாட்டின் இராணுவத்தைப் பற்றி வெளி வரும் முதல் நூல் இதுவே. இதில் நமது தரை, கடல், விமானப் படைகள் எப்பொழுது தோன்றின, அவற்றின் அமைப்பு முறை எப்படி, அவற்றின் பகுதிகள் என்னென்ன என்பதைப் பற்றி விளக்கமாக எடுத்துக் கூறப்படுகிறது.

மேலும் நேஷனல் கேடட்கோர், இண்டியன் டெரிடோரியல் சைன்யம் பற்றிய விளக்கமும் நிறைந்துள்ளது.

சென்னைப் பிரதமர் கனம் பூ. ச. குமாரசாமி ராஜா அவர்களின் சிறந்த முன்னுரையுடன் வெளிவருகிறது.

ஏராளமான புகைப் படங்களும், வர்ணப் படங்களும் கொண்டது.

இதுவரை இவ்வளவு சிறப்புடன் ஒரு நூல் வந்ததேயில்லை என்று நிச்சயமாகக் கூறலாம்.

எழுதியவர் :

லெப்டினென்ட் கர்னல் ஆ. நி. சு. மூர்த்தி

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

விலை ரூ. 3-0-0 தபாற் செலவு 0-8-0

STAR PUBLICATIONS
BIG STREET - TRIPLICANE
MADRAS-5

ஆஸ்
த்மா
அபா
யத்தை

அனுபவ ஸம்மதமான மருந்தினுல்தான் தடுக்கலாம்

தாற்காலிகமான குணத்தை சீக்கிரத்தில்க் கொடுக்கும் மருந்துகள் கடைசியில் வியாதியை முற்றவைக்கின்றன. பலவருஷ அனுபவத்தைக் கொண்டு தயாரித்த "புரோஹித் ஸ்வாஸஹரி" தான் சாஸ்திரீக முறையில் கைகண்ட ஔஷதமாக அனுமானிக்கப்பட்டிருக்கிறது.

புரோஹித் ஸ்வாஸஹரி ஒன்றுதான் உட்கொண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தை க்கரைத்து அஜீரணத்தை குணப்படுத்தி நுரையீரல்களை பலப்படுத்தி ஆஸ்த்மாவினின்றும் பூரண சௌக்கியத்தை நிச்சயமாக அளிக்கிறது. ரு 3-8, ரு 6. ரு 10. பாக்கிங்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அல்லது "டாக்டர் புரோஹித் பார்மஸி, கோலாப்பூர்" விலாசத்திற் கெழுதி பெற்றுக் கொள்ளலாம்.

மதராஸ் ஸ்டாகிஸ்டுகள்: (1) அப்பா & கோ. சைனு பஜார் (2) ஜெ. பலைபாய் & கோ. 260, சைனு பஜார் ரோட் (3) தாதா & கோ. நைநியப் பநாயக் கன் தெரு.

மதுரை ஸ்டாகிஸ்டு:
என். ஆர். ஸ்வாமி கெமிஸ்ட்.

புரோஹித ஸ்வாஸஹரி

வாடா மலர்

பொருளடக்கம்

★

" பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே "

மலர் 1 நவம்பர் 1949 இதழ் 2

வாஷிங்டன் வளர்ந்த கதை
" சாவி " 4
அஞ்சலி செய்கிறோம் 8
அசுவினி கல்பம் ஏ. கே. பட்டுசாமி 10
நேருஜி அமெரிக்க விஜயம்
படங்கள் 9
நாளைய தினம் " முகுந்தன் " 25
பாஞ்சாலி சபதம் " துஷ்யந்தன் " 45
உடன்போக்கு த. நா. குமாரஸ்வாமி 57
மித்திரபேதம் பஞ்சதந்திரக் கதை 63
விலைகுறையப் போவுதாம்!
" கலியுகக் கவிராயர் " 66
மின்னல் கொடியாள்
ரவீந்திரநாத் டாகூர் 72

சைத்திரிகர்கள்: ரெஸாக், பூபதி, ராஜன், ஸாகர், கண்ணன், பாபு.

வாடாமலரில் வெளியாகும் கதை கட்டுரைகளில் காணப்படும் பெயர்கள் யாவும் கற்பனையே.

வாஷிங்டன் வளர்ந்த கதை

"சாவி"



விஞ்ஞானத் துறையிலும், பொருளாதாரத் துறையிலும், நவீன நாகரிக வசதியிலும் முன்னணியில்நிற்கும் அமெரிக்கா தேசத்தின்தலைநகரமான வாஷிங்டன் ஒரு காலத்தில் அந்தகாரத்தில் ஆழ்ந்து கிடந்தது. ஒரு காலத்தில் என்றால் எப்போதோ என்று எண்ண வேண்டாம். நூறு வருஷங்களுக்கு முன்னால்தான். அதாவது 1848-ம்வருஷம் வாஷிங்டன்நகர வீதிகளில் விளக்கு வெளிச்சம் கிடையாது; மோட்டார் வண்டிகள் கிடையாது; டெலிபோன் வசதி கிடையாது. தெருக்களைப் பற்றியோ சொல்லவேண்டியதில்லை. நாட்டுப்புற வீதிகளைப்போல் குழிகளும், கூழாங்கற்களும் சகதியும் நிறைந்து அழுது வடிந்து கொண்டிருந்தன.

"நூறு வருஷங்களுக்குள்ளாகவா வாஷிங்டன் இத்தகைய அதிசயமான மாறுதலை அடைந்து விட்டது!" என்று நீங்கள் ஆச்சரியப்படுகிறீர்கள் அல்லவா?

ஆமாம்; வாஷிங்டன் நகரத்தின் பற்பல கட்டிடங்களும், வானளாவிய கோபுரங்களும் கடந்த நூறு வருஷங்களுக்குள்ளாக எழுந்தவைதான்.

* * *

நூறு வருஷங்களுக்கு முன்னால் ஒரு தினம். அழகிய போடோமாக் நதிக்கரையில் கம்பீரமாகக் காட்சி அளிக்கும் வாஷிங்டன் அரசாங்க மாளிகைக்குச் சற்று தூரத்தில் ஒரு சின்னஞ் சிறு ஸ்தூபி எழுந்துகொண்டிருந்தது. அதுதான் அமெரிக்க மக்களுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்த மகா புருஷர் ஜார்ஜ் வாஷிங்டன் ஞாபகார்த்த ஸ்தூபி. அந்த ஸ்தூபியைப் பார்த்து அரசாங்க மாளிகை பேசத் தொடங்கியது:—

"அப்பனே, வா! உனக்கு நல்வரவு கூறுகிறேன். உன்னுடைய தோற்றம் இந்நகர மக்களுக்குப் பெருமையும் கீர்த்தியும் அளிக்கட்டும். சுதந்திர மக்கள் என்ற உணர்ச்சியை அவர்களுக்கு எப்போதும் ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கட்டும்... யார் பேசுகிறது என்று ஆச்சரியப்படுகிறாயா? நான்தான் அப்பனே, இந்நகரத்தின் அரசாங்க மாளிகை. இங்கு முதல் முதல் கட்டப்பெற்ற பழமையான கட்டிடம் நான்தான். கட்டிடங்களுக்குள்ளே என்னை ஜாம்பவான் என்று கூறலாம். இந்த நகரத்தையும், இந்த தேசத்தையும் பற்றின இரகசியங்களும், சரித்திரங்களும் எனக்குத் தெரியும்......"

வாஷிங்டன் ஸ்தூபி குறுக்கிட்டு "அப்படியா சேதி? உன் அருகிலேயே, இந்த அழகான நதிக்கரையிலேயே, எனக்கு இடம் அளித்த அமெரிக்க மக்கள் நீடூழி வாழட்டும். அவர்கள் வெகு சீக்கிரத்திலேயே இங்கே காஸ்லைட் கம்பெனி ஒன்று ஆரம்பிக்கப் போகிறார்களாமே? அதற்குக் காங்கிரஸ் சபையின் அங்கீகாரம் கூடக் கிடைத்துவிட்டதாமே? அப்படியானால் இன்னும் கொஞ்ச

நாட்களுக்கெல்லாம் இந்நகரம் தீபாலங்காரத்துடன் ஜகஜ்ஜோதியாகப் பிரகாசிக்குமல்லவா......?"

"உண்மைதான்; எத்தனையோ காலமாக காஸ்லைட்டின் அவசியத்தைப் பற்றி என்னுடைய விசாலமான அறைகளுக்குள்ளே விவாதங்கள் நடந்திருக்கின்றன......"

"அப்படியா? இந்த நகரத்தைப் பற்றின கதை உனக்குத்தான் தெரியும். நான் இப்போது தான் பிறந்த குழந்தை. வாஷிங்டன் சரித்திரத்தை எனக்குக் கொஞ்சம் சொல்ல முடியுமா?" என்று கேட்டது வளரும் ஸ்தூபி.

அரசாங்க மாளிகை சொன்ன விவரம் வருமாறு :—

பதினேழாம் நூற்றாண்டில் கதையைத் தொடங்கலாம். அப்போதுதான் முதன் முதலாக ஐரோப்பிய மக்கள் அமெரிக்காவுக்குள் குடியேறினார்கள். மத உரிமையும், பேச்சுரிமையும் விரும்பிய உலகத்து மக்கள் யாவருக்கும் அமெரிக்கா தேசம் வரவேற்பு அளித்தது.

முதல் முதல் இந்த நகரத்துக்கு விஜயம் செய்த பிரமுகர் ஜான் ஸ்மித் என்ற ஆங்கிலேயர். 1608-ல் இவர் போடோமாக் நதி வழியாக வந்து இங்கே சுற்றுப் புறத்தில் வசித்து வந்த இந்தியர்களுடன் சிநேகம் செய்து கொண்டார். இவருக்குப் பிறகு ஹென்ரி ப்ளீட் என்ற இங்கிலீஷ்காரர் 1632-ல் விஜயம் செய்தார். ஹென்றி ப்ளீட் இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்று தம்முடைய அமெரிக்க விஜயத்தைப் பற்றி விவரமாகக் கட்டுரைகள் எழுதினார். இதைப் படித்துவிட்டுப் பலர் இங்கேயுள்ள வர்ஜீனியாவுக்கும் மேரிலாந்துக்கும் வந்து குடியேறினார்கள்.

1742-ம் ஆண்டில் கிழக்குப் பிராந்தியத்திலுள்ள துறைமுக வழியாக இன்னும் பலர் குடியேறி வசிக்கத் தொடங்கினார்கள். அலெக்ஸாந்தர் குடும்பத்தின் பெயரைத் தாங்கி நிற்கும் பெரிய துறைமுகத்துக்கு அலெக்ஸாண்ட்ரியா என்று பெயர். அப்போது இந்தப் பிரதேசத்தில் பெரும் பகுதி அலெக்ஸாந்தர் குடும்பத்தாருக்குச் சொந்தமாயிருந்தது. பிரிட்டிஷ் அரசர் இரண்டாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியின் பெயரால் ஏற்படுத்தப்பட்ட நகரம்தான் ஜார்ஜ்டவுன்.

பின்னர், 1776-ல் இங்கே குடியாட்சி ஆரம்பமான கதை மிகவும் பிரசித்தமானது. குடியரசு ஏற்பட்ட பிறகு தலைநகர நிர்மாணத்துக்கேற்ற இடத்தைத் தேர்ந்தெடுப்பதில் அமெரிக்க காங்கிரஸ் சபை தன் முழு கவனத்தையும் செலுத்தியது. இந்த போடோமாக் நதிக் கரைக்கே அந்தப் பேரதிருஷ்டம் கிட்டியது. முதலில் இந்தப் பிரதேசம் கொலம்பியா ஜில்லாக்கள் என்ற பெயரால் அழைக்கப்பட்டது. பிற்பாடு இதுவே வாஷிங்டன் நகரம் என்று பெயர் பெற்றது.

அமெரிக்க மக்களுக்கு விடுதலை வாங்கித் தந்த ஜார்ஜ் வாஷிங்டன் ஞாபகார்த்தமாக அந்த மகா புருஷரு



டைய பெயரையே தலைநகரத்துக்குச் சூட்டினார்கள்.

இங்ஸ்டன், பார்லிங்டன், லங்காஸ்டர், நியூயார்க், முதலிய பிரசித்த நகரங்களுக்கு அமெரிக்காவின் தலைநகரமாக விளங்கும் அதிர்ஷ்டம் கிட்டவில்லை. அப்பேரதிர்ஷ்டம் இதோ காமிருக்கும் இந்த இடத்துக்கே கிட்டியது!

இந்தப் பிரதேசத்தைத் தேர்ந்தெடுத்தவர் யார் தெரியுமா? பிரஸிடெண்ட் வாஷிங்டன் தான். முதல் முதலாக இந்த இடத்தைப் பார்வையிட்டு, நிபுணர்கள் கமிட்டியை நிறுவி, நகர நிர்மாணத்துக்குப் 'பிளான்' போடச் சொன்னவரும் வாஷிங்டனேயாகும்.

இந்த மாபெரும் காரியத்துக்கு தீர்க்க யோசனையும் மிகுந்த பொருளும் வேண்டியிருந்தது. மேரிலாந்தும் வர்ஜீனியாவும் சேர்ந்து தலை நகர நிர்மாணத்துக்கு வேண்டிய நிலத்தை வழங்கியதுடன், 190 லட்சம் டாலரையும் அளித்தன. அப்போது பிரசித்தி பெற்றிருந்த பிரெஞ்சு தேசத்து என்ஜினீயர் மேஜர் சார்லஸ் இன்பண்ட் என்பவர் வாஷிங்டன் நிர்மாணச் சிற்பியாக நியமிக்கப் பட்டார். மேஜர் சார்லஸ் இந்த மாபெரும் காரியத்துக்காகத் தம்முடைய நேரம் முழுதையும் செலவழித்துத் திட்டங்கள் போட்டார். இரவு பகலாக உழைத்தார். விசாலமான வீதிகளை நிர்மாணித்தார். மாடங்கள் நிறைந்த மண்டபங்களைக் கட்டினார். கூடங்கள் நிறைந்த கோபுரங்களைக் கட்டினார். சாலைகள் அமைத்தார். சோலைகள் வளர்த்தார். அரசாங்க மாளிகையைக் கட்டினார். ஜனாதிபதி இல்லத்தை நிறுவினார். இவ்வளவும் காகிதத்தின் மீது தான்!

திட்டங்கள் யாவும் காரியாம்சத்தில் திருப்திகரமாக நடைபெறத் தொடங்கிய சமயத்தில் மேஜர் இன்பண்ட் திடீரென்று ஒரு திட்டத்தைப் போட்டு அமெரிக்க மக்களை பிரமிக்கச் செய்தார். அதாவது வாஷிங்டன் வீதிகளின் அகலம் 160 அடி இருக்க வேண்டும் என்று கூறினார். வாஷிங்டன் வீதிகளில் அப்போது சேறும் சகதியும் நிறைந்து ஏராளமான குழிப் பள்ளங்கள் கிடந்தன. எனவே, இது மனித சாத்தியமல்ல என்று எல்லோரும் திட்டத்தை எதிர்த்தார்கள். அத்துடன் "மேஜர் இன்பண்டுக்குப் பைத்தியம் தான் பிடித்திருக்கிறது. சேறு நிறைந்த வீதிகளை மேலும் அகலப்படுத்தப் போகிறாராம்!'' என்று பரிகசித்தார்கள்.

பிரெஞ்சு என்ஜினியர் தம்முடைய திட்டத்தை விடாப்பிடியாகச் சொல்லிக்கொண்டிருக்கவே ஜனாதிபதி வாஷிங்டன் அவரை டிஸ்மிஸ் செய்து பிரான்ஸுக்கு அனுப்ப நேரிட்டது.

பின்னர், ஆண்ட்ரூ எல்லிகாட் என்பவர் இன்பண்டுக்குப் பதிலாக நியமிக்கப்பட்டார்.

இந்தப் புதிய என்ஜினியர் பழைய திட்டங்களில் சிற்சில மாறுதல்களைச் செய்து காரியத்தைத் தொடங்கினார்.

கடைசி கடைசியாக பல வருஷ உழைப்புக்குப் பிறகு வாஷிங்டன் நகரம் உருவாயிற்று. பின்னர் தலை நகரத்தைத் தேடி வந்து பலர் குடியேறினார்கள். நாளடைவில் கலா சாலைகளும், இராணுவப் பயிற்சி முகாம்களும், ஆஸ்பத்திரிகளும் ஏற்பட்டன.

1880-ம் ஆண்டில் பிலடல்பியாவிலிருந்த பெடரல் சர்க்கார் வாஷிங்டன் நகரத்துக்குக் குடியேறியது. அப்போது அரசாங்க அதிகாரிகள் மொத்தம் 120 பேரே இருந்தனர்! கோச்சு வண்டிகளின் மூலம் தஸ்தாவேஜுகள் கொண்டு வரப்பட்டன.

1800-ல் பதினாலாயிரம் பேரே வசித்து வந்த இந்த நகரத்தின் ஜனத்தொகை 1840-ம் வருஷத்தில் 43 ஆயிரமாக ஆயிற்று. அப்போது சுகாதார வசதி ரொம்பவும் குறைவாக இருந்தது. மக்கள் வசதியற்ற வாழ்க்கையைப் பற்றிச் சதா புகார் செய்து

கொண்டே யிருந்தார்கள். தெருவில் எண்ணெயும் திரியும் போட்ட மங்கலான குருட்டு விளக்குகள் எரிந்தன. குழிப்பள்ளங்களுக்கு விமோசனம் ஏற்படவேயில்லை. இதனால் இராக் காலத்தில் நகர மக்கள் வாசல் பக்கமே தலை காட்ட பயந்து கொண்டு வீட்டுக்குள்ளேயே இருந்தார்கள்.

அமெரிக்கச் சுதந்திர வெற்றி வீரர் ஆப்ரகாம் லிங்கன் 1847-ம் வருஷம் வாஷிங்டன் நகரத்தைப் பார்வையிட்டு விட்டு அதைச் சீர்திருந்த முனைந்தார்.

அதற்குப் பிறகே இப்போது இங்கே காஸ்லைட் கம்பெனி உதயமாகிறது. வாஷிங்டனுக்கு ஞாபகார்த்த ஸ்தூபி எழுந்ததும் இதே வருஷம்தான். உன்னுடைய அஸ்திவாரக் கல் நாட்டு விழாவின்போது இந்த இடத்துக்கு இருபதாயிரம் பேர் விஜயம் செய்தார்கள். அஸ்திவாரக் கல்லை மிகவும் பலமாகப் போட்டார்கள். அதாவது அதன் கனம் இருபத்து நாலாயிரம் பவுண்டு எடை!

அப்பனே! அந்த அஸ்திவாரத்தின் மீதுதான் நீ வளர்ந்து வருகிறாய்" என்று முடித்தது அரசாங்கமாளிகை.

புகழ்பெற்ற அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டன் ஸ்தூபி போடோமாக் நதிக்கரையில் இன்று கம்பீரமாகத் தோன்றிவானளாவ நிற்கிறது. உலகத்திலேயே மிகவும் உயரமான ஸ்தூபி வாஷிங்டன் ஸ்தூபிதான். அதன் உயரம் என்ன தெரியுமல்லவா? 555 அடி. இதைக் கட்டி முடிக்க அமெரிக்க மக்கள் எடுத்துக் கொண்ட பிரயாசையும், செலவழித்த டாலர்களும் கொஞ்ச நஞ்சமல்ல. இந்தியாவின் பிரதமர் பண்டித நேரு சென்ற மாதத்தில் வாஷிங்டனுக்கு விஜயம் செய்தபோதுமேற்படி ஸ்தூபியின் கம்பீரத்தை அண்ணாந்து பார்த்து அதிசயப் பட்டார். வானுலக வாசியான ஜார்ஜ் வாஷிங்டனுக்கு மேற்படி உன்னதஸ்தூபி இந்த சந்தோஷச் சேதியை எட்ட வைத்திருக்கும் என்று நம்புகிறோம்.

ஆபரேஷன் இல்லை; பத்தியமில்லை,

உத்திரவாதத்துடன் சுகப்படுத்தப்படும்

★

மூலம், பவுத்திரம், எத்தனை முளைகள், எத்தனை துவாரங்கள், சீழ், ரத்தம் வந்து கொண்டிருந்தாலும் கவலை வேண்டாம். நேரில் வந்து வைத்தியம் செய்துகொள்ள வேண்டும். பெண்களுக்கு பெண்களைக் கொண்டே சிகிச்சை செய்யப்படும். ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்களும், தங்க மெடல்களும் பரிசு பெற்றவர்.

★

கந்தன் மூலபவுத்திர ஆஸ்பத்திரி

137, தங்கசாலைத் தெரு, — சௌகார்பேட்டை, சென்னை-1.

அஞ்சலி செய்கிறோம்

'வாடாமலர்' முதல் இதழ் வெளியான சில தினங்களுக்கெல்லாம் நமது காரியலாயத்தைத் தேடி ஓர் அன்பர் வந்திருந்தார். வந்தவர் நமது புதிய முயற்சியை ஒரேயடியாகப் புகழ்ந்து பாராட்டி விட்டு, "இந்தாருங்கள், என் சந்தாப்பணம்" என்றார்.

"பாராட்டுதலும், சந்தாப்பணமும் இருக்கட்டும்; பத்திரிகையிலுள்ள குறைபாடுகளைச் சொல்ல வேணும்" என்றோம்.

"குறைபாடா? பத்திரிகையின் அளவு சற்று பெரிதாகவும் பக்கங்கள் கொஞ்சம் கூடுதலாகவும் இருக்க வேண்டும். இந்த இரண்டே குறைகள் தான்......" என்றார் அன்பர்.

"இவ்விரண்டு குறைகளும் நமக்கே தெரிந்தவைதான். ஆரம்பத்தில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால்தானே பின்னால் அவற்றை நிவர்த்தி செய்து அபிவிருத்தி காட்ட முடியும்? மற்றபடி வேறு ஏதாவது குறைகள் உண்டா?" என்று கேட்டோம்.

அன்பர் சற்றே தயங்கினார்.

"என்ன அன்பரே, தயங்குகிறீர்? சொல்லும்; சொல்ல வந்த விஷயத்தை தாராளமாகச் சொல்லும்......" என்றோம்.

"பத்திரிகை இவ்வளவு சிறப்பாக இருந்தும் சில விற்பனைக் கடைகளில் இன்னும் பிரதிகள் மிஞ்சியிருக்கின்றனவே!" என்று இழுக்கலானார்.

"சபாஷ்! அப்படிச் சொல்லும்; இதற்காகவா இத்தனை தயக்கம்? விற்பனைக் கடைகளை நன்றாகக் கண்ணோட்டமிட்டுச் சுற்றி வளைத்துப் பார்த்தீரா?"

"ஆமாம்; பார்த்தேன்."

"அங்கே நமது பிரபலமான சில பத்திரிகைகள்கூட (ஒரு காலத்தில் 'க்யூ'வில் நின்று வாங்கப் பெற்றவை) விற்பனையாகாமல் மிஞ்சிக் கிடப்பதைக் கண்டீரா?"

"ஆம்."

"அன்பரே! ஆகையால், 'வாடாமலர்' பத்திரிகை மட்டும்தான் மிஞ்சுவதாக எண்ணவேண்டாம். பிரபல பத்திரிகைகள் என்று தம்பட்டம் அடித்துக் கொள்பவைகளின் கதைகூட அப்படி அப்படித்தான். அத்துடன் 'வாடாமலர்' இப்போதுதான் தொடங்கப் பெற்றதாகையால் ஆரம்பத்திலேயே பூராப் பிரதிகளும் விற்பனையாகி விடும் என்று எதிர் பார்க்க முடியாது. மற்றொரு விஷயத்தையும் தாங்கள் தெரிந்து கொள்ள வேணும்; இப்போதெல்லாம் பத்திரிகையின் தரத்துக்கும், விற்பனைக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. ஜோஸ்யப் பகுதிக்காகவும், அதிக பக்கங்கள் என்பதற்காகவும் பத்திரிகை விற்பனையாகும் காலம் இது......" என்றோம்.

"அப்படியானால் தாங்கள் பக்கங்களைக் கூட்டப் போவதில்லையா?......"

"யார் இல்லை என்றது? பேஷாகக் கூட்டப் போகிறோம்; ஆறு அணாவிலைக்கு நம்மால் சாத்தியமான அளவுக்குப் பக்கங்களும் விஷயங்களும் தருவோம்" என்று அன்பருக்கு உறுதி கூறி அனுப்பினோம்.

அன்பருக்குக் கொடுத்த வாக்குறுதி இந்த இதழில் நிறைவேறியிருப்பதை நேயர்கள் கவனித்திருக்கலாம். பக்கங்களைக் கூட்டியிருப்பதுடன், நேயர்களுக்குத்திருப்தி அளிக்கும் முறையில் அளவிலும் மாறுதல் செய்திருக்கிறோம்.

முதல் இதழைப் பாராட்டிப் பல நேயர்கள் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். அவர்கள், விஷயத்தின் உயர்வை வெகுவாகப் பாராட்டி, "'முகுந்தன்' யார்? 'கலியுகக் கவிராயர்' யார்? 'ரமன்' யார் ?" என்று கேள்வி மேல் கேள்வியாய்க் கேட்டு ஆச்சரியம் தெரிவிக்கிறார்கள்.

'முகுந்தனு'டைய "**நாளைய தினம்**" தொடர் கதை இந்த இதழில் ஆரம்பமாகியிருக்கிறது. இந்தக் கதையைப் படிக்கும் நேயர்கள் தமிழ் நாட்டில் ஒரு காண்டேகர் தோன்றியிருப்பதை உணர்வார்கள்.

காந்தீயத்தை மறந்து வாழும் மாந்தரைப் பார்த்து சென்ற இதழில் "ஒண்ணும் புரியவில்லே தம்பி !" என்று பாடிய 'கலியுகக் கவிராயர்' இந்த இதழில் "விலே குறையப் போவுதாம்!" என்றொரு பாட்டை எழுதியிருக்கிறார். இந்தப் புதுமைக் கவிராயரின் பாட்டு'வாடாமலர்'ஒவ்வொரு இதழிலும் வெளியாகும் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கிறோம்.

இந்த இதழில் மற்றொரு தொடர் கதையும் முன்னெச்சரிப்பு எதுவுமின்றி வெளியாகியிருக்கிறது. "**மின்னல் கொடியாள்**" என்னும் இந்த நவீனத்தை எழுதிய கவியரசர் டாகூரைப் பற்றி நேயர்களுக்கு அறிமுகம் வேண்டியதில்லேயல்லவா ? இருந்தாலும் "மின்னல் கொடியா" ளிடம் வாசகர்கள் உள்ளத்தைப் பறி கொடுக்காமலிருக்க வேண்டும் என்று மட்டும் எச்சரிக்க விரும்புகிறோம்.

அடுத்த இதழில் மற்றும் இரு புதிய அம்சங்களேத் தாங்கி "வாடாமலர்" வெளிவரும். தமிழ்ப் பேரறிஞர் டாக்டர் மு. வரதராசனர் நமது பத்திரிகையில் இலக்கியப் பகுதி இல்லாத குறையை ஈடு செய்ய முன் வந்திருக்கிறார். டாக்டர் அவர்களுடைய அறிவாற்றலேயும், தமிழ் வசன நடையையும் தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள். அவரைப் பற்றி நாம் ஏதாவது சொல்வது அதிகப்பிரசங்கித்தனமாகும் என்று அஞ்சி இத்துடன் நிறுத்திக் கொள்கிறோம்.

இன்னெரு அம்சம், "தென்னிந்தியப் பத்திரிகைகள்" என்ற தலைப்பில் "வாசகன்" எழுதும் தொடர்க் கட்டுரையாகும், பத்திரிகை உலகின் ஜாம்பவானக விளங்கும் "சுதேசமித்திரனே"ப் பற்றிய முதல் கட்டுரை இந்தப் பகுதியில் முதன்மை ஸ்தானம் பெறுகிறது.

* * *

நமது அரும் பெரும் தலேவரும், ஒப்பற்ற வீர புருஷருமான பண்டித ஜவாஹர்லால் நேருவுக்கு நாளது நவம்பர் மீ 14உ யன்று அறுபதாவது ஆண்டு பூர்த்தியாகி அறுபத்தோராம் ஆண்டு ஆரம்பமாகிறது, பண்டிதரின் பிறந்த தினத்தை தேசமெங்கும் விமரிசையாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. பண்டிதரின் தோற்றத்தையோ, சுறு சுறுப்பையோ பார்ப்பவர்கள் அவருக்கு அறுபது ஆண்டு பூர்த்தியாகிறது என்பதையே ஒப்புக்கொள்ள மாட்டார்கள்.

கடந்த ஒரு மாத காலமாக நேருஜி அமெரிக்கா தேசமெங்கும் சுற்றிப் பார்வையிட்டார். அவர் சென்ற இடங்களெல்லாம் அமெரிக்க மக்கள் நேருஜிக்கு அமோக வரவேற்பு அளித்து ஒப்பற்ற உபசாரம் செய்தார்கள். நேருஜியின் விஜயம் காரணமாக அமெரிக்க மக்களிடையே இந்தியாவின் அந்தஸ்தும் கௌரவமும் பன்மடங்கு உயர்ந்திருக்கிறது. நேருஜியை அளித்த இந்தப் புண்ணிய பாரத பூமிக்கு அஞ்சலி செய்கிறோம். நேருஜியின் அமெரிக்க விஜயப் படங்களே, அவருடைய பிறந்த தின வைபவத்தை முன்னிட்டு இந்த இதழில் விசேஷ அனுபந்தமாக வெளியிட்டுப் பெருமை கொள்கிறோம்.

அசுவினி கல்பம்

ஏ.கே.பட்டுசாமி

ராவ் பாகதூர் ராம சுப்பிரமண்யம் அவர்கள் தமது பங்களாவின் முன் புறத்து அறையில் விச்ராந்தியாக உட்கார்ந்திருந்தார். விச்ராந்தி என்றால் வெளிப் பார்வைக்குத்தான். உள்ளூர அவரது மனம் அமைதியை நாடித் தவித்துக் கொண்டிருந்தது. கையிலிருந்த பத்திரிகையைக் கீழே தாழ்த்திக் கொண்டு, எதிரில் இருந்த நிலைக்கண்ணாடியில் தமது முகத்தைப் பார்த்தார். காலதேவன் அவரது முகத்தைப் பரிபூரணமாகக் கடாட்சித்து விட்டான். பத்து வருடங்களுக்கு ஒன்றாக நெற்றியில் ஆறு கீற்றுகள் காணப்பட்டன. சுருக்கம் விழுந்திருந்த முகத்தை வழ வழப்பாக க்ஷவரம் செய்திருந்தபோதிலும், வழுக்கைத் தலையில் இங்கொன்றும் அங்கொன்றுமாக வெள்ளிக் கம்பிகள் நீட்டிக் கொண்டிருந்தன. வாயைத் திறந்தால் முன் பற்கள் இருக்க வேண்டிய இடம் காலியாக இருந்தது.

"சே! கடவுள் வயோதிகம் என்று என் ஒன்றை உண்டாக்கினார்? மனிதன் இருக்கிற வரையில் வாலிபமாகவே இருந்து விட்டுச் செத்தால் இந்தக்கடவுளுக்கு என்ன குடியா முழுகிப் போய் விடும்? மனதில் தெம்பிருந்தும் உடலில் தெம்பில்லையே! இத்தனையும் போதாதென்று ஆஸ்துமா என்னும் அபஸ்மார வியாதி வேறு பிடுங்கித் தின்கிறது!"

* * *

"மாமி!"

ராவ் பகதூர் திடுக்கிட்டு எழுந்தார். சுமார் பதினாறு வயது மதிக்கத் தக்க தங்கச் சிலை போன்ற ஓர் இளம் சுந்தரி வாசற்படியருகே தயங்கிக் கொண்டு நின்றாள். அவளது கையில் ஒரு வெள்ளிக்குங்குமச்சிமிழ் காணப்பட்டது. இளமையும் எழிலும் ததும்பிக் கொண்டிருந்த அவளது மோஹன உருவத்தைக் கண்டதும் ராவ் பகதூர் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றார். அவரது இருதயம் 'படக் படக்' கென்று அடித்துக் கொண்டது. உடம்பெல்லாம் புல்லரித்தது. தமக்கு முன் பற்கள் இல்லாததையும் மறந்து அவர் ஆனந்த பரவசராகவாயைத் திறந்தார்.

"யாரம்மா நீ?"

"பக்கத்து வீட்டில் புதிதாகக் குடி வந்திருக்கிறோம்; நவராத்திரி கொலுவிற்கு மாமியை அழைச்சுட்டுப் போகலாம்னு வந்தேன்."

'ரிடையர்ட்' வாலிபரின் முகம் சூம்பியது.

"நம்மாத்தில் மாமி கிடையா தம்மா!"

யுவதி சற்றே திகைத்தாள்.

"உங்கள் பெண் இருக்கிருளா மாமா?"

'மாமா' அசட்டுச் சிரிப்புடன் "எனக்கு ஒரே பிள்ளைதான். வேறே குடும்பத் தொல்லையே கிடையாது!" என்று ஒரு வார்த்தையைப் போட்டு வைத்தார்.

"அப்படியானல் நான் போய் வருகிறேன் மாமா!"

"எப்போது வருகிருய்?" என்று கேட்டார் கிழவர்.

அந்தப் பெண் 'கல கல' வென்று நகைத்தாள்.

"உன் பெயர் என்னம்மா!"

"புஷ்பலதா!"

"சபாஷ்! பொருத்தமான பெயர்; பெயர் வைத்த வாய்க்கு சர்க்கரை போட வேண்டும்!"

"அப்படீன்ன சர்க்கரைவாங்கி வையுங்கோ. எங்க பாட்டியை வந்து வாயைத் திறக்கச் சொல்கிறேன்" என்று கூறிச் சிரித்துக் கொண்டே ஓடி மறைந்தாள் அந்தப் பூங்கொடி. ராவ் பகதூர் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார்.

அறைக்கு வெளியே அரவம் கேட்டது. எட்டிப் பார்த்தார். அவரது மகன் சபாரத்தினம் உள்ளே சென்று கொண்டிருந்தான். அவருக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

"அடே காவாலிப் பயலே! இத்தனை நேரம் இங்கேயா நின்று கொண்டிருந்தாய்? யாராவது பெண்கள் போனல் மரியாதை யில்லாமல் என்னடா பார்வை?" என்று கர்ஜித்தார். சபாரத்தினம் திரும்பிக் கூடப் பார்க்க வில்லை.

ராவ் பகதூர் மீண்டும் வந்து ஆசனத்தில் அமர்ந்தார். அவரது மனதில் இன்ப நினைவுகள் கூத்தாடின. கண்ணிமைகளை இலேசாக மூடி, மனத் திரையில் அந்த எழில் மங்கையின் உருவத்தை வரவழைத்துக் கொண்டுமானசீகமாக உரையாடத் தொடங்கினர்.

அப்படி எவ்வளவு நேரம் இருந்தாரென்று கூற முடியாது. திடீரென்று வைத்தியர் வேதரத்தினம் உள்ளே நுழைந்தார். இவ்



வளவு நாட்கள் போலின்றி அந்த மருத்துவரின் முகத்தில் சந்தோஷக் குறி தென்பட்டது.

"என்னய்யா சமாசாரம்? திரும்பவும் பழைய கஷாயமும் செந்தூரமும் தானே? எல்லாவற்றையும் குப்பையிலே கொண்டு போய் எறிந்து விட்டு ஒரு முழுக்குப் போட்டு விட்டு வாரும்! உமது செந்தூரத்தைச் சேவித்தது முதல் என் கால்கள் பூட்டுக்குப் பூட்டு வலிக்கின்றன. வாலிபம் திரும்புவதற்குப் பதில் ஒரு வருஷத்து வார்த்திபம் ஒரே நாளில் உண்டாகிறது!......"

வைத்தியர் சொல்வார்:

"இதோ பாருங்கள், ஸார்! இனிமேல் தங்களுக்கு லேகியம், செந்தூரம் இவைகளைத் தரப் போவதில்லை. இன்றோடு உங்கள் கவலைதீர்ந்தேபோய் விட்டது..."

"என்னய்யா விசேஷம்? ஏதாவது புதிய கஷாயமோ? இல்லை, குளிகையோ?"

"அதெல்லா மில்லை ஸார்! இப்போது நான் சொல்லப் போவது ஒரு அற்புதமான தெய்வீக சக்தி வாய்ந்த வரப் பிரஸாதத்தைப் பற்றி. தாங்கள் ஏளனம் செய்யாமல் கேட்க வேண்டும். இவ்வளவு நாளாகத் தங்கள் பணத்தை எவ்வளவோ சாப்பிட்டிருக்கிறேன்....." என்று கூறிக் கொண்டே வேதரத்தினம் தமது பெட்டியிலிருந்து ஒரு சிறிய கண்ணாடிப் புட்டியை வெளியில் எடுத்தார். அதில் உருக்கி வார்த்த பொற் குழம்பு போன்ற ஒரு வித திரவம் இருந்தது.

வைத்தியர் மேலும் கூறுவார்:

"இதுதான் அசுவினி கல்பம்; ஆதியில் அசுவினி தேவர்கள் சியான முனிவருக்கு வாலிபம் திரும்புவதற்காகக் கையாண்ட முறை இது. முனிவரின் உளுத்துப் போன உடல் ஒரே நொடியில் இந்த அபூர்வ மருந்தினால் வஜ்ரம் பெற்றது. எங்கள் கொள்ளுத் தாத்தா எழுதி வைத்து விட்டுப் போன ஏட்டுச் சுவடியில் இந்த முறை காணப்பட்டது....." என்று ஒரு அத்தியாயம் பிரசங்கம் செய்துவிட்டு, வைத்தியர் தமது தலைப்பாகையை அகற்றினார். நேற்று வரையில் தும்பைப் பூவைப்போல் இருந்த அவரது தலை மயிர் இன்று கரு கரு வென்று காட்சியளித்தது.

"பார்த்தீர்களல்லவா? இதில் ஒரே ஒரு கடுகுப் பிரமாணம் சேவித்ததின் பலன் இது. இதைத் தயாரிப்பது மிகுந்த பிரயாசையாகையால் வீணாக்காமல் அப்படியே தங்களுக்காகக் கொண்டு வந்தேன்."

"வைத்தியரே, நீர் சொல்லுவது மட்டும் உண்மையானால்!..."

"சத்தியமாக நம்புங்கள்; இதில் ஒரு மிளகளவு தண்ணீரில் கலந்து சாப்பிட்டால் போதும். தாங்கள் இருபது வயது இளைஞராக மாறுவது திண்ணம்!"

"ஏதாவது ஏடா கூடமாக..."

"கொஞ்சமும் ஹானியற்றது!"

"என்ன விலையாகிறதோ?"

"இது விலையில்லா மாணிக்கம்; தாங்கள் பலன் கண்ட பிறகு இஷ்டப் பட்டதைக் கொடுக்கலாம். நான் நாளைய தினம் இங்கு வருகிறேன்."

வேதரத்னம் ராவ் பகதூரிடம் புட்டியைக் கொடுத்து விட்டு அங்கிருந்து அகன்றார்.

ராவ் பகதூரின் உள்ளத்தில்கட்டுக் கடங்காத உற்சாகம் பிறந்தது. அதே சமயத்தில் நம்பிக்கையும் அவநம்பிக்கையும் கலந்த ஒருவித உணர்ச்சியும் தோன்றியது. உடனே அந்த மருந்தைப் பரீட்சித்துப் பார்க்க விரும்பினார்.

மெதுவாக எழுந்து கதவை மூடித் தாளிட்டார். கூஜாவிலிருந்த தண்ணீரை ஒரு கண்ணாடி டம்ளரில் ஊற்றி விட்டு மருந்து புட்டியைக் கையி லெடுத்தார். கை நடுங்கியது. மார்பு பட படத்தது. பல்லைக் கடித்துக் கொண்டு மருந்தை ஊற்றி, கண்ணை மூடிய வண்ணம் 'லபக்'கென்று வாயில் கொட்டி விழுங்கி விட்டார்.

அடுத்த விநாடி அவருடைய வயிற்றில் கப கப வென்று தாங்க முடியாத ஓர் எரிச்சல் கண்டது. தலைசுற்றியது. விழிகள் இரண்டும் பிதுங்கி விடும் போலிருந்தன. அதையடுத்து தேக முழுவதும் ஓர் அரிப்பு. நரம்புகளில் கொறடா போட்டு இழுப்பது போன்ற வலி. மயிர்க் காலுக்கு மயிர்க்கால் ஊசியினால் குத்துவது போன்ற வேதனை. இன்னும் சொல்லத் தெரியாத வலிகள் கண்டு விட்டன. அடுத்த நிமிஷத்தில் உயிரே போய் விடும் போலிருந்தது. வாய் விட்டுக் கதற எண்ணினார், குரல் எழவில்லை. கண் பார்வை மங்கியது.

சுமார் ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு சிறிது சிறிதாக வேதனை குறைய ஆரம்பித்தது. பார்வை சரியாகத் தெரிந்தது. ராவ் பகதூர் நிலைக் கண்ணாடியைப் பார்த்தார்.

தலைமை ஆபீஸ்:

பாண்டிபஜார்

தியாகராயநகர் :: சென்னை.

தென்னிந்தியப் பத்திரிகைகள்

என்னும் தலைப்பில் "வாசகன்" எழுதும் முதல் கட்டுரை அடுத்த இதழில் ஆரம்பமாகிறது

என்ன ஆச்சரியம்! கண்ணாடியில் நாற்பது வயது மதிக்கத் தக்க ஒரு ஆசாமியின் உருவம் தெரிந்தது. ராவ்பகதூர் இருபது பிராயம் பின் நோக்கிச் சென்று விட்டார். அழகான கரு நிற ரோமங்கள்; வாயில் முத்துப் போன்ற பல் வரிசை!

வலி குறையக் குறைய, உருவம் மாறிக் கொண்டே வந்தது. அத்துடன் வயதின் மதிப்பும், முப்பத்தைந்து, முப்பது, இருபத்தைந்து என்று குறைந்து கொண்டே போய் இருபதில் வந்து நின்றது. ஆஹா! என்ன வசீகரமான முகம்! ராவ்பகதூர் தமது இருபதாவது வயதில் இதே மாதிரி தானிருந்தார். கட்டுமஸ்தான முறுக்கேறிய தேகம், வழவழப்பான கன்னம்; பளபளப்பான கண்கள்; என்ன அற்புதமான மருந்து!

தட் தட் தட்......

யாரோ கதவைத் தட்டினார்கள்.

"யாரது?"

"நான் தான் மாமா" என்றது புஷ்பலதாவின் கொஞ்சும் குரல்.

மாஜி கிழவர் கதவைத் திறந்தார். புஷ்பலதா அவரை அப்படியே விழுங்கி விடுவது போல் பார்த்தாள். அவளது அழகிய முகம் நாணத்தினால் சிவந்தது. உதட்டின் கோணத்தில் ஒரு போதை தரும் புன்னகை; மீன் விழிகளிலொரு மின்வெட்டு. ராவ்பகதூர் புளகாங்கித மடைந்தார்.

"புஷ்பா!"

"என் பெயர் தங்களுக்கு எப்படித் தெரியும்?"

"சிறிது நேரத்திற்கு முன் நீதானே என்னிடம் சொன்னாய்?"

"தங்களிடமா? போதும் போங்கள் பரிகாசம். உங்கள் அப்பாவிடமல்லவா சொன்னேன்?"

"இல்லை, புஷ்பா! நான் தான் அந்த அப்பா; ராவ் பகதூர் ராமசுப்பிரமண்யம்! நான்தான் அப்போது கிழவனாயிருந்தேன். உனக்காக அசுவினிகல்பம் சாப்பிட்டுக் குமரனாக மாறினேன்."

ராவ் பகதூர் மருந்து புட்டியைக் காண்பித்து நம்ப முடியாத தமது கதையை அவளிடம் கூறி நம்ப வைத்து விட்டார்.

"தாங்கள் மீண்டும் கிழவராகி விடுவீர்களா?" என்று கேட்டாள் அந்த அழகி.

ராவ் பகதூர் கை கொட்டி நகைத்தார். வயோதிகமா? இந்த ஜன்மத்தில் இனி எனக்கு மூப்பு என்பதே கிடையாது. என் ஆயுளும் நீண்டு விட்டது!" என்றார்.

வீணாகக் கதையை வளர்ப்பானேன்? அடுத்த வாரமே மிஸ்டர் ராமசுப்பிரமண்யம் புஷ்பலதாவை மணந்தார். அவரது புனர்ஜன்மத்தின் இரகசியம், இரகசியமாகவே வைக்கப் பட்டது.

முதலில் சில நாட்கள் வாழ்க்கை இன்பமயமாகக் கழிந்தது. ஆனால் சீக்கிரத்திலேயே அவருடைய மனதில் ஏதோ வொரு குறையும் ஏக்கமும் தோன்றத் தொடங்கின. அவரது உருவம் தான் இளமை பெற்றதே யொழிய முதிர்ந்த உள்ளுணர்ச்சி யாதொரு மாறுதலு மின்றிப் பழையபடியே இருந்தது. வயதில் இருபது பிராயத்து இளைஞரான போதிலும், உலகத்தைப் பற்றிய அபிப்பிராயத்திலும் வாழ்க்கை முறையிலும் அவர் அறுபது வயதுக் கிழவர் தான்.

புஷ்பலதா ஒரு புத்தம் புதிய இள மலர். அவளது மனம் முற்றிலும் புதுமையை நாடியது. உணவிலும் உடையிலும் தினசரி வாழ்க்கையிலும் அவள் புதுமையை விரும்பினாள். அவளது வாலிப மனத்தின் வேகத்தோடு தமது நிதானப் போக்கைப் பிணைக்க முடியாமல் அவர் திணறினார். முற்றிப் பழுத்த அவரது அனுபவம் பழமையிலேயே லயித்திருந்தது. அவருக்கு இயற்கையான பிடிவாதப் போக்கு அவளுக்காகப் பழமையை விட்டுக் கொடுக்க இசைய வில்லை.

புஷ்பாவின் ஆசா பாசங்களும் குழந்தைப் பேச்சுக்களும் அவருக்குப் பேதமையாகத் தோன்றின. எடுத்ததற்கெல்லாம் அவள் 'காதல், காதல்' என்றது அவருக்கு வெறும் பிதற்றலாகப் பட்டது. அவர் வர்ணாசிரமத்தைப் பற்றிப் பேசினால், அவள் 'வெல்வெட் சோளி'யைப்பற்றிப் பேசினாள். அவர் கடவுள் என்றால் அவள் காதல் தேவதை என்றாள். அவர் ஹரி கதைக்குப் போக வேண்டு மென்றால் அவள் கடற்கரைக்குப் போக வேண்டு மென்றாள். இப்படியாகஒருவரின் மனப்போக்கு மற்றவருக்குப் பிடிக்காமல் இருந்தது.

புஷ்பா நளினமாக உடுத்தி, நிமிஷத்திற்கு நிமிஷம் முகத்திற்குச் சுகந்தப் பொடி பூசி, விசால நேத்திரங்களுக்கு அஞ்சன எல்லை தீட்டி, நிலைக் கண்ணாடியின் முன் அபிநயம் பிடித்துக் கொண்டு நின்றதைக் காண அவரால் சகிக்கவே முடியவே யில்லை.

விவகாரம் இப்படியே முற்றிக் கொண்டே போய் ஒரு நாள் வெடித்து விட்டது.

அன்று புஷ்பா சர்வாலங்கிருத பூஷிதையாக அவர் முன் வந்து காட்சி அளித்தாள்.

"என்ன ?"

"நான் சினிமாவுக்குப் போகிறேன் ?"

"தனியாகவா ?"

"இல்லை; டிரைவர் துணையோடு!"

ராவ் பகதூர் பதறினார்.

"இதோ பார், புஷ்பா! குடும்ப ஸ்திரீக்கு சினிமா என்ன வேண்டிக் கிடக்கிறது? நீ ஒழுங்காக லட்சணமாக இல்லாவிட்டால்..."

"ஒழுங்காக இல்லாமல் எப்படி இருக்கிறேனாம் ?"

"அநசூயா தேவி தோன்றிய இந்தப் பூமியில்..."

"நீங்கள் வேண்டுமானால் அத்திரி மகரிஷியா யிருங்கள். நான் அநசூயை அல்ல; அதற்கு வேறு ஆள்தான் பார்க்க வேண்டும். உங்களுடைய கட்டுக் குடுமியும் கர்நாடகப் போக்கும் எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை.

"நான் புருஷன்! அது என்னுடைய இஷ்டம் !"

"அது உங்களிஷ்டமானால் இது என்னிஷ்டம் !"

"நான் சொல்லுகிறபடி இருப்பதானால்தான் இந்த வீட்டில் இருக்கலாம்...?"

"நான் சொல்லுகிறபடி நீங்கள் திருந்துவதானால்தான் நானும் உங்களோடு குடித்தனம் பண்ண முடியும் !"

"என்ன சொன்னாய் ?" என்று கர்ஜித்துக் கொண்டே ஆவேசத்தோடு எழுந்தார் ராவ் பகதூர்.

தமிழ்நாட்டுச் சிறுகதை வானில் ஜொலிக்கும் இரு நட்சத்திரங்கள்

★★

1949-ம் வருஷம் தமிழ்நாட்டில் வெளியான சிறுகதைத் தொகுதிகளுக்குள்ளே தலை சிறந்த தென்று தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரால் பரிசளிக்கப் பெற்ற

முல்லைக் கொடியாள்

(இரண்டாம் பதிப்பு)

ஆசிரியர்: "கல்கி" அவர்கள் முன்னுரையுடன்

விலை ரூ. 3—0—0

●

ஒரே உரிமை

டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் முன்னுரையுடன்

விலை ரூ. 2—8—0

●

எழுதியவர்:
விந்தன்

★★

ஸ்டார் பிரசுரம்

சென்னை-5.

எழுந்த வேகத்தில் எதிரேயிருந்த மேஜையில் மோதிக் கொண்டார்.

கண்களைத் திறந்து பார்த்தார். எதிரே புஷ்பலதாவு மில்லை. நிலைக் கண்ணாடியில் அவரது சுருக்கம் விழுந்த முகமும்பொக்கை வாயும் பன் மடங்கு கோரமாகத் தோன்றி அவரைப் பரிகசித்தன.

"அட கடவுளே! இத்தனையும் வெறும் கனவுதானா? பிழைத்தேன்!"

இச்சமயம் வைத்தியர் வேதரத்னம் ஒரு மருந்து புட்டியுடன் உள்ளே நுழைந்தார்.

"என்னய்யா சமாசாரம்?"

"ஒரு நல்ல சமாச்சாரம். தங்களுக்காக ஓர் அருமையான காய கல்பம் தயார் செய்து கொண்டு வந்திருக்கிறேன்; ஒரே வாரத்தில்..."

ராவ்பகதூர், பல்லிருந்தால் நர நர வென்று கடித்திருப்பார்.

"ஒரே வாரத்தில் என்ன ஐயா ஆய்விடும்? என்னைக் குமரனாக்கி விடுவீரோ?"

"சந்தேகமே இல்லை; பலன் கண்ட பிறகு பணம் கொடுத்தால் போதும்."

இதற்குமேல் அவரால் தாங்க முடியவில்லை. திடீரென்று பைத்தியம் பிடித்தவர் போல் வைத்தியர் மீது பாய்ந்தார். மருந்துப் புட்டியைப் பிடுங்கி வீதியில் வீசி எறிந்தார்.

"போமய்யா வெளியே! வாலிபமும் வேண்டாம்; வயற்றெரிச்சலும் வேண்டாம்!" என்று இரைந்தார் ராவ் பகதூர்.

வைத்தியர் வேதரத்னம் வந்த வழியே வெளியேறினார்.

சென்ற அக்டோபர்மீ 11உ பண்டித ஜவாஹர்லால் நேரு, அமெரிக்காவுக்கு விஜயம் செய்தபோது, வாஷிங்டன் விமான நிலையத்தில் ஜனாதிபதி ட்ரூமன் அவரைக் குதூகலத்துடன் வரவேற்கிறார். நேருஜியுடன் அவரது சகோதரி விஜய லட்சுமி பண்டிட்டும், குமாரி இந்திரா நேருவும் விமானத்திலிருந்து இறங்கி வருகின்றனர்.


WASHINGTON MONUMENT
U. S. SUPREME
U. S. CAPITOL
TOMB OF UNKNOWN SOLDIER
CONGRESSIONAL LIBRARY





இந்தியப் பிரதமர் நியூயார்க் நகரில், தங்கியிருந்த சமயம் பல அலுவல்களைக் கவனித்தார். அவற்றில் முதன்மையானது காலஞ் சென்ற அமெரிக்க பிரஸிடெண்ட் ரூஸ்வெல்டின் சமாதிக்கு விஜயம் செய்து புஷ்ப மரியாதை செய்ததுதான். பிரதமரின் பக்கத்தில் நிற்பவர் ஸ்ரீமதி ரூஸ்வெல்ட்.

நேருஜி தமது அமெரிக்கச் சுற்றுப் பிரயாணத்தின் போது சிக்காகோ நகரத்துக்கும் விஜயம் செய்தார். சிக்காகோ நகர வீதியின் தோற்றம்.



சிக்காகோ நகரில் நேருஜி பார்வையிட்டவைகளில் விஞ்ஞானத் தொழிற் சாலைக் கண்காட்சியும் ஒன்று.

நியூயார்க் நகரில் உள்ள ஐக்ய தேசச் சபையின் தலைமைக் காரியாலயம். நேருஜிக்கு சபையின் பொதுக் காரியதரிசி இங்கே ஒரு விருந்துபசாரம் செய்தார்.



அடிமை நீக்ரோக்களுக்கு விடுதலை வாங்கித் தந்த புகழ் பெற்ற அமெரிக்க ஜனதிபதி ஆப்ரகம் லிங்கனுடைய மாபெரும் ஞாபகார்த்த மண்டபம்.



வாஷிங்டன் நகரத்திலுள்ள தேசியக் கலா மண்டபம் 150 லட்சம் டாலர் செலவில் 1941–ம் வருஷம் கட்டி முடிக்கப் பெற்ற மகோன்னதக் கட்டிடம். ஜவாஹர் கண்டு களித்த இடங்களில் இதுவும்ஒன்று.



வாஷிங்டனிலுள்ள இந்திய ஸ்தானிகராலயம். இந்திய சமூக மாணுக்கர்கள் நேருஜிக்கு இங்கே ஒரு விருந்துபசாரம் செய்தார்கள்.



வாஷிங்டன் நகரத்தி
லுள்ள சர்க்கார் காரியால
யம். இந்தியாவின்பிரதமர்
அமெரிக்க அரசாங்கக்
காரியதரிசியுடனும் பிர
தான உத்தியோகஸ்தர்
களுடனும் முக்கிய விஷ
யங்களைப் பற்றிப் பேசி
னர்.



நியூயார்க் நகரத்திலுள்ள
கொலம்பியா யூனிவர்ஸிடி
வாசக சாலைக் கட்டிடத்
தில் பண்டித நேருவுக்குச்
சென்ற அக்டோபர் மீ
17உ 'டாக்டர் ஆப் லா'
பட்டம் வழங்கப்பட்டது.





நாளைய தினம்

முகுந்தன்

முதல் அத்தியாயம்

மதுவும் கிண்ணமும்

என் விவாகத்திற்கு முதல் நாள். வீடு குதூகலமாக இருந்தது. நான் மட்டும் தனிமையில் மாடி அறையில் உட்கார்ந்திருந்தேன். அந்த வீட்டின் மாடியில்தான் நான் இருந்தேனாயினும், ஏழு சமுத்திரங்களுக்கப்பாலுள்ள தீவில் இருப்பதுபோல் இருந்தது எனக்கு. மனதில் ஒரு போராட்டம்; தணிக்க முடியாத தாபத்தின் வேகம். கடந்த கால வாழ்வின் கலப்படமான நினைவெழுச்சிகள். அந்த எண்ணங்களெல்லாம் எங்கிருந்து ஆரம்பித்தன, எப்படி வளர்ந்தன என்பது என்னாலேயே தெரிந்து கொள்ள முடியாத புதிராயிருந்தது.

ஜன்னலுக்கு எதிரில் போடப்பட்டிருந்த நாற்காலியில் நான் சாய்ந்து உட்கார்ந்திருந்தேன். விரலிடுக்கில் வைத்திருந்த சிகரெட் சாம்பராகிப் புகைந்து கொண்டிருந்தது. பக்கத்திலிருந்த மேஜைமீது ஒரு புத்தகம் திறந்தபடி கிடந்தது என் கண்களில் பட்டது. கடைசி தடவையாக, சிகரெட்டை அழுத்தமாக உறிஞ்சிக் கீழே போட்டுவிட்டு அந்தப் புத்தகத்தைக் கையிலெடுத்தேன். 'திறந்த வீடு' நல்ல கதைப் புத்தகம். எழுத்தில் கண்ணோட்டம் சென்றது. யந்திரம்போல் படிக்க ஆரம்பித்தேன். ஒவ்வொரு பக்கமாகப் புரட்டிக் கொண்டே வந்தேன். கண்கள்தான் எழுத்தைக் கிரகித்தன. மனதில் எதுவும் பதிந்ததாகத் தெரியவில்லை. முன்பக்கங்களையே மறுபடியும் புரட்டிக் கதையின் முன் நிகழ்ச்சிகளைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள நினைத்தேன். ஆனால் அந்தச் சமயம் அது வீண் முயற்சியாக எனக்குப் பட்டது. புத்தகத்தை மூடி மேஜைமீது வீசி எறிந்தேன்.

எதிரில்: வாஷிங்டன் நகரத்தின் ஆகாச மார்க்கத் தோற்றம்.

பெட்டியிலிருந்து மற்றொரு சிகரெட்டை எடுத்துக் கொளுத்தினேன். மறுபடியும் மனதில் அர்த்தமற்ற சங்கடம். அரைகுறையான சம்சயங்களெல்லாம் எழுந்தன.

'நான் பயப்படவில்லை. யாருக்காகப் பயப்பட வேண்டும்? காலையில் நிச்சயம் எனக்குக் கல்யாணம் நடந்தே தீரப் போகிறது' என்று எனக்குள்ளானே சாமாதானம் சொல்லிக் கொண்டேன்.



சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்திற்கும் என் மூளைக்குமிடையே காந்தக் கம்பியின் பிணைப்பு இருக்கும் போலிருக்கிறது; கடிகாரத்தின் மணி ஓசை என் மூளையிலிருந்தே எழுந்தது போலிருந்தது. நான் மணியைக் கணக்கிட ஆரம்பித்தேன்.

ஒன்று... இரண்டு... மூன்று ... ஏழு ... எட்டு ...!ஒன்பது ... பதினொன்று..

இன்னுமா எனக்குத்

தூக்கம் வரவில்லை? நாற்காலியிலிருந்தபடியே ஜன்னலுக்கு வெளியே பார்த்தேன். ஊரின் நடமாட்டம் ஓய்ந்து எங்கும் பேய் அமைதி குடிகொண்டிருப்பது போலிருந்தது. கீழே தாழ்வாரத்தில் நண்பர்களின் சீட்டாட்டம் பலமாக நடந்து கொண்டிருந்தது. சரியான ஜதைகள் சேர்ந்திருக்கின்றன. இரவு முழுவதும் அலுப்படையாமல் விளையாடுவார்கள். புதிய சீட்டுக்களெல்லாம் கசங்கி அழுக்கடைந்து கிழியும் வரையில் விளையாடுவார்கள். சிலருக்குச் சீட்டாட்டம் என்றால் எவ்வளவு மோகம்! ஆம், சிலருக்குப் பெண்களென்றால்......

எழுந்து ஜன்னலுக்குச் சமீபமாகப் போய் நின்றேன். என் கண் பார்வை வெளியே குழம்பி நின்ற இருளைக் கடந்து அப்பாலுள்ளவற்றைத் தெரிந்து கொள்ள நினைத்தது. சில சமயம் இந்த மாடி ஜன்னலிலிருந்தபடியே நான் பரந்து கிடக்கும் சமுத்திரத்தைப் பார்த்திருக்கிறேன். இன்று அக்கடலையும் காரிருள் விழுங்கி இருந்தது. அலைமோதலின் 'ஹோ'வென்ற பயங்கரச் சத்தம் மாத்திரம் காற்றிடையே வந்து கொண்டிருந்தது.

'சிலு சிலு' வென்ற காற்று வரப் போகிற மழைக்கு அறிகுறி என்பதை உணர்ந்தேன்.

நான் இதை உணர்ந்து கண நேரம்கூட ஆகவில்லை; அம்புச் சரம் போல் மழை சீறி வந்தது. நான் சட்டென்று ஜன்னலை மூடிவிட்டு மறுபடியும் நாற்காலியில் அமர்ந்தேன். 'சோ' வென்று பெய்த மழைச் சத்தத்தினிடையே நகர மண்டபத்தின் வயது முதிர்ந்த கடிகாரம் இன்னும் சுறுசுறுப்போடு இருப்பதுபோல் தன் பெருத்த ஓசையைக் கிளப்பிப் பன்னிரண்டு தடவை அடித்து ஓய்ந்தது. 'ஆம், பன்னிரண்டு தான்!' என்று ஆமோதிப்பது போல் எங்கள் வீட்டுக் கடிகாரமும் ஓசையிட்டு ஓய்ந்தது.

வேறு கதியில்லாமல் என் சூன்யப் பார்வை மறுபடியும் மேஜை மீது சென்றது. அச்சடிக்கப்பட்ட கல்யாண அழைப் பிதழின் மாதிரிப் பிரதி அங்கே கிடந்தது.

'**புதன்கிழமை காலை ஒன்பது மணிக்குமேல் பத்தரை மணிக்குள் மிதுன லக்னத்தில்...**' என்று தங்கரேக்கில் அச்சடிக்கப்பட்ட தமிழ் எழுத் துக்கள் கண்ணெதிரில் நர்த்தனம் புரிந்தன.

'இன்று இரவு மணி பன்னிரண்டிலிருந்து நாளைக் காலை ஒன் பதரை வரையில்—இன்னும் ஒன்பது மணி நேரந்தான்—பத் தரை மணி வரையில் என்றாலோ இன்னும் பத்தரை மணி நேரம் தான் ஓடவேண்டும்—அதாவது, நிமிஷக் கணக்கில் அறுநூற்று முப்பது நிமிஷங்கள்—இல்லை, இதோ பத்து நிமிஷம் ஓடி விட் டது; இன்னும் அறுநூற்று இருபதே நிமிஷங்கள்தான்; அதற் கப்புறம்......?'

என் தேகம் சிலிர்த்தது. நான் வீண் பிரமை கொண்ட அசடனென்று நினைக்கலாம். ஆனால் இப்பொழுது எதை நினைத் தாலும் எனக்குப் பாட்டியின் பழங்கதையைப் போலத்தான் இருக்கிறது. வாழ்க்கை நீரோட்டத்தை எதிர்த்து ஓடத்தைச் செலுத்த என் கையில் பலமில்லை. பலமிருந்தாலும் கரை எது வென்று கண்ணுக்குத் தென்படவில்லை. நாளையதினம் ஒன்பது மணிக்குமேல் சுபயோக சுபலக்னத்தில் எது நடக்கப் போகி றதோ அதுவே என் வாழ்க்கைப் படகு நிரந்தரமாகப் போய்ச் சேரும் கரையாகலாம். ஆம், அதுவாகவே இருக்கலாம். ஆனால் இந்தப் பேய் மனம் ஏன் இப்படி அல்லாடுகிறது?

கூடையைக் கவிழ்த்து மூடி வைக்கப்பட்டிருக்கும் பூனைக் குட்டியைப் போல நாற்காலியிலிருந்து எழுந்து நான் அந்த அறை யைச் சுற்றிச் சுற்றி வந்தேன்.

மழை ஊரையே ஜலப் பிரளயத்திற்குள் ஆழ்த்தி விடும் ஆவேசத்தோடு பெய்து கொண்டிருந்தது. மேல் தளத்தி லிருந்து நீருவிபோல் விழும் மழைத் தண்ணீர் யுத்த பேரிகை முழங்குவது போல ஜன்னலின் கதவுகளில் 'படபட' வென்று விழுந்து கொண்டிருந்தது.

'இப்படியே காலை முழுவதும் மழை பெய்து கொண் டிருந்தால் இந்தக் கல்யாணம் நின்று விடலாம்—அசட்டு அபிப்

பிராயம்—மழையினால் எந்தக் கல்யாணமும் தடைப்பட்டு நின்று விட்டதாக நான் கேள்விப்பட்டதே யில்லை. கல்யாணத்தின்போது மழை பெய்தால் நல்ல சகுனம் என்று சொல்லுவார்கள்—வேறு ஏதாவது நிகழ்ந்தால்—ஒருவேளை மணப் பெண் எங்கேயாவது ஓடி மறைந்து விட்டால்—அவள் ஏன் ஓடி மறைகிறாள்? அவள் தான் எப்பொழுது கழுத்தில் தாலி விழும் என்று காத்துக் கொண்டிருக்கிறாளே!'

நான் அவளை இன்று காலையில் பார்த்தேன். அவளை இருந்தாலும் இதற்கு முன் எத்தனையோ தடவை பார்த்திருக்கிறேன். இன்று பனிவாடையில் மலர்ந்த தனி ரோஜாவைப்போல அழகு அவளிடம் ஜொலித்துக் கொண்டிருந்தது.

அவள் பார்வையில் ஓர் அமைதி. இதழ்களிலோர் பெருமிதச் சிரிப்பு. இவைகளிலெல்லாம் ஏதோவொரு ஆழ்ந்த பொருளிருப்பதாகத்தான் எனக்குத் தோன்றுகிறது. ஒரு வேளை அது காதலாயிருக்கலாம்—காதலா! யாரிடம்? என்னிடமா?—அவளுக்குத் தான் காதல் பசி. ஆனால் எனக்கோ வேறொரு பசி. மூன்று காதலை ஏற்கெனவே ஜீரணம் செய்த பெரும் பசியல்லவா இது? உணர்ச்சியை உடுக்கடித்துப் பேயாக்கிக் காதலையே கபளீகரம் செய்ய வைக்கும் நிரந்தரமான பசியல்லவா இது?

இன்று காலை சாரதா—எனக்கு மனைவியாக வரக் காத்திருக்கிறாளே, அவள்தான்!—அவளை நான் இன்று புதிதாகப் பார்க்கவில்லை. ஆனால் அவளோ என்னைப் புதிதாகப் பார்க்கிறவள் போல் பார்த்தாள். அதே சமயம் அவளைப் பார்த்த என் கண்களுக்கு இன்னொரு நல்ல விருந்தும் கிடைத்தது. அந்த விருந்து அவர்கள் வீட்டு வேலைக்காரியான அமிர்தம்தான். அமிர்தம் வேலைக்காரியாக மாத்திரம் தோன்றவில்லை; சாரதாவுக்கு உற்ற தோழியாகவும் தோன்றினாள்.

"மாப்பிள்ளை ஐயா, வாங்க!" என்று அவள் என்னை உபசரித்துக் கூப்பிட்ட தோரணையைப் பார்த்தால் அவள்தான் வீட்டுக்கு எஜமானியோ என்று சந்தேகிக்கத் தோன்றியது.

அமிர்தம் நாட்டுப் புறத்துப் பெண். நல்ல அழகி. சாரதாவிடம் இல்லாத கவர்ச்சி அவளிடமிருந்தது. ஐசுவரியம் அறிவு இவைகளெல்லாம் மனித ஜாதியின் தராதரத்திற்கும் வசதிக்கும் ஏற்றாற்போல் அமையலாம். ஆனால் அழகை எங்கு வேண்டுமானாலும் பார்க்கலாம். அது உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வித்தியாசத்தையே பார்ப்பதில்லை என்பதற்கு அமிர்தம் ஒருத்தியே தக்க சான்று. அவளுடைய அழகான விழிகள் இந்த உலகத்திலுள்ள அத்தனை ஜீவராசிகளின் இருதயங்களையும் தொட்டசைத்து விடும். சிரித்துக் கொண்டே பேசும்போது முத்துக் கோத்தாற்போல் பல் வரிசை காட்சியளிக்கும். பற்பொடிகளும் பற்பசைகளும் செய்யும் வியாபாரக் கம்பெனிகள் அமிர்தம் சிரிக்கும்போது ஒரு


நியூஸ் மார்ட்
நியூஸ் மார்ட்
நியூஸ் மார்ட்
நியூஸ் மார்ட்
நியூஸ் மார்ட்
ரெஸாக்
நியூஸ் மார்ட்
ஏதோ இந்த மட்டும் தயவு பண்ணி போகக்குள்ளே மறந்துபழை பத்திரிகையை வைச்சிட்டுப் போறீங்களே, அது க்கு ரொம்ப வந்த னங்க!

புகைப்படம் எடுத்து விளம்பரம் செய்தால் போதும்; சரக்கிற்கு மதிப்பு மிஞ்சி விடும். கூந்தலை அள்ளி அனாயாசமாகச் செருகி அவள் முடி போட்டிருந்தாள். அந்த முடியிலடங்காத சில கேசப் பிரிகள் தோளில் விழுந்து புரண்டு கொண்டிருந்ததே ஒரு தனி அலங்காரமாயிருந்தது. அவள் தேகம் சிவப்பல்ல; ஆனால் கறுப்பு என்றும் தீர்மானமாகச் சொல்லி விட முடியாது. சிவப்பும் கறுப்பும் கலந்த ஒரு வசீகர நிறம். தேகத்தில் இளமையின் பூரிப்பு பொங்கி நின்றது. ரவிக்கை அணியாமல் இருந்த அவள், தன்னைப் பார்ப்பவர்களை யெல்லாம் 'தோள் கண்டார் தோளே கண்டார்' ராகச் செய்து கொண்டிருந்தாள்!

நான் ஏன் அமிர்தத்தைக் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது?—சே, ஒரு நாட்டுப் புறப் பெண்ணையா? ஏழை வேலைக் காரியையா?—நாட்டுப் புறத்துப் பெண்ணாய் இருந்தாலென்ன? ஏழை வேலைக்காரியாய் இருந்தாலென்ன? நான் ஒரு பெண்ணிட மிருந்து எதை விரும்புகிறேனோ அதை அவளால் எனக்கு அளிக்க முடியாதா?—முடியும்; ஆனால் அதற்குக் கல்யாணமென்ற சடங்கு வேண்டுமா? அவளோ எனக்கு மனைவியாக வரப்போகிற வளின் பணிப் பெண். எதிர்காலத்தில் என்றாவது ஒரு நாள் ஒரு நல்ல சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்காதா?—சீ, என்ன துணிச்சல் இந்த நெஞ்சிற்கு? இந்தத் துரோக நினைவு மனதில் எந்த விஷம் நிறைந்த இடத்திலிருந்து புகைந்து வருகிறது? இந்த மிருக இச்சை—வாழ்க்கையின் புனிதத்தைப் பொசுக்கும் நெருப் புணர்ச்சி—இதைக் கக்கும் ஹிருதயம் ராக்ஷஸ ஹிருதயத்தைவிட கொடிய ஹிருதயமல்லவா?—ஐயோ! இதுவரை நான் செய்த கொடுமைகள்......!!

மூச்சு நின்று விடும் போலிருந்தது—நடுங்கும் கைகளை மார் பில் வைத்து அழுத்திக் கொண்டேன். மழை இன்னும் ஓய வில்லை. கோரமான சத்தத்துடன் ஜன்னல் கதவுகளில் மோதிக் கொண்டுதானிருந்தது. என்னைப் போன்ற பாவாத்மாக்களை யெல்லாம் உலகில் வைக்காமல் பிரளயமாக வந்து அடித்து உருட் டிக் கொண்டு போகத்தான் இந்த மழை பெய்கிறதோ?

கல்யாணம்; விடிந்தால் வாத்திய கோஷமும் மந்திர முணுமுணுப் பும் விருந்துச் சாப்பாடும் ஊஞ்சல், நலங்கு இன்னும் எத்த னையோ சம்பிரதாயச் சடங்குகளும் ஒன்றன் பின் ஒன்றாகக் காலை நான்கு மணியிலிருந்தே ஆரம்பமாகி விடும். இவைகளையெல்லாம் நான் விரும்புகிறேனா? இல்லை. ஆனால் அவள் கட்டாயம் விரும்பு வாள். பேதைப் பெண்! என்னை எப்படி விரும்புகிறாளோ அப் படியே இந்தச் சடங்குகளையும் விரும்புவாள். இத்தனைக்கும் என்னைப் பற்றி அவளுக்குக் கொஞ்சம் தெரியும்—ஏன், நன் றாகவே தெரியும். எல்லாம் தெரிந்தும் அவள் என்னை விரும்புகிறாள். ஏன் விரும்புகிறாள்? அவள் புனிதத் தன்மையைக் காப்பாற்றிக்

பெண்கள் விரும்பும் மலர்!

பெண்கள் தங்களை எத்தனைதான் அழகுபடுத்திக் கொண்டாலும், என்னதான் மணமிக்க மலர்களைச் சூட்டிக் கொண்டாலும், அவர்களுடைய கையில் *வாடாமலர்* இல்லாத வரையில் அழகு பரிபூர்ணமாவதில்லை. அவர்களுடைய மனதிலும் திருப்தி ஏற்படுவதில்லை.

வாடாமலரில் பிரபல எழுத்தாளர்களின் சிறுகதைகளும், இரண்டு சிறந்த தொடர் கதைகளும், ஹாஸ்யத் துணுக்குகளும் வெளியாகின்றன. புஸ்தகம் ஹஸ்த பூஷணம்; வாடாமலர் பெண்களின் பூஷணம். வாடாமலரைத் தவறாமல் படிக்க வேண்டுமானால் இன்றே சந்தாவை அனுப்பி வையுங்கள்.

வருஷ சந்தா ரூ. 4-8-0

ஆறுமாத சந்தா ரூ. 2-8-0

வாடாமலர்

மாம்பலம், சென்னை - 17

கொள்வதற்காக இருக்கலாம். முதற் காதலேயே வாழ்க்கை முழுவதும் நிலைநிறுத்துவதற்காக இருக்கலாம். ஒருவருக்கு ஏற்கெனவே அர்ப்பணித்து விட்ட உள்ளத்தையும் உடலையும் வேறொருவருக்கு அர்ப்பணிக்க மனதில்லாமல் இருக்கலாம். எது எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். தாகத்தினால் நெஞ்சு வறண்டவனுக்கு மாயப் பொய்கையிலுள்ள நீர் விஷங் கலந்த நீர் என்று அதன் வாடையிலிருந்தே தெரியாதா? ஒரு வேளை விஷமாயிருந்தாலும் பாதகமில்லை; நெஞ்சு நனைந்தால் சரிதான், தாகம் தணிந்தால் சரிதான் என்ற அபிப்பிராயமாயிருக்குமோ?

ஒரே மதுதான். நிறமும் ருசியும் குணமும் ஒன்றுதான். ஆனால் அது வெவ்வேறு வகையான கிண்ணங்களில் ஊற்றி வைக்கப்படுகிறது. நிறத்திலும் உருவிலும் வெவ்வேறாகத் தோற்றமளிக்கும் அந்தக் கிண்ணங்கள் மதுவின் ருசியை வெவ்வேறாக்கி விடுகின்றன. எல்லாம் மனதில் ஏற்படும் பிரமைதானே? அப்படித்தான் பெண்களும்......

மேனகா, விஜயா, சாரதா—இவர்கள் மூவரையும் மூன்று விதமான கிண்ணங்களில் ஊற்றி வைத்த ஒரே மதுவாக என்னால் நினைக்க முடியவில்லையே, அது ஏன்?

நெடு நேரம் உட்கார்ந்திருந்ததால் என் உடம்பு சிறிது வலிப்பது போல் தோன்றியது. மெதுவாக எழுந்து கட்டிலை நெருங்கி மெத்தையை விரித்துப் படுத்துக் கொண்டு சிந்திக்கலானேன்.

முதலில் என்னைக் காதலித்தவள் சாரதாதான். அவள்தான் நாளைய தினம் எனக்கு மனைவியாக வரப்போகிறாள். ஆனால் முதலில் என் மனதைக் கவர்ந்தவள் சாரதா அல்ல; அவள் வேறொருத்தி. அவள் கைக்கு எட்டாத தூரத்திலிருக்கும் மதுக் கிண்ணம் போலிருந்தாள். சாரதாவோ என் கைக்கு எட்டும் தூரத்திலிருக்கும் மதுக் கிண்ணமாக இருந்தாள். ஆகவே, என் வறட்சியை உடனே தணித்துக் கொள்ள நான் அருகிலிருந்த கிண்ணத்தை எடுத்து மதுவைப் பருகினேன். ஆம், என்னைக் காதலித்தாள் சாரதா; ஆனால் நான் அவளைக் காதலிக்கவில்லை. இருந்தாலும் சமீபத்திலிருந்த மதுக் கிண்ணமல்லவா அவள்?

நாளைய தினம் பொழுது விடிந்தால்......பொழுது விடியாமல் இருந்து விடுமா, என்ன?

மழை ஓய்ந்தாற் போல் தெரிந்தது. ஆனால் சீறல் காற்று மாத்திரம் ஓய்ந்ததாகத் தெரியவில்லை.

'சாரதா' என்று எனக்குள் சொல்லிக் கொண்டே கண்களை மூடிக் கொண்டேன். இருளில் அவள் அழகிய உருவம் பளிச்சிட்டது. அன்றொரு நாள் ஆசையோடு எடுத்து ஒரு தடவை முகர்ந்து பார்த்துவிட்டுக் கசக்கி எறிந்த மலர் அவள்; அதற்குப் பிறகு இன்றுதான் அந்த மலரை நான் மனதால் நினைக்கிறேன்.

இரண்டாம் அத்தியாயம்

மை தீட்டிய விழிகள்

நவராத்திரித் திருவிழா குடந்தையில் விசேஷமாக இருக்கும். அப்பொழுது பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்தேன். ஒவ்வொரு வருஷமும் நவராத்திரி விடுமுறைக்கு நான் குடந்தைக்குப் போவது வழக்கம். அந்த வருஷமும் புறப்பட்டேன். என் வாழ்க்கையிலேயே அதுதான் குறிப்பிடக்கூடிய ஒரு முக்கியமான வருஷம். எனக்கு அப்பொழுது வயது இருபது அல்லது இருபத்தொன்று இருக்கலாம். எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்குத் தீவிரமாகப் படித்துக் கொண்டிருந்தேன். ஆனல், படிப்பில் கவனம் செல்லவில்லை. பிறவியில் அடைய வேண்டிய இன்பம் எதுவென்பது அப்பொழுதுதான் என் மனதில் முளைவிட்டது. நடை, உடை, பேச்சு, பார்வை இவைகளிலெல்லாம் புது உணர்ச்சியும் புது ஆர்வமும் அப்பொழுதுதான் தலையெடுத்தது. மனதில் ஒரு ஆசைத் துடிப்பும் ஏக்கமும் ஏற்பட்டது. முக்கியமாக உலகத்தில் பெண்கள் என்னைப் போன்ற ஆண்களின் வாழ்க்கையைச் சாபல்யப்படுத்தத்தான் பிறந்திருக்கிருர்கள் என்ற தீர்மானத்திற்கு நான் வந்தேன். எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் கண்களுக்கு ஆனந்தமாகவும் இன்பமாகவும் இருந்தது. ஒவ்வொரு பெண்ணின் அழகையும் உணர்ந்து ரசிக்கக் கூடிய திறமை நாளுக்கு நாள் வளர்ந்தது. ஒவ்வொரு வருஷமும் கோயில்களில் வைத்திருக்கும் கொலுப் பொம்மைகளின் அலங்காரத்தையும் அழகையும் கண்டு ஆனந்திக்கத்தான் நான் போவது வழக்கம். ஆனல், இந்த வருஷமோ அந்தத் திருவிழாக் கூட்டத்தில் நான் வேறு அழகையும் அலங்காரங்களையும் கண்டு ஆனந்திக்கலானேன்.

குடந்தையில் என் சித்தப்பா வக்கீல் தொழில் நடத்தி வந்தார். சித்தப்பாவின் பிள்ளை பாலுவிற்கு அப்பொழுது வயது பத்து. ஐந்து வயது இருக்கும்போதே அவன் ஐம்பது வயது அனுபவம் உள்ளவனைப் போலத்தான் பேசுவான். இப்பொழுது வயது பத்தாகி விட்டது. அவனுடைய பேச்சையும் அனுபவத்தையும் பற்றிச் சொல்ல வேண்டுமா?

ஒரு நாள் மாலை மணி ஐந்துக்கு மேலிருக்கும். என்னுடைய சித்தப்பா எனக்காக ஒழித்து விட்டிருந்த அறையில் நான் உட்கார்ந்திருந்தேன்.

'குடத்தை இடுப்பில் வைச்சுக்கிட்டு
குலுக்கி நடக்கணும்—கொஞ்சம்
குலுக்கி நடக்கணும்'

என்று தனக்குத் தெரிந்த சினிமாப் பாட்டு ஒன்றை வாசல் திண்ணையில் நின்று கொண்டிருந்த பாலு பாடிக்கொண்டிருந்

தான். அத்துடன் அவன் நிற்கவில்லை; அந்தப் பாட்டின் மெட்டுக்கு ஏற்றாற்போல் ஆடிக்கொண்டு மிருந்தான். நான் சட்டென்று ஜன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தேன். தெருவில் ஒரு பெண் தண்ணீர்க் குடத்துடன் போய்க்கொண்டிருந்தாள்.

"ஏய், பாலு! இதென்னடா பாட்டு?" என்றேன் கொஞ்சம் அதட்டும் தோரணையில்.

"சினிமாப் பாட்டு, அண்ணா!"

"அது சரி; திடீரென்று ஏன் இந்த ஆட்டமும் பாட்டும் கிளம்பித்துன்னு கேட்கிறேன்?"

"எதையாவது பார்த்தால்தானே அண்ணா, இந்த மாதிரி நல்ல பாட்டெல்லாம் ஞாபகத்துக்கு வருகிறது!"

எனக்கு அதற்கு மேல் அவனோடு பேசுவது சாத்தியமாகப் படவில்லை. பதிலுக்கு மெதுவாகச் சிரித்தேன்.

அன்று மாலை நானும் பாலுவும் கோயில்களைச் சுற்றிப் பார்ப்பதற்காகக் கிளம்பினோம். பாலுவின் தாயார் மனதில்லாமல் அவனை என்னுடன் அனுப்பினாள். "குழந்தையைக் கூட்டத்தில் தவற விட்டு விடாதே! கண்ட மிட்டாய்களை யெல்லாம் வாங்கிக் கொடுக்காதே!" என்று அவள் எனக்கு ஆயிரம் உபதேசங்கள் செய்து அனுப்பினாள். நான் எல்லாவற்றிற்கும் 'சரி' என்று சொன்னேன். பாலு அலட்சியமாகச் சிரித்துக் கொண்டே என்னுடன் வந்தான்.

"தெற்கு வீதியில் பெரிய ராட்டின ஊஞ்சல் போட்டிருக்கிறான்; முதலில் அதைப் போய்ப் பார்க்கலாம், அண்ணா!" என்றான் பாலு.

"ராட்டின ஊஞ்சலா? போன வருஷம்தான் அதில் ஏறி உட்கார்ந்து உனக்கு மயக்கம் வந்ததே!" என்று நான் சென்ற வருடம் நடந்ததை அவனுக்கு ஞாபகப்படுத்தினேன்.

"ஆமாம்; அப்போ நான் ரொம்பச் சின்னப் பையன். இப்போ அதற்கெல்லாம் பயப்படமாட்டேன்!" என்று சொல்லி விட்டு அவன் என்னை அலட்சியமாக ஒரு பார்வை பார்த்தான். நான் அவனுக்கு எவ்விதமான பதிலும் சொல்லவில்லை.

இருவரும் கடைவீதிப் பக்கம் வந்தோம். கடைக்குக் கடை கூட்டம் கூட்டமாக நின்று கொண்டிருந்த பெண்களைக் கண்டதும் பாலுவுக்கு என்ன தோன்றிற்றோ என்னமோ, "அண்ணா! நீ எப்போ கல்யாணம் செய்துக்கப் போறே?" என்றான்.

"இப்பொழுதுதானே எனக்கு வயது இருபது ஆகிறது? இன்னும் ஐந்தாறு வருடமாவது போக வேண்டும்" என்றேன்.

ஏனுமலே என் கன்னுக்குட்டியே எடுத்துக்கிட்டு தர மாட்டேங்கிறு னுங்க; நீங்க வந்து கொஞ்சம் விசாரிங்க. ஊட்டுக்குள்ளே தானுங்க எங்கயோ ஒளிய வச்சிருக்கான்
சரி, வா! போவோம்
ஊட்டுக்குள்ளே பூந்து சர்ச்சை போடுவுங்க. அப்ப தானுங்க கிடைக்கும்.
இதானுங்க அவன் ஊடு. கொஞ்சம் அதட்டிக் கூப்பிடுங்க. அப்பத் தான் வருவான்
ஏனுமலே ஏனுமலேயு, வெளியே வாடா
ஏண்டா இவன் கன்னுக்குட்டியே ஊட்டுலே ஒளிய வைச்சிக்கிட்டு தர மாட்டேங்கிற யாம்......
ஊம்... ஏண்டா உனக்கு இந்த திமிர்வாதம்? ஒடம்பெ புண் படுத்திக்காமெ கன்னுக்குட்டி யெ குடுத்திடு உம்!....
இல்லிங்க; நீங்களே உள்ளே வந்து பாருங்க நல்லா... இவன் அபாண்டமா சொல்றுனுங்க
நான் போயி பாத்துட்டு வாரேனுங்க உள்ளே
இதோ இருக்கு பாருங்க! நெல்லு குதிக்குள்ளே போட்டு ஒளிய வைச் சிருக்கானுங்க......
!!
?!?!
ரெஸாக்

" நீ மாத்திரம் இந்த ஊரிலேயே இருந்தா உனக்கு ரொம்ப சீக்கிரம் கல்யாணமாகி விடும், அண்ணு!" என்ருன் அவன்.

" எப்படி ?" என்று கேட்டேன்.

" இந்த ஊரில் நிறையப் பெண்களிருக்கிருர்கள் !" என்று சொல்லிவிட்டுச் சிரித்தான் அவன்.

அதற்குள் நானும் பாலுவும் ராட்டின ஊஞ்சல் இருக்கும் இடத்தை அடைந்தோம்.

அங்கே எங்களுக்கு முன்னல் மூன்று பெண்கள் வந்து நின்று கொண்டிருந்தார்கள். அந்த மூன்று பெண்களில் இடது புற மிருந்தவளுக்கு வயது பன்னிரண்டு இருக்கும். அவளுடைய மூக்கின் நுனி சிறிது தூக்கினற்போலிருந்தாலும் பார்ப்பதற்கு அழகாய்த்தானிருந்தாள். நடுவில் நின்றவள் அவளைவிட இரண்டு வயது பெரியவளாக இருக்கலாம். பருவத்தின் அழகும் வளர்ச்சியும் அப்பொழுதுதான் அவளை வந்து அடைந்து கொண்டிருந்தன. இவர்கள் இரண்டு பேரையும் மிஞ்சிவிடக்கூடிய அழகியாயிருந்தாள் வலது கோடியில் நின்றவள். அவளுக்கு வயது பதினறிலிருந்து பதினெட்டு வரை மதிப்பிடலாம். உருட்டி விழிக்கும் பெரிய கண்கள்; குறுநகை செய்யும் அதரங்கள்; அகன்ற நெற்றி; அவள் வர்ணனைக்குள் அடங்காத அழகுருவம். அவளிடமிருந்து என் கண்களைத் திருப்புவது மிகவும் கடினமாக இருந்தது.

அதுவரை ராட்டின ஊஞ்சலையே கவனித்துக் கொண்டிருந்த பாலு திடீரென்று என்னைப் பார்த்துவிட்டு, " என்ன அண்ணு! எங்கே கவனிக்கிருய் ?" என்ருன்.

" என்னைப் பற்றி உனக்கென்னடா கவலை? நீ சிறு பையனு, லக்ஷணமா ராட்டின ஊஞ்சலை வேடிக்கை பாரு !" என்றேன் நான் சிறிது ஆத்திரமும் கோபமும் அடைந்தவன் போல.

" சரி, அண்ணு!" என்று அவன் குறும்பாகச் சிரித்துவிட்டுச் சிறிது நேரம் மௌனமாக இருந்தான். பிறகு மறுபடியும் என்னைப் பார்த்து, " இந்தப் பெண்களெல்லாம் கண்ணில் மை இட்டுக் கொள்கிருர்களே, எதற்காகத் தெரியுமா, அண்ணு ?" என்று கேட்டான்.

" அவர்களுக்கு மை இட்டுக் கொள்வதில் ஒரு ஆசை—தவிர அது கண்ணுக்குக் குளிர்ச்சி...!"

பாலு கலகல வென்று சிரித்துவிட்டு உரத்த குரலில் சொன்னன் :

" கண்ணில் மை இட்டுக் கொள்வது எதற்காகத் தெரியுமா? ஆண்களை வசியம் பண்ணுவதற்கு !"

இந்த வார்த்தையைக் கேட்டதும் எனக்குத் திக்கென்றது. அந்தப் பெண்களை நிமிர்ந்து பார்ப்பதற்கே எனக்கு வெட்கமாயிருந்தது. நான் இப்படிக் குழம்பிக் கொண்டிருந்தபோது



பாலுவின் கன்னத்தில் பளிச் சென்று ஓர் அறை விழுந்தது. அந்தப் பெண்களில் வயதில் பெரியவளாய் இருந்தவள் தான் பாலுவை நெருங்கி வந்து அடித்தவள்.

"போக்கிரிப் பையன்! வாண்டு பாதிரி இருந்து கொண்டு எவ்வளவு வாய்த் துடுக்கு!" என்றுள் அவள் ஆவேசத்துடனும் ஆத்திரத் துடனும்.

"சிறு பையன் தெரியாமல் சொல்லி விட்டான்; மன்னித்து விடுங்கள்!" என்றேன் நான்.

"தண்டனை நிறைவேறிய பிறகு நீங்கள் மன்னிப்புக்கு மன்றுடுவதில் அர்த்தமில்லை. இனிமேல் இவனைத் தன் வயதிற்குத் தகுந்தாற்போல் நடந்து கொள்ளச் சொல்லுங்கள்!" என்றுள் அவள் கேலியாகச் சிரித்துக் கொண்டே.

"அவன் தன் வயதிற்குத் தகுந்தாற் போல் நடந்து கொள்ளாதது தவறுதான். அதைப் போலவே மற்றவர்களும் தாங்கள் நடந்து கொள்ளவேண்டிய முறைப்படி நடந்து கொள்ள வேண்டும். உங்களைப் போன்ற பெண்கள்......"

"என்னைப் போன்ற பெண்கள் கண்களில் மை இட்டுக் கொள்வது தவறு......?"

"மை இட்டுக் கொள்வது தவறு என்று நான் சொல்ல வரவில்லை. இவன் சிறு பையனுயிருந்தாலும், ஏதோ சிறு தவறு செய்திருந்தாலும் அதற்காகக் கன்னத்தில் அடிப்பது உங்கள் பெருமைக்குக் குறைவு. அதுவும் என்னைப் போன்ற ஒரு வாலிபனின் எதிரில் ஒரு பெண் இவ்வளவு ஆத்திரத்தைக் காண்பிப்பது அழகாகாது!"

"அது என் தவருக இருக்கலாம். ஆனல் உங்களைப் போன்ற வாலிபர்களெல்லாம், என்னைப் போன்ற பெண்களைப் பிறர் பரி

காசம் செய்வதை ரசித்து ஆனந்தமடைகிறார்களே தவிர, எங்களிடம் அனுதாபம் காட்டிப் பெண்களை இழிவு செய்கிறவர்களைக் கண்டித்துச் சீர்திருத்தம் செய்ய முற்படுவதில்லை......''

''வாலிபர்கள் பெண்களைப் பார்த்துச் செய்யும் பரிகாசத்தைப் பெரிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. அது வயது காலத்தில் தானே ஏற்படும் உணர்ச்சி. வார்த்தைகள் அப்படித்தானிருக்கும்; ஆனால் அந்தரங்கம் வேறு. அதற்கு உங்களைப்போன்ற பெண்கள் ரசிகத் தன்மையோடு பதில் சூடு கொடுக்கலாம்......''

''சரிதான்; உங்கள் பரிகாச வார்த்தைகளுக் கெல்லாம் ரசிகத் தன்மையோடு பதில் கொடுக்கப் பெண்களுக்காக ஒரு தனிக் கலாசாலை ஏற்படுத்திப் படிக்க வைக்க வேண்டியதுதான்!''

''தனிக் கலாசாலை வேண்டாம்; இப்பொழுது இருப்பவைகளே போதும். தவிர நீங்கள் எங்களைப் போன்ற வாலிபர்களோடு நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் ஏற்பட்டால்......'' என்று சொல்லி, நான் அவள் முகத்தைப் பார்த்தேன். பளிச்சுப் பளிச்சென்று எனக்குப் பதில் கொடுத்த அவள் இப்பொழுது ஏனோ பேச முடியாதவளாக இருந்தாள். மை தீட்டி அழகு படுத்தப்பட்டிருந்த அவளது நீண்ட விழிகள் நாணத்தினால் கீழ் நோக்கின. மனதில் இன்பக் கனவு போலெழுந்த புத்துணர்ச்சியால்தான் அவள் அழகிய அதரங்களில் குறுநகை மலர்ந்திருக்க வேண்டும். வெட்கத்தினால் அவள் கன்னங்கள் ரோஜா மலர்களைப் போலாயின. புருவத்தில் அரும்பிய வியர்வையை ஒரு விரலால் அவள் துடைத்துக் கொண்டாள். ஐந்து நிமிஷ நேரம் நான் அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். நாங்கள் இருவரும் ஒரு கணம் உலகையே மறந்திருந்தோம். இந்த மௌனக் காதலிலிருந்து என் பார்வை திரும்பியபோது நான் பாலுவைப் பார்த்துத் திடுக்கிட்டேன். அந்த மூன்று பெண்களில் வயதில் சிறியவளாய் இருந்த பெண் அவனுடைய தோளில் கையைப் போட்டுக் கொண்டு ராட்டின ஊஞ்சலைக் காட்டி ஏதோ சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்தாள். மற்றொரு பெண் அவர்களுக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள். அந்தப் பெண்ணிற்கும் அவனுக்கும் அதற்குள் சிநேகம் எப்படி உண்டாயிற்று?





"பாலு!" என்று அதட்டும் தோரணையில் அவனைக் கூப்பிட்டேன் நான்.

"அண்ணா, இவள் யார் தெரியுமா? சாரதா. இவளை எனக்கு ரொம்ப நாளாத் தெரியும். தினமும் நம் வீட்டுக்கு வருவாள். அம்மாவுக்குக் கூடத் தெரியும். தினமும் இவளோடு சேர்ந்துதான் நான் பள்ளிக்கூடம் போவேன்" என்றான் பாலு.

அந்தப் பெண்ணுக்கு அவனை விட இரண்டு வயது அதிகமாய் இருக்கலாம். அவனுக்கு அவள் பள்ளிக்கூட சிநேகிதியானதில் வியப்பொன்றும் இல்லை. வட்ட வடிவமான அழகிய முகம்—குறு குறுப்பான பார்வை—அந்தப்பெண் என்னை நிமிர்ந்து பார்க்க வெட்கப்பட்டாளோ, பயப்பட்டாளோ எனக்குத் தெரியாது. "அவள் பெயர் சாரதாவா! நல்ல பெயர்; அழகான பெயர்!" என்று சொல்லி விட்டு, நான் "உன் பெயரென்ன?" என்றேன் என் மீது காதல் வலை வீசிய பெண்ணைப் பார்த்து.

"என் பெயர் மேனகா! இவள் பெயர் விஜயா!" என்றாள் அவள் மற்றொரு பெண்ணைக் காட்டி.

மேனகாவை விட விஜயா இரண்டு வயது குறைந்தவள். அவளும் அழகிதான். ஆனால் மேனகாவைப் போல் பார்த்தோரை வசீகரிக்கும் தனி அழகு அவளிடம் இல்லை. வயதிலும் அழகிலும்

சாரதாவை விட விஜயாவும், விஜயாவை விட மேனகாவும் உயர்ந்த ஸ்தானத்திலிருந்தனர். சாரதாவைச் சுலபமாக மறந்து விடலாம்; ஆனால் விஜயாவை மறக்க முடியாது. விஜயாவை மறக்க நேர்ந்தாலும் என்னால் மேனகாவை மறக்கவே முடியாது.

ராட்டின ஊஞ்சல் ஒரு முறை சுற்றி ஓய்ந்தது. அதில் ஏறி ஆனந்த மடைந்த ஒரு கோஷ்டி கீழே இறங்கியது. ஊஞ்சலில் ஏறிச் சுற்றுவதற்கு ஒருவருக்கு ஓரணா கட்டணம். ஒரு ஊஞ்சல் தொட்டிலில் இரண்டு பேர் உட்காரலாம். சுற்றுகிற வேகத்தில் தலை கிறுகிறுக்கும். சமாளிக்கும் சக்தியில்லாத சிலருக்கு மயக்கம் கூட வந்து விடும்.

பாலு அந்த ஊஞ்சல் தொட்டிலில் ஏறத் துடியாய்த் துடித்தான். எனக்கு அவன் தொட்டிலில் ஏறிச் சுற்றுவதில் இஷ்டமில்லை. ஏனென்றால் அவன் தாயார் என்னிடம் எவ்வளவோ எச்சரிக்கை செய்து அவனை என்னோடு அனுப்பி இருக்கிறாள். தவிர சென்ற வருஷம் அவன் ராட்டினத் தொட்டிலில் ஏறிய பொழுது மயக்க மடைந்திருக்கிறான். ஆகவே, "வேண்டாம்; அதில் ஏறினால் உனக்கு மயக்கம் வரும்!" என்றேன்.

"மயக்கம் வராது, அண்ணா! ஆசையாயிருக்கு, அண்ணா!" என்று கெஞ்சினான்.

"அவனுக்கு மயக்கம் வராது, மாமா! நானும் அவனுக்குப் பக்கத்தில் ஏறி உட்காருகிறேன்!" என்றாள் சாரதா என்னைப் பார்த்து வெட்கத்தோடு.

"சாரதாவின் சிபார்சுக்கு மேல் என் மனது சிறிது இளகியது. அவர்கள் இருவருக்கும் இரண்டணா கொடுத்துத் தொட்டிலில் ஏற்றி விட்டேன். தொட்டில் முடுக்கி விடப்பட்டு மெதுவாகச் சுற்ற ஆரம்பித்து, கொஞ்சம் கொஞ்சமாக வேகமடைந்தது.

நான் மேனகாவிடம் நெருங்கி நின்று நெடுநாட்களாகப் பழகியவன் போல் தாராளமாகப் பேச ஆரம்பித்தேன். "உனக்கு இந்த ராட்டினத் தொட்டிலில் ஏறிச் சுற்ற ஆசையாக இருக்கிறது, இல்லையா?" என்றேன்.

அவள் 'களுக்'கென்று சிரித்தாள். விஜயாவின் காதிலும் இந்த வார்த்தை விழுந்திருக்க வேண்டும். அவளும் சிரித்தாள். "ஆசையாய்த்தான் இருக்கிறது. அதற்கெல்லாம் ஆசைப்பட்டால் சின்னக் குழந்தையாக ஆகவேண்டியதுதான்!" என்றாள்.

"சின்னக் குழந்தைகளைப் போல் நாம் சந்தோஷப்பட உரிமையில்லையா? அவர்கள் விரும்புவதை நாமும் விரும்பக் கூடாதா? குழந்தைகளைப் போல ஆனந்தப் படுவதுதான் உயர்வு. பயந்தோ, சம்சயப்பட்டோ மனதில் உள்ள ஆசையை மறைத்து வைக்கக் கூடாது. இந்தச் சுற்று ஓய்ந்தவுடன் அடுத்த தடவை நீ ஏறி உட்காரு. வாழ்க்கையில் ஒவ்வொன்றையும் அனுபவித்து விட வேண்டாமா?" என்றேன்.

மேனகா வெட்கத்துடன் சிரித்துக்கொண்டே விஜயாவைப் பார்த்தாள். அந்தச் சிரிப்பு அவள் அதரத்தில் நெளிகிறதா, அல்லது கண்களில் மின்னுகிறதா என்று என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை. "அவளும் உன்னோடு வருவாள். இரண்டு பேரும்..." என்று நான் சொல்லி முடிப்பதற்குள் விஜயா இடை மறித்து, "இல்லை; நான் வரவில்லை. எனக்கு மயக்கம் வந்து விடும்" என்றாள்.

"மயக்கம் வருமா?...உனக்கு வந்தாலும் வரும். ஆனால் மேனகாவுக்கு மயக்கம் வராது!" என்றேன் நான் மேனகாவைப் பார்த்து.

அவள் "மயக்கம் வராது; ஆனால்..." என்று இழுத்தாள்.

"துணையில்லையென்று யோசிக்கிறாயா? பயப்படாதே; நான் வேண்டுமானால் வருகிறேன்!" என்றேன் நான்.

இவ்வளவு துணிச்சலாக அவளிடம் நான் வார்த்தைசொன்ன தற்குக் காரணம் அவள் மனதைச் சரியாகத் தெரிந்து கொண்டு விட்டோம் என்ற தைரியம்தான். தவிர அவளுக்கு ராட்டின ஊஞ்சலில் ஏறிச் சுற்ற வேண்டுமென்ற ஆசை நெடுநாளாய் இருக்க வேண்டுமென்றும் நான் ஊகித்திருந்தேன்.

அவள் மௌனமாக நின்று கொண்டிருந்தாள். ராட்டின ஊஞ்சலில் சுற்ற வேண்டுமென்ற ஆசை ஒரு புறமும், என்னோடு சேர்ந்து உட்காருவதா என்ற கூச்சம் ஒரு புறமும், என் வார்த் தையை எப்படித் தட்டிக் கழிப்பது என்ற சங்கடம் ஒருபுறமும் அவளை வாட்டியிருக்க வேண்டும். அவள் குழம்பியபடி நின்றாள்.

ராட்டின ஊஞ்சல் சுற்றி ஓய்ந்தது; பாலுவும் சாரதாவும் குதூகலமாகக் கீழே இறங்கினர். அவனுக்கு மயக்கம் ஏற்படாத தில் எனக்கு மன ஆறுதல் ஏற்பட்டது. நான் இரண்டணாவைக் கொடுத்து விட்டு மேனகாவைப் பார்த்து, "வா!" என்பது போல் தலையை ஆட்டிக் கூப்பிட்டேன். அவள் கூச்சத்தோடு நடந்து வந்து ஒரு ஊஞ்சலுக்குச் சமீபமாக நின்றாள். "ஏறி உட் காரு!" என்றேன்; உட்கார்ந்தாள். அவளுக்குப் பக்கத்திலிருந்த இடத்தில் நான் ஏறி உட்கார்ந்தேன். எங்கள் இருவர் தோள்களும் உராய்ந்தன. உட்காருவதற்கும் சாய்ந்து கொள்வதற்கும் வசதி யாகத் தொட்டிலில் மெத்தை போட்டிருந்தது. மயக்கம் வரும் போலிருந்தாலும் விழாமலிருப்பதற்காகப் பக்கத்தில் அணைப்புகள் இருந்தன. பக்கத்திற்கொருவனாக நின்று கைப்பிடிச் சக்கரத்தைச்



என்ன! என்ன!!
என்ன!!!...
..வசந்த ருதுவோ?
என பரவசமடையச்
செய்யும்
மலர்ந்த மலர்களின்
மனதை மயக்கும்
மணம் கொண்டது.
உபயோகிக்க
உபயோகிக்க
உங்கள்
உள்ளம்
உவக்கும்
நீபா
ஹேர் ஆயில்
கங்கா ஓர்க்ஸ்
அடையார்
சென்னை.. ௨௦.

சுற்றினார்கள். முதலில் ஊஞ்சல் மெதுவாகச் சுற்ற ஆரம்பித்தது. பாலு வெளியே நின்று கை தட்டிச் சிரிக்க ஆரம்பித்தான். நான் மேனகாவின் முகத்தைப் பார்த்தேன். வெட்கத்தினால் அவள் முகம் இளஞ் சிவப்பாகி இருந்தது. முகமெங்கும் பனித்துளிபோல் வியர்வை அரும்பி யிருந்தது. ஊஞ்சல் வேகமாகச் சுற்றி உச்ச நிலையை அடைந்ததும் என் தலை கிறுகிறுவென்று சுற்றியது. மூளையே வேகமாகச் சுழல்வது போல் தோன்றியது. மேனகாவின் கரம் என் தோளைக் கெட்டியாகப் பிடித்தது. அவள் ஏதோ சொல்லுவது போலும், ஆனால் அந்த வேகத்தில் ஒன்றையும் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை போலும் இருந்தது. என் தோள் மீது அவள் தலையைச் சாய்த்துக் கொண்டாள். நான் அவளை அணைத்துக் கொண்டேன். அவள் தேகம் நடுங்கிற்று.

ஊஞ்சலின் வேகம் கொஞ்சம் கொஞ்சமாக அடங்கியது. அவளை அணைத்திருந்த கைகளை மெதுவாக எடுத்துவிட்டு நான் அவள் முகத்தைத் தூக்கினேன். அவள் கண்கள் மயக்கத்தினால் மூடியிருந்தன. முகமும் தோள்களும் வியர்வையினால் நனைந்திருந்தன. அழகாகப் படிய வாரி விடப்பட்டிருந்த கேசம் கலைந்து நெற்றியில் விழுந்திருந்தது. புடவைத் தலைப்பு அவளை யறியாமல் தோளிலிருந்து சரிந்திருந்தது.

அவள் பயக்கமாய் இருப்பதைக் கண்டு ராட்டினக்காரன் தண்ணீர்க் குவளையுடன் ஓடி வந்தான். “எனக்குத் தெரியும்; இப்படித் தைரியமில்லாத பெண்ணை யெல்லாம் ஊஞ்சலிலே உட்கார வைக்கக் கூடாதென்று!” என்று அவன் சொல்லிக் கொண்டே அவள் முகத்தில் தண்ணீரைத் தெளித்தான்.

பாவம், அவனுக்கு என்ன தெரியும் என் விருப்பம்? அவனுக்கு வந்த மயக்கம் சிறிது நேரத்தில் தெளிந்து விடும். ஆனால் என் காதல் மயக்கம் தெளிவது எப்போது?

(தொடரும்)

சிறுவர்கள் சித்திரக்கதைப் புத்தகம்
பின் பக்கம் அட்டையில் ஸ்கேல் இருக்கிறது

வாடாமலர் பதிப்பகம் மாம்பலம்... சென்னை. 17.

பாஞ்சாலி சபதம்

"துஷ்யந்தன்"

பச்சென்று பரந்திருக்கும் வயல்களுக் கப்பால் தெரிகிறதே திரௌபதியம்மன் கோவில், அதற்குப் பக்கத்தில் ஒரு பெரிய மைதானம் இருக்கிறது. அங்கே தான் முன்பு அர்ஜுனனுக்கும் துரோபதைக்கும் சண்டை நடந்தது. என் அப்படிப் பார்க்கிறீர்கள்? வியப்பாயிருக்கிறதா? பாரதம் ஒன்றும் அப்படி மாறிப் போய்விடவில்லை. சும்மா இப்படி என்னுடன் வாருங்கள்.

சரி; திரௌபதியம்மன் கோவில் வாசலில் பார்த்தீர்களா? 'ஒன்றையும் காணோமே, கொழுத்துப் போன இரண்டு ஆடுகள் தானே இருக்கின்றன' என்று சலிப்போடு சொல்கிறீர்களோ? அவசரப்படாதீர்கள். அந்த ஆடுகள் தான் அர்ஜுனனும் துரோபதையும். 'அட! இதற்குத் தானா இவ்வளவு ஆர்ப்பாட்டம்' என்று சிரிக்கிறீர்களா? உங்களுக்கு விஷயம் தெரியாது போலிருக்கிறது.

முல்லைத் தோட்டம் என்ற இந்தக் கிராமத்தின் சரித்திரத்தில் பிரசித்தி பெற்றது அர்ஜுனன் துரோபதை இருவருக்கும் நடந்த சண்டை தான். சாதாரணமான சண்டையா அது? கிராமமே அப்படியே ஆவலோடு அதன் முடிவை எதிர்பார்த்து நின்றது அந்தச் சமயத்தில். என் தெரியுமா? பாஞ்சாலியின் வாழ்க்கையை நிர்ணயிக்கும் மகத்தான பொறுப்பு இந்த ஆட்டுச் சண்டையின் முடிவில் தான் இருந்தது. அவிழ்ந்த கூந்தலை அள்ளி முடியாமல் காத்திருந்தாள் பாஞ்சாலி.

அப்பொழுது முத்து வீரன் மகள் பாஞ்சாலி முல்லைத் தோட்டத்தின் பேரழகியாக விளங்கினாள். அவள் அழகின் காரணமாக முல்லைத் தொட்டம், அங்கிருந்த துரோபதையம்மன் கோவில், கோவில் பூசாரியான அவள் அப்பன் முத்துவீரன், அவள் வளர்த்து வந்த ஆடு எல்லாமே ரொம்பப் பிரசித்தம் அந்தச் சுற்றுப்புறக் கிராமங்களில். பாஞ்சாலி என்ற பெயர் கேட்டால் அந்தப் பக்கத்து வாலிபர்கள் மட்டுமல்ல, பறந்து போகும் பச்சைக் கிளி கூட சற்றுத் தயங்கித் தான் போகும். அவளிடம் அத்தனை வசீகரமும் அழகும் இருந்தது.

அப்படிப் பட்டவளிடம் இருந்ததாலோ, அல்லது நிஜமாகவே தன் சொந்த பலத்தாலோ, எப்படியோ துரோபதையும் ரொம்பப் பெயர் பெற்று விட்டது. வழக்கமாக ஆட்டுக் கிடாக்களே சண்டைக்கு விடப்படும். அதற்கு மாறாகக் கிடாரியான துரோபதையை சண்டைக்குப் பழக்கி வைத்து எத்தனையோ கிடாக்களை அது ஜயிக்கும்படியும் செய்தது பாஞ்சாலியின் சாமர்த்தியம். துரோபதையைச் சண்டை

யில் ஜயிக்க அந்தப் பக்கத்தில் ஒரு ஆட்டுக் கிடாவாலும் முடியவில்லே. பாஞ்சாலி எப்படி தனிக் காட்டு ராணியாகச் சுற்றி வந்தாளோ அதே போல துரோபதையும் சுற்றி வந்தது.

வருஷந்தோறும் திரௌபதியம்மன் கோவில் உற்சவம் பிரமாதமாக நடக்கும். இந்தச் சமயத்தில் தான் ஆட்டுப் பந்தயம் வைப்பது வழக்கம். அந்த வருஷமும் உற்சவம் நெருங்கிக் கொண்டிருந்தது. பஞ்சாலி, கோவில் வாசலில் உட்கார்ந்தபடியே துரோபதையுடன் கொஞ்சிக் கொண்டிருப்பாள். பாஞ்சாலியின் அழகைப் பார்ப்போர் சற்றே தயங்கி நிற்பார்கள்.

சிலர் ''பாத்தயா, அந்தக் குட்டியை? கோவில்மாடு மாதிரியிருக்காள். அப்பன் அப்படி வளர்த்து விட்டிருக்கான். போதாதத்துக்கு ஒரு பொட்டை ஆட்டை வேறே வளர்த்து சண்டைக்கு விடரு. என்னமோ காலம் கெட்டுக் கிடக்கு'' என்று புலம்பி விட்டுப் போவர். வேறொன்றும் விசேஷமில்லே. போன வருஷம் அவர்கள் சண்டைக்கிடா துரோபதையிடம் தோற்றுப் போயிருக்கும், அல்லது அழகி பாஞ்சாலி இந்த ஆசாமிகளில் எவனையாவது கல்யாணம் செய்து கொள்ள மாட்டேனென்று சொல்லியிருப்பாள்!

இதெல்லாம் பூசாரிக்கும் தெரியும். அவன் என்ன செய்வான்? ஒரே பெண்; செல்லமாக வளர்ந்தவள். அவனுக்குத் தெரிந்த வரையில் அவளுக்கேற்றவன் ஒருவன் கூட இல்லே. இருந்தாலும் இப்படியே கன்னியாகவே அவள் வாழ் நாளெல்லாம் கழித்து விட முடியுமா? வழக்கமாக அப்பன் ஒருவனைப் பார்த்து இவனைத்

தான் கூட்டிக் கொள்ள வேண்டுமென்று பெண்ணைக் கட்டாயப் படுத்துவதும் அவள் மாட்டேனென்று சொல்லி வேறொருத்தனைத் தேடுவதும் உண்டு. பாஞ்சாலியின் விஷயத்தில் இம்மாதிரியெல்லாம் ஏற்படவில்லை.



பூசாரி ரொம்பவும் நல்லவன்; பெண் மனசின் படியே விட்டு விட்டான். ஆனால், இந்த வருஷம் அவனுக்கு உடம்பு அவ்வளவாகச் சரியில்லை. உற்சவம் நெருங்க நெருங்க அவனுக்கு என்னவோ பாஞ்சாலியின் கவலைதான் அதிகரித்தது எப்படியாவது இந்த வருஷத்தில் ஒரு வழி ஏற்படாதா என்று நினைத்தான். ஒரு நாள் மெதுவாகப் பாஞ்சாலியிடம் இதைப் பற்றிப் பேச்சும் கொடுத்துப் பார்த்தான்.

வழக்கமாக அலட்சியப் புன்னகையுடன் ஓடிப் போகும் பாஞ்சாலி கூடச் சற்றுக் கவனமாகவே தகப்பன் வார்த்தைகளை உற்றுக் கேட்டாள். சிறிது நேரம் என்னமோ யோசனையிலிருந்தவள் பக்கத்திலிருந்த துரோபதையைப் பார்த்ததும் சட்டென ஒரு முடிவைச் சொல்லி விட்டாள்.

"ஆமாம்; என் துரோபதையை யாருடைய சண்டைக் கிடா ஜயிக்கிறதோ அவனையே கல்யாணம் செய்து கொள்வேன்" என்றாள். முதலில் பூசாரிக்கு இது மிகவும் வேடிக்கையாகப் பட்டது.

"நல்ல பெண்ணம்மா நீ! கல்யாணத்தை யெல்லாம் இப்படியா விளையாட்டு விஷயமா முடிவு கட்டுவாங்க? நல்லா தீர்க்கமா யோசிச்சுச் சொல்லம்மா" என்று சொன்னான்.

ஆனால் பாஞ்சாலியோ சிரித்துக் கொண்டே கண்டிப்பாகச்

சொல்லி விட்டாள். "நான் சொன்னால் சொன்னது தான். ஆமாம்; இந்த வருஷம் கோவில் உற்சவத்திலே ஆட்டுச் சண்டையிலே யார் கிடா என் துரோபதையை ஜயிக்கிறதோ அவனுக்குத் தான் என் கழுத்தைக் காட்டுவேன். இது திரௌபதியம்மன் சாட்சியா சொல்றது."

பூசாரி சற்றே திடுக்கிட்டாலும் பின்னால் அம்மன் விட்ட வழியாகட்டும் என்று இருந்து விட்டான்.

2

இவ் விஷயம் காற்றிலே பறந்தது. ஊரிலிருந்த அத்தனை பேரும் ஆளுக் கொரு கிடாவைத் தயார் செய்தார்கள். ஆசை விடுகிறதா? அதுவும் பாஞ்சாலி போன்ற பெண் கிடைப்பதாயிருந்தால் ஆட்டுக்கிடா என்ன? இந்திரனுடைய வெள்ளை யானை ஐராவதத்தையே வேண்டுமானாலும் கொண்டு வரலாமே! பக்கத்து கிராமங்களிலும் இதுவே பேச்சு. எங்கிருந்தெல்லாமோ ஆட்டுக் கிடாக்கள் வந்து சேர்ந்தன. திரௌபதியம்மன் கோவில் உற்சவத்தை எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டே நாளை எண்ணி வந்தார்கள். அதிருஷ்டம் சண்டைக் கிடாக்களுக்கு! நன்றாகத் தின்று கொழுத்து வந்தன அவை. பாஞ்சாலியை அவை மனமார வாழ்த்தியிருக்க வேண்டும்!



"என்ன ஸார்! நான் தாடி வைத்திருக்கேன்னு பரிகாசம் பண்றயளாமே? அறிவாளிகளெல்லாம் தாடி வளர்க்கிறார்களே, ஸார்!"
"அது சரிதான் ஓய்! ஆனால் நீர் எதுக்கு தாடி வளர்க்கிறீர் என்று தானே கேட்கிறேன்"

ஆடு வளர்த்த எண்ணற்ற வாலிபர்களின் கருத்தெல்லாம் பாஞ்சாலி மீது பதிந்திருக்க, பாஞ்சாலி மட்டும் இவர்களை யெல்லாம் லட்சியம் செய்ய வில்லை. இந்தச் சமயத்திலே தான் 'பட்டாளத்தான்' என்ற பெயரோடு வந்து சேர்ந்தான் சாக்கோட்டை சரவணன். அவனுக்குப் பாஞ்சாலியைச் சிறு வயதிலிருந்தே தெரியும். இப்போது அவளைப் பார்த்ததும் அவனுக்கு அந்தச் சின்ன வயசு நினைவெல்லாம் வந்தது. அவள் சபதத்தைப் பற்றியும் கேள்விப் பட்டான். ஆனால் போர் முனையிலிருந்து வந்தவனுக்கு இந்த ஆட்டுச் சண்டை விளையாட்டாகவே தோன்றியது. 'இதை வைத்து ஒரு கல்யாணத்தை முடிவு செய்வதாவது?' என்று நகைத்து விட்டுப் பாஞ்சாலியை நேரில் கண்டு பேச அவள் இருக்மிடத்துக்குப் புறப்பட்டான்.

வழக்கமாக உட்கார்ந்திருக்கும் இடத்திலே தான் பாஞ்சாலீ இருந்தாள். துரோபதையும் பக்கத்தில் நின்றது. சரவணன் தூரத்தில் வரும்போதே பார்த்து விட்டாள்.

பாஞ்சாலி. எத்தனையோ நாட்களுக்குப் பிறகு பார்த்ததாலோ அல்லது அவனது அழகான தேகக் கட்டாலோ அவளுக்கு என்றுமில்லாத ஒரு வகை உணர்ச்சி தோன்றியது. நாணம் அவளை அப்போது தான் தேடி வந்தது. இருந்தாலும் கம்பீரமாகவே அவனை வரவேற்றாள். என்னவெல்லாமோ பேசி விட்டு அவன் மெதுவாக அவளுடைய சபதத்தைப் பற்றியும் பிரஸ்தாபித்தான்.

தனக்கே உரித்தான முல்லைச் சிரிப்போடு அதை ஊர்ஜிதம் செய்தாள் பாஞ்சாலி. சரவணனுக்கு இது கொஞ்சம் நெஞ்சைச் சுட்டது. தன்னைப் பார்த்த பிறகாவது அவள் இந்த விஷயத்தில் வேறு முடிவுக்கு வந்து விடுவாள் என்று தான் அவன் நினைத்திருந்தான். மறுபடியும் அவள் விடாப்பிடியாக இருக்கவே மீண்டும் பேச்சுக் கொடுத்தான்.

"ஆமா, பாஞ்சாலி! உன் மனசுக்குப் பிடிக்காத ஒரு காலிப் பயலின் ஆடு துரோபதையை ஜயிச்சுடுச்சுன்னு வச்சுக்குவோம். அப்போது நீ அவனைத் தான் கட்டிக்குவயா? இதென்ன மடத்தனமால்ல இருக்குது. என்னமோ......" என்று இழுத்தான்.

பாஞ்சாலி சட்டென்று சொன்னாள்: "அதென்னமோ, துரோபதையம்மன் சாட்சியா சபதம் செஞ்சுப் போட்டேன். இனிமேல் மாற முடியாது. அம்மன் விட்ட வழியாகட்டும் போ!"

சரவணன் அதற்கு மேல் அங்கு நிற்கவில்லை. எழுந்து வேகமாகப் போய் விட்டான். அவனுடைய உருவம் நிழலுருவாகி மறையும் வரையில் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள் பாஞ்சாலி. பிறகு ஒரு பெரு மூச்சு விட்டு துரோபதையை அணைத்துக்கொண்டாள். அவளுடைய கண்களிலிருந்து என்று மில்லாதபடி நீர்த்துளிகள் வந்து துரோபதையைக் குளிப்பாட்டி வைத்தன.

3

உற்சவத்துக்கு இன்னும் பத்து நாட்கள் தானிருந்தன. ஏற்பாடுகளெல்லாம் இந்த வருஷம் ரொம்பப் பிரமாதமாகவே இருந்தன.

அதிலும் மைதானத்தில் நடக்கப் போகும் ஆட்டுச் சண்டைக்காக எத்தனை முன்னேற்பாடுகள் தெரியுமா? இதற்காக ஒரு தனிப் பஞ்சாயத்தே நியமிக்கப் பட்டது. வரிசையாகப் போட்டியில் கலந்து கொள்ளப் போகும் ஆடுகளை ஏற்பாடு செய்திருந்தார்கள். ஒன்றா இரண்டா, உடனே தீர்த்து விட! அப்படியும் என் ஆடு முதலில் சண்டையிடும் என்று எத்தனையோ பேர் வாதித்தார்கள். இதையெல்லாம் சமாளிக்கத் தான் தனிப் பஞ்சாயத்து வேண்டியிருந்தது. நடுவில் வேறொரு சந்தேகம் எழுந்தது. முதலில் ஒருவன் ஆடு துரோபதையை ஜயித்து விட்டால், உடனே முடிவு தெரிவிக்கப் படுமா? அப்படியானல் இன்னும் சண்டை போடக் காத்திருக்கும் ஆடுகளின் கதி என்ன? அவைகளில் ஏதாவது ஒரு கால் துரோபதையை ஜயிக்கலாமல்லவா? சண்டையே போடாமல் எப்படி முடிவு செய்யலாம்?

இந்தப் பிரச்னையைத் தீர்க்க வேறொரு ஏற்பாடும் செய்தார்கள். அப்படி ஒருக்கால் முன்னல் ஒரு ஆடு ஜயித்தால் அந்த ஆட்டை ஜயிக்கும் ஆட்டைத் தான் வெற்றி பெற்றதாகச் சொல்ல முடியும்

என்று தீர்மானித்தார்கள். இப்படியெல்லாம் கிராமம் முழுதுமே மூளையைக் குழப்பிக் கொண்டிருக்கும் போது சரவணன் அங்கே இல்லை. அன்று ஊரைவிட்டுப் போனவன் திரும்பவே இல்லை.

பத்து நாட்களும் ஓடிப் போய் விட்டன. உற்சவம் ஆரம்பித்தது சண்டையுடன். ஆமாம்; ஆட்டுச் சண்டை தான். பஞ்சாயத்தார் முதலில் வந்து உட்கார்ந்து விட்டார்கள். அவர்கள் கணக்குப்படி துரோபதையுடன் எல்லா ஆடுகளும் சண்டையிட ஏழு நாட்கள் வேண்டியிருந்தன.

சுமார் நான்கைந்து கிராமத்து மக்கள் அங்கே கூடியிருந்தனர். மைதானத்தில் இடமே கிடையாது. மரம், கோபுரம் எல்லாம் மனிதர்களைத்தான் தாங்கி நின்றன. துரோபதையம்மனை மனமாரப் பிரார்த்தனை செய்து விட்டுப் பாஞ்சாலி அங்கு வந்து சேர்ந்தாள். அழகான மாலையுடன் நின்றது துரோபதை. பெண்மையின் அழகோடு மிடுக்கும் கம்பீரமும் சேர்ந்து அதை உயர்த்தி விட்டன. எல்லோரும் அதன் வெற்றியைப் பற்றிச் சந்தேகம் கொள்ள முடியாமல் இருந்தது அதன் பார்வை. அதை ஒரு தடவை தட்டிக் கொடுத்து விட்டுச் சுற்றிலும் ஒரு முறை பார்த்தாள் பாஞ்சாலி. ஆனால், அவள் எதிர்பார்த்த அழகனை அங்கே காணவில்லை. சரவணன் வரவேயில்லை.

ஆரம்பித்தார்கள்; ஒன்று இரண்டு....மூன்று....ஊஹூம்;... ஒரு ஆடும் துரோபதையை ஜயிக்கவில்லை. அன்று பொழுது கழிந்து விட்டது. மறு நாள் தான் கூட்டம் கலைந்தது. துரோபதையை அழைத்துக் கொண்டு கோவிலுக்குப் போனாள் பாஞ்சாலி. அவள் இப்போது உற்சாகத்துடன் இல்லை. இன்று என்னமோ ஜயம் தான்! நாளைக்கு?

என்றுமே இல்லாதபடி அவளை ஒரு திகில் பற்றிக் கொண்டது. ஒரு கால் நாளைக்கு யாருடைய ஆடாவது துரோபதையை ஜயித்து விட்டால்...! நினைக்கவே பயமாயிருந்தது அவளுக்கு. அதுவும் அந்த முனியாண்டியின் ஆடு, இல்லாவிட்டால் ஆலைக்காரக் கண்ணன் சுருட்டை ஆடு எதாவது ஜயித்தால்! அந்தப் பாவிகளைப் பற்றி நினைத்தாலே அவளுக்குக் குலை நடுக்க மெடுத்தது. ஐயையோ! கொழுத்துப் போய் இப்படியும் சபதம் செய்யலாமா? அவளுக்கு அழுது விடலாம் போல் இருந்தது. இடையிடையே சரவணன் உருவம் வந்து நின்று நெஞ்சைக் கலக்கும். அவன் எங்கே? அவன் எங்கிருந்தாவது ஒரு ஆட்டைக்கொண்டு வந்து, அந்த ஆடும் ஜயித்து விட்டால்! இது கூட நடக்குமா?

இப்படிப் பாஞ்சாலி துடித்துக் கொண்டிருக்கும் போது, வெகு தூரத்தில், எத்தனையோ மைல்களுக்கப்பால் சரவணன் ஒரு சண்டைக் கிடாவை விலை பேசிக் கொண்டிருந்தான். எப்படியாவது ஒரு நல்ல அழகான ஆட்டைக் கொண்டு வர வேண்டுமென்பது அவன் முடிவு. சண்டையில் ஜயிக்க அழகு என்னத்திற்கு? அங்கே தானிருந்தது விஷயம். அவனுக்கு எப்படியோ ஒரு புது நம்பிக்கையிருந்தது. பாஞ்சாலியின் ஆடு கிடேரி தானே! என்ன தான் சண்டையிட்டாலும் அழகும் ஆண்மையும் இருந்தால் ஒரு கிடா

வைக் கண்டு அது மயங்கத்தான் செய்யும் என்று முடிவு கட்டி விட்டான். வெறும் முரட்டுக் கிடாக்களைத் தான் அது பார்த்திருந்தது. நிச்சயமாக அவைகளைப் பிடிக்காது துரோபதைக்கு. ஆகவே சரவணன் அலைந்து தேடிக் கடைசியில் ஒரு கிடாவைப் பிடித்து விட்டான். நல்ல உயரம். கவர்ச்சியான தோற்றம். ஜோரான கொம்புகள். சண்டையிலும் நல்ல பழக்கம். இது போதாதா? உடனே விலை பேசி வாங்கிப் பிடித்துக் கொண்டு வேகமாகத் திருப்பினான்.

உற்சவத்தின் மூன்றாம் நாள் தான் அவன் வந்தான்.

அவனைக் கண்டதும் அங்கு ஒரு பரபரப்பு ஏற்பட்டது. எல்லோருடைய கண்களும் அவனை நோக்கித் திரும்பின. அவன் கொண்டு வந்திருந்த ஆட்டைப் பார்த்ததும் அவர்கள் உற்சாகம் எல்லை கடந்து விட்டது. சரிதான்; 'துரோபதை தோற்றது' என்று முடிவு செய்து விட்டார்கள். அன்று வழக்கமாக நடக்க வேண்டிய போட்டிகள் முடிந்தவுடன் சரவணன் நேரே பஞ்சாயத்தாரிடம் போய் தன் ஆட்டின் பெயரைப் பதிவு செய்தான். அர்ஜுனன் என்று அவன் சொன்னதுமே அவர்களுக்கெல்லாம் சிரிப்பு வந்து விட்டது. "சரிதான்; துரோபதையின் கொட்டத்தை அடக்க வந்த அர்ஜுனனுக்கும்!" என்று சொல்லி அதைத் தட்டிக் கொடுத்தார்கள்.

இவர்களெல்லாம் இப்படி முடிவு செய்து கொண்டிருக்கும் போது கோவில் வாசலில் பாஞ்சாலி துரோபதையுடன் கொஞ்சிக் கொண்டிருந்தாள். அன்று சரவணனைக் கண்டதுமே அவள் கண்கள் பொல பொல வென்று கண்ணீர் உகுத்தன. காளியம்மன் கடைசியாக அவளுடைய பிரார்த்தனைக்கு இணங்கிவிட்டாள் என்று சந்தோஷப் பட்டாள்.

4

பஞ்சாயத்தாரிடமிருந்து நேரே சரவணன் பாஞ்சாலியிடம் தான் வந்தான்

"பாஞ்சாலி! உன் துரோபதைக்கு ஓர் அர்ஜுனன் கொண்டு வந்திருக்கேன், பார்த்தாயா? பேசாமல் இது ரெண்டையும் சேர்த்து விட்டுடுவோம்" என்று சொன்னவன் தன் ஆட்டையும் கோவில் பக்கத்திலேயே விட்டுப் போய் விட்டான். அவன் எண்ணமெல்லாம் துரோபதையை அர்ஜுனன் எப்படியாவது வசியப்படுத்த வேண்டும் என்பது தான்.

அவன் போன பிறகு பாஞ்சாலி வெகு நேரம் வரை மைதானத்திலிருந்த ஒரு கல்லின்மேல் உட்கார்ந்து என்னவெல்லாமோ யோசனை செய்து கொண்டிருந்தாள். துரோபதையை இந்த ஆடும் ஜயிக்க முடியா விட்டால்? சே, என்ன மடத்தனமான சபதம்!...ஒரு கால் அது ஜயித்து விட்டால்? பிறகு சரவணன் அவளுடையவன்... அடடா...! இப்படி யெல்லாம் பயமும் சந்தோஷமும் மாறி மாறி அவளை ஆட் கொண்டதில் நேரம் போனதே தெரியாமல் உட்கார்ந்திருந்தாள்.

பிறகு அடுத்த நாள் சண்டையின் முடிவு தன் வாழ்க்கையை நிர்ணயித்து விடும் என்ற நம்பிக்கையில் கொஞ்சம் மன ஆறுதல் ஏற்பட்டது. நம்பிக்கையுடன் எழுந்து படுக்கப் போனாள்.

"ஏண்டி நான் கதை எழுதிண்டிருக்கும் போது தொந்தரவு பண்ணக்கூடா துன்னு சொல்லியிருக்கேனு, இல்லையோ? கோபம் வந்ததுன்னு பார்; கட்டையை எடுத்துப் பிளந்துடுவேன்."

"இதேதடி காலம்! ஒரு ஆளைக் கூப்பிட்டு விறகுக்கட்டையைக் கொஞ்சம் உடைத்துக் கொடுக்கச் சொல்லுங்கன்னு நீங்களே உடைத்துத் தரேங்கறீளே! ரொம்ப சரி; உடைத்துத் தாருங்கோ காரியம் முடிந்தால் சரிதான்."

அடுத்த நாள்.

எல்லோருமே கொஞ்சம் பரபரப்புடனிருந்தனர். மைதானத்தின் நடுவில் இரண்டு ஆடுகளும் வந்து நின்ற போது எல்லோரும் 'சரியான ஜோடி' என்று கூறினர்களே யொழிய சண்டைக்கு வந்த ஆடுகளாயிற்றே, எது ஜயிக்கும் என்பதைப் பற்றி ஒருவரும் கவலைப்படவில்லை. நிஜமாகவே இரண்டும் அத்தனை பொருத்தமான ஜோடியாயிருந்தன. பிறகு சண்டையை ஆரம்பிக்கலாமென்று பஞ்சாயத்தார் அறிவித்ததும் தான் எல்லோருக்குமே விழிப்பு ஏற்பட்டது. கண் கொட்டாமல் அவைகளைப் பார்த்து நின்றனர்.

நிதானமாகத் தலையைத் தாழ்த்திப் பின் வாங்கிய பிறகு முன்னால் பாய்ந்து ஒன்றை ஒன்று மோதுவதைப் பாஞ்சாலி கவலையுடன் பார்த்திருந்தாள். இத்தனை நாள் அவள் தன் துரோபதையின் வெற்றிக்காகப் பிரார்த்தனை செய்துவந்தாள். இப்போது அவள் பிரார்த்தனையே வேறு விதமாயிருந்தது. சரவணன் ஆடு ஜயித்துவிடக் கூடாதா என்று ஆவலுடன் காத்திருந்தாள். அப்பொழுது அர்ஜுனனும் துரோபதையும் சுற்றிச் சுற்றி வந்து புலி போல் பாய்வதைக் கண் கொட்டாமல் கவனித்தாள்.

உச்சிப் பொழுதாகியும் இன்னும் ஒன்றும் சளைக்க வில்லை.

சரவணன் தன் எண்ணம் பலிக்கவில்லையே என்று திகைத்தான். அந்திப் பொழுது நெருங்கி வந்து கொண்டிருந்தது. அப்போதுதான் துரோபதை கொஞ்சம் சளைத்தது. அதைக் கண்ட கூட்டம் ஆரவாரித்தது. "அர்ஜுனன் வெற்றி பெற்றது" என்று பலர் கூச்சலிட்டனர்.

"ஆமாண்டா; பொட்டை ஆடு தோத்துப் போச்சு; அது ஆட்டமெல்லாம் ஒஞ்சுப் போச்சு" என்று கத்தினர்கள்.

இந்தக் கூச்சலைக் கேட்டதனலோ என்னவோ, துரோபதைக்கு ரொம்ப ரோசம் வந்திருக்க வேண்டும். சினம் கொண்டு சீறிப் பாய்ந்தது. அதனிடம் புது வேகம் தோன்றியது. கால்களை நிலத்தில் பதிய விடாமல் சுற்றிச் சுற்றி வந்து அர்ஜுனனைக் கலங்க விட்டது. அந்திப்பொழுதில்

இரண்டும் சேர்ந்து போய்ப் பேசாமல் நின்று விட்டன. பஞ்சாயத்தாருக்கு ஒன்றும் புரியவில்லை. மறு நாளைக்கும் இவை இரண்டும் மறுபடி சண்டையிட வேண்டும் என்று முடிவு செய்து விட்டு எழுந்து போனார்கள்.

களைத்துப் போன துரோபதையைப் பாஞ்சாலி அணைத்துக் கொண்டாள். மெதுவாகத் தலையைத் தூக்கி துரோபதை எதிரில் இருந்த அர்ஜுனனைப் பார்த்தது. அயர்ந்து போனாலும் கம்பீரமாக நின்ற அந்த ஆணழகனைக் கண்டு அதன் பெண் மனம் கொஞ்சம் ஆட்டம் கண்டது. சரவணன் அதைக் கவனித்து விட்டான். ஒரு கனைப்புடன் அர்ஜுனனை அழைத்துக் கொண்டு போய் நேராகக் கோயிலில் கட்டி விட்டு வந்தான். துரோபதை அங்கே தானே வர வேண்டும்?

அன்று இரவு. கிராமத்தின் தெற்குக் கோடியில் உள்ள பாழும் மண்டபத்தில் ஒரு மங்கலான வெளிச்சம் தென் பட்டது. உற்றுப் பார்த்தவர்களுக்குமூன்று உருவங்கள் இருளோடு கலந்து தெரிந்திருக்கும். ஆமாம்; சதிக் கூட்டம் ஏன் தெரியுமா? பிரமாதமாக ஒரு புரட்சி நடத்த அவர்கள் அங்கு கூட வில்லை. சரவணன் ஒரு கால் பாஞ்சாலியைத் தட்டிக் கொண்டு போய் விட்டால் என்ன செய்வது என்பது தான் அவர்கள் பெரிய பிரச்னை. தங்களுக்கெல்லாம் கிட்டாத பாஞ்சாலி அவனுக்கு இவ்வளவு சுலபமாகக் கிடைப்பதாவது? அநேகமாக மறு நாள் அர்ஜுனன் ஜயித்து விடும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு. வெகு நேரம் பேசி ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதாவது, நேராக ஒருவன் போய் கோவில் வாசலில் கட்டியிருக்கும் அர்ஜுனனைத் தீர்த்துக்கட்டிவிடவேண்டும். அவ்வளவுதான்! அது இருந்தால் தானே சரவணனுக்குப் பாஞ்சாலி கிட்டுவாள்? அது அழிந்துவிட்டால் சரவணன் ஆசை அழிந்துவிடாதா?

நல்ல இருட்டு; பதுங்கி வந்த உருவம் கோவிலை நெருங்கியவுடன் சற்று நின்றது. அதோ கட்டியிருக்கிறது அர்ஜுனனே! 'அப்பாடா' என்று மெதுவாகக் கத்தியைக் கையிலெடுத்து ஆட்டை நெருங்கிய உருவம் 'கண கண'

அம்மாள் :—"ஒரு மாசமா இவர் மூஞ்சியைத் தூக்கிண்டு உட்கார்ந்திருக்கார் டாக்டர்! உடம்பு வேறே இளைச்சுண்டு வரது; உடம்புக்கு என்ன பாருங்கோ."

டாக்டர்:—"வேறேஒண்ணுமில்லே; மெண்டல் ஒர்ரிதான். ஒரு மாதம் ரஜா எடுத்துண்டு விட்டிலேயே இருந்தால் சரியாய்ப் போயிடும்."

அம்மாள் :—"அவருக்கு வேலே போய்ஒரு மாசமா விட்டிலேயே சும்மாத்தானே உட்கார்ந்திண்டிருக்கார்."

வென்று எதிர்பாராமல் அடித்த கோவில் மணி சப்தத்தைக் கேட்டதும் பின்வாங்கித்திகைத்து நின்றது.

அகாலத்தில் கேட்ட மணியோசை பாஞ்சாலியைத் தட்டி எழுப்பியது. கையில் விளக்குடன் கோவிலுக்கு ஓடி வந்தவள் அங்கு கண்ட காட்சியில் அப்படியே மலைத்துப் போய் நின்றுவிட்டாள். கையில் கத்தியுடன் ஒருவன் அர்ஜுனனுக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தான். அவனுக்கும் திடீரென்று ஏற்பட்ட இந்தக் குழப்பத்தில் ஓடவும் தோன்றவில்லை; ஒளிந்து கொள்ளவும் தோன்றவில்லை. திகில் கொண்டு நின்றது அர்ஜுனன். கட்டிப் போட்டிருந்ததால் அதனால் ஒன்றும் செய்யமுடியவில்லை. இதெல்லாவற்றையும் விட, பாஞ்சாலிக்கு ஆச்சர்யத்தை அளித்தது துரோபதையின் தோற்றம் தான். கோவில் மணியின் நீண்ட கயிறு துரோபதையின் கொம்புகளில் சிக்கியிருந்தது!

பாஞ்சாலிக்கு விஷயம் புரிய வெகு நேரம் ஆகவில்லை. எப்போதுமே அவள் துரோபதையைக் கட்டிப் போடுவதில்லை. ஆகவே, நடுநிசியில் யாரோ கோவிலுக்கு வந்திருப்பதை உணர்ந்ததும் துரோபதை மிரண்டு துள்ளிக் குதித்த போது அதன் கொம்புகள் மணியின் கயிற்றில் சிக்கியிருக்க வேண்டும்.

கலக்கம் தெளிந்தவுடன் அவள் சட்டென்று அந்த மனிதன் பக்கம் திரும்பினாள். அவன் அந்த இடத்தில் அசைவற்று நின்றுகொண்டிருந்தான். மணி யோசை அவனைக் கலங்க வைத்தது உண்மைதான். ஆனால், மணி யோசைக்குக் காரணத்தைக் கண்டு பிடித்ததும் அவனுக்குக் குழப்பம் அதிகமாகி விட்டது. பாஞ்சாலி கொண்டு வந்த விளக்கு வெளிச்சத்தில் அவன் துரோபதையின் கொம்பில் சிக்கியிருந்த மணியின் கயிற்றைப் பார்த்தான். ஆட்டின் செய்கை அவனை பிரமிக்க வைத்து விட்டது. மனிதன் இக்காரியத்தைச் செய்திருந்தால் அவன் ஆச்சரியப் பட்டிருக்க மாட்டான். ஓர் ஆடு இதைச் செய்ததானது அவன் சிந்தனைக்கு எட்டாத புதிராக இருந்தது. பாஞ்சாலி அவனைத் திரும்பிப் பார்த்தபோதுதான் அவன் தன்னுடைய நிலையை உணர்ந்து திடுக்கிட்டுப் பின் வாங்கினான்.

பாஞ்சாலியின் பரிகாசச் சிரிப்பு அவன் வெகுதூரம் ஓடி மறையும் வரை கேட்டது.

அவன் ஓடி மறைந்ததும் பாஞ்சாலி துரோபதையிடம் ஓடிக் கொம்பில் சிக்கியிருந்த கயிற்றை அவிழ்த்து அதை இறுகத் தழுவி முத்த மிட்டாள். அதுவும் பெருமிதத்துடன் தலையை ஆட்டியது. எட்ட நின்ற அர்ஜுனன் கண்களில் ஆனந்தம் கூத்தாடியது. ஆயிரமாயிரம் நன்றிகளைத் தெரிவித்தது அந்தக் கண் பார்வை. அந்தப் பார்வையில் சொக்கிப் போய்த் தலையைக் கீழே தாழ்த்திக் கொண்டது துரோபதை. பாஞ்சாலி இதைப் புரிந்துகொண்டாள். ஆமாம்; மனித இனத்துக்கு மட்டுமல்ல, எல்லா ஜீவராசிகளுக்கும் இந்த அன்பும் ஆசையும் இயற்கையாக ஏற்பட்டு வளர்ந்து வாழ்க்கையை உருவாக்குகின்றது.

• • •

மறு நாள் காலை.

மைதானத்தில் எல்லோரும் கூடியிருந்தனர். அர்ஜுனன்

துரோபதைச் சண்டையின் முடிவை, அதாவது பாஞ்சாலியின் தலைவிதியை நிர்ணயிக்கும் சம்பவத்தை அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர்.

ஆனால், அன்று அவர்கள் எதிர்பார்த்தபடி சண்டை நடக்கவில்லை. சண்டைக்காக வந்து நின்ற ஆடுகள் இரண்டும் மௌனமாக ஒன்றையொன்று பார்த்து நின்று விட்டன. பக்கத்திலிருந்தவர்கள் எத்தனையோ விரட்டிப் பார்த்தும் ஒன்றும் நடக்கவில்லை. துரோபதைமெதுவாகப் பாஞ்சாலி இருந்த பக்கம் திரும்பி "என்ன, சண்டை போடவா சொல்றே?" என்று கேட்பது போலத் தலையை ஆட்டியது.

எதிரில் நின்ற அர்ஜுனன் முன்னேறி வந்து சண்டை போட மறுத்து விட்டது, "ஊ ஹூம்; என் உசிரையே மீட்டுக் கொடுத்தவளாச்சே அவள், அவளோடவா நான் சண்டை போடுவேன்?" என்று கேள்வி போடுவது போல.

இந்நிலையைப் பார்த்துப் பஞ்சாயத்தார் திகைத்தனர். அந்த சமயத்தில் பூசாரி வேகமாக அங்கு வந்து சேர்ந்தான். நேராகப் பஞ்சாயத்தாரிடம் வந்து "இனிமேல் அந்த இரண்டு ஆடும் சண்டை போடாதுங்க..." என்று ஆரம்பித்தவன் படபடவென்று இரவு நடந்த கதையை விவரமாகச் சொல்லி முடித்துவிட்டு "பாருங்க. ஆடுகளுக்கு இருக்கிற அறிவு கூட நமக்கு இல்லை. ஆட்டை வெட்டிப்போட வந்தவன் போல எத்தனை பசங்க நம்ம கிராமத்திலே இருக்காங்க. அவங்களெல்லாம் இருக்கிற வரைக்கும் நாம் எங்கே ஒத்துமையாயிருக்கிறது? அதுதான் பாஞ்சாலி கூட அவள் சபதத்தை முடிச்சுட்டாள். ஆமா, எப்போ துரோபதை தனக்கு ஒரு ஜோடியைத் தேடிக் கிடுச்சோ, அப்பவே அவள் சபதமும் முடிஞ்சு போச்சு. துரோபதையும் அர்ஜுனனும் இனிமேல் கோவில் ஆடுகள். உற்சவத்திலே அழகா ஜோடியா முன்னால் வரும். சண்டையெல்லாம் முடிஞ்சுபோச்சு. இனிமேல் சமாதானம்தான். பாஞ்சாலியும் சரவணனும் கூட இனிமேல் கல்யாணமானதும் சண்டை போடாமல்தான் இருக்கணும்" என்று சொல்லி நிறுத்தியதும் எல்லோரும் தங்களை மறந்து சிரித்து விட்டனர்.

சரவணன் பாஞ்சாலியைப் பார்த்தான். அவள் அவிழ்ந்து தொங்கிய கூந்தலை அள்ளி முடிந்து கொண்டிருந்தாள். இந்தச் சமாதான உடன்படிக்கையை "ரொம்ப ரொம்ப சரி!" என்று ஆமோதிப்பது போல அர்ஜுனனும் துரோபதையும் சேர்ந்து கம்பீரமாகப் பாஞ்சாலியிடம்போய்நின்றன. அவையிரண்டும்தலையை ஆட்டி, சரவணனையும் அருகே கூப்பிடுவது போல் அவனைப் பார்த்தன. இரண்டையும் அணைத்து நின்ற பாஞ்சாலியைத் தான் அவன் பார்த்துக் கொண்டிருந்தானே ஒழிய ஆடுகளைப் பார்க்கவில்லை!



விடியற்காலே ஏழுமணிக்கெல்லாம் எழுப்பிவிட ஏற்பாடு செய்து......
பறக்க ஓடியும் ஒரு பர்லாங்தூரம் க்யூவில் கால்கடுக்க நின்று ஒருவீசை சீனி வாங்கிக் கொண்டுவந்து......
அவசர அவசரமாகக்குளித்து விட்டு அரையும் குறையுமாகச்சாப்பிட்டுவிட்டு ....
இரண்டு,மூன்று பஸ்ஸுகளை கோட்டை விட்டு... முடிவாக ஒருரூபாய்க்கு ரிக்ஷாபேசி ஆபீஸ் வந்தால்,மணி பன்னிரண்டு!
MANAEER
ஆபீஸ் பையன்: ஸார்! மானேஜர் உங்களைக் கூப்பிட்டார். இதோடே அஞ்சு வாட்டி நீங்க வந்தாச் சான்னு பாத்து ட்டு வரசொல்லிட்டார். இன்னிக்கி என்னமோ கோவமா இருக்கார்
?!?!?
ஏன் ஓய் இன்னிக்கு லேட்டு? ... உம்?. சரி, போனுப் போறது.. உம்மால் ஒரு காரியம் ஆகணும், ரெண்டு வீசை சர்க்கரை வேணும் வாங்கிதர முடியுமா?...



உடன் போக்கு

த. நா. குமாரஸ்வாமி

நாகரிகத்திற்குப் புறம்பான ஒரு பட்டிக்காடு. அதன் பக்கத்திலேயே ஓர் ஆறு. ஆற்றின் எதிர்க் கரையில் வேறோர் ஊர். தென் கரையிலுள்ள ஊர்ப் பெண்கள் மாலை நேரங்களில் பானைகளில் நீர் மொண்டு செல்ல தெள்ளிய ஓடையை நோக்கி வருவார்கள். குளிர்ந்த நீரில் சிறிது நேரம் குடைந்து ஆடிவிட்டு தளும்பும் பாரமான மண்குடங்களை ஏந்தி மந்த நடையாகவே வான் புவியெங்கும் இருள் படர்ந்து வர, தம் மனைகளை நோக்கித் திரும்புவார்கள். பகல் வேளைகளில் வேறு காட்சி. மேட்டுக்கரையிலுள்ள ஆலமரத்து நிழலடியில் மாட்டு மந்தைகளை மடக்கிவிட்டு எதிர் கிராமத்து ஆயச்சிறுவர்கள் மணலில் பாண்டில் விளையாடியும், கரையோரமாக இருக்கும் தாழம் மடுவில் கோட்டைப் போட்டும், வேய்ங்குழல் ஊதியும் காலத்தை இனிது கழிப்பார்கள்.

தென்கரைப் பட்டிக்காட்டைச் சேர்ந்தவள் காத்தாயி. வயது பதினெட்டு இருக்கும். பூ அலர்ந்தது போன்ற நிறை; இளமையின் வனப்பு உடலில். அகன்ற கருவிழிகள். அள்ளிச் செருகிய கூந்தல். ஒல்கிய இடுப்பு. கடைந்தெடுத்த மார்பு. சிரிக்கும்போது வாய்ச் சிமிழிலிருந்து சிந்துவன போன்ற முத்துப் பற்கள்.

வடகரை ஊரினன் எல்லன். வடித்த சிலைபோன்ற வடிவினன். பட்டிக்காட்டுக்கு அழகன். வலிமை தெறிக்கும் உடல் உறுப்பு நுனியில் சப்பை தட்டிய மூக்கு. அவ்வளவே. மற்றபடி லக்ஷணக் குறை எதுவும் இல்லை. வயது இருபத்தைந்திற்குள் இருக்கும்.

அந்தி நேரம்; மஞ்சள் வெயில் ஆற்றின் சிறு அலைச்சிகைகள் மீது பொன்னைத் தெளிக்கும் காட்சி. தென்கரையிலிருந்து மாந்தோப்பு வழியே அசைந்து கொண்டே குடமும் கையுமாகக் காத்தாயி துறைக்கு வருகிறாள் வழக்கம் போல். எதிர்ப்புறத்திலிருந்து எல்லன் மாட்டிற்குத் தண்ணீர் காட்ட ஆற்றுக்கே வருகிறான். காத்தாயி வரும் வேளை அவனுக்குத் தெரியும்!

காத்தாயி சிவந்த மட்பானையை மணலில் சாய்த்து விட்டு ஆடை

தலை ஈச்சமரம். அதன் மிலாறு மேல் பிளவுவால் வலியன் குருவி இரண்டு; ஆணும் பெண்ணும்.

காத்தாயி எதிர்க்கரையை அரைக் கண்ணால் சற்றைக்கொரு தரம் கவனித்து விட்டுத் தலை குனிந்து கொள்கிறாள். மட்கலத்தை மணலில் உராயத் தேய்க்கிறாள். அந்த அசைவில் கைவளையல்கள் கிளிங் கிளிங்கென்று ஒலிக்கின்றன.

எல்லன் (காத்தாயி மீது கண்ணாகவே......முணு முணுவென்று ஏதோ பாடுகிறான்.)

காத்தாயி (பானையைக் கழுவியானதும் உள்ளங் கைகளைக் குவித்துத் தெளிந்த நீரை வாரி வாரிப் பானையை நிரப்புகிறாள்.)

எல்லன் (இன்னும் உத்ஸாஹம் பிறந்து விடவே, உரக்கப் பாடுகிறான். காதல் ரஸமுள்ள பாட்டுத்தான். கையிலுள்ள கோலை 'டொக் டொக்'கென்று தட்டுகிறான்...... கனைக்கிறான்.....தன்னைக் காத்தாயி பார்ப்பாளோ வென்று ஜாடை மாடையாகக் கவனிக்கிறான்.)

காத்தாயி (இமைக்கும் நேரமே நிமிர்ந்து அவனைச் சட்டெனப் பார்க்கிறாள். எல்லனுடைய பாட்டைக் கேட்டு மெல்லத் தனக்குள்ளேயே சிரிக்கிறாள்.)

ஈச்சம் ஓலைமீதிருக்கும் ஆண் வலியன்:—"குவிக்" (கூவுகிறது; பக்ஷி பாஷையில் அர்த்தம்—பேஷ்!)

துவைக்கும் பாறை மீது உட்கார்ந்து நீரோடையில் கால்களை விட்டுத் துழாவுகிறாள். அந்த இடத்தில் ஆற்றின் இருகரையும் குறுகி நெருங்குகின்றன. அடர்ந்த புதர். அதில் மாலையில் மலரும் சிறு பூக்களுக்குக் கணக்கில்லை. பூவைச் சுற்றி வட்டமிடும் வண்டுகளின் இறகொலி. வெப்பம் தணியத் தணிய மெல்லிய காற்று வீசுகிறது. ஆற்றின் ஓர் ஏகாந்தமான மூலையில் மீனுக்கு ஏங்கியிருக்கும் ஒரு நாரை. நீரில் தன் அழகைப் பார்த்துக் கொள்ள வளையும் பரட்டைத்

பெண் குருவி:—" குவிக் குஊ " (பலே பேஷ்!)

எல்லன்:—(மெல்லியகுரலில்) காத்தாயி! (அந்தச் சொல்லில்தான் எத்தனே ஏக்கம்! எவ்வளவு உருக்கம்!)

காத்தாயி:—(உதடு அசங்காமல்) என்ன? (இந்த 'என்ன' என்பதிலும் எத்தனேயோ மர்மங்கள் புதைந்திருந்தன.)

ஆண் குருவி:—"கூ கூ." (ரொம்ப வேடிக்கை !)

பெண் குருவி:—" குஊ குஊ " (தமாஷ்! தமாஷ்!)

எல்லன் (என்னவோ சொல்ல யத்தனம் பண்ணுகிருன்; வார்த்தைகள் வெளியே வரவில்லே.)

காத்தாயி (பானேயை எடுத்துக் கொண்டு எழுந்திருக்க எண்ணுகிருள். ஆனல் ஏனே எழுந்து செல்ல மனம் வரவில்லே.)

எல்லன்:—(மீண்டும்) காத்தாயி !

காத்தாயி:—என்ன?(அவன் முகத்தைப் பாராமலே பதில்.)

எல்லன்:—சொன்னேனே...யோசனே பண்ணுயா?

காத்தாயி:—என்ன சொன்னே?

எல்லன்:—நித்தியந்தான் சொல்கிறேன். ஏன் இப்படி மறந்து போய் விடுகிருய்?

காத்தாயி:—நித்தியந்தான் நானும் பதில் சொல்றேனே, தெரியலேயா உனக்கு ?

ஆண் குருவி:—" குவிக், குவிக் குவிக்" (சரியான பதில்பெண்ணே!)

பெண் குருவி:—" குவிக்கூ குவிக் கூ" (இனி மேல் எல்லனேக் கல்யாணம் செய்து கொள்வாள்.)

காத்தாயி:—(நீர் தளும்பும் குடத்துடன் எழுந்திருக்கிருள்.)

எல்லன் (தன்னுடைய இடத்திலிருந்து நகர்ந்து வந்து அவள் அருகில் நிற்கிருன்.)

காத்தாயி (ஊரை நோக்கிப் புறப்படுகிருள்......பின்னல் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே செல்கிருள். குடத்துத் தண்ணீர் கீழே தளும்பிச் சிதறுகிறது. அடிக்கடி எல்லனே நோக்கிச் சிரிக்கிருள்.

காட்சி மாறுகிறது

வேறொரு நாள். மாலே வேளே. இயற்கை வேறு அலங்காரத்துடன் திகழ்கிறது. முன்னே விட ஆற்றின் இரு கரையும் பசுமையாகத் தோன்றுகிறது. குமுகுமு வென்று மலர்களின் மணம் சோலேகளிலிருந்து வீசுகிறது. ஆற்றங் கரையோரம் உல்லாசமாக யாரோ பாடிக் கொண்டே வரும் ஒசை.



"என்னங்க, இந்த ஓட்டலுக்கா போகலாம்?...ஐயோ, வேண்டாங்க; இங்கே டிபனெல்லாம் ரொம்பப் பாடாவதியாயிருக்குங்க "'நஞ்சிதவிலா'ஸுக்குப்போவோம் வாங்க..."

"பரவாயில்லேங்க; அதுக்கு என்ன செய்யறது? குஞ்சிதவிலாஸிலே உங்களுக்கு கடன் தரமாட்டான்னீங்களே...இங்கேயே சாப்பிடுவோம் வாங்க."

குடத்துடன் காத்தாயி தான்! முருக்கம்பூ வர்ணச் சேலே அணிந்திருந்தாள். அவள் கூந்தலில் கொத்தாக வாசனைக் கதப்பம். அதே சமயம் எதிர்ப் பக்கம் மேட்டுக் கரையில் 'சை சை' யென்று செருப்போசையுடன் கன ஜோராக ஒருவன் வருகிறான். ஆற்றுப் பள்ளத்தில் இறங்குகிறான். தலையில் அழகாகக் கட்டிய பாகை. உடம்போடு ஒட்டிக் கொள்ளும் மல் சொக்காய். கழுத்தில் பளபளவென்று நெளியும் மெல்லிய தங்கச் சங்கிலி. கத்தரித்து விட்ட மீசை, கிருதா. மணிக்கட்டில் கடிகாரம். இத்தகைய ஆளைப் பார்த்ததும் காத்தாயிக்கு என்னவோ மாதிரி ஆகிவிட்டது. கள்ளச் சிரிப்புடன் வழிப்போக்கன் எல்லன் உட்கார்ந்த பாறை மீதே அமர்கிறான். பாகையைக் கழற்றி ஓரமாக வைக்கிறான். வெட்டி விட்டச் சுருள் சிகையைக் கோதிக் கொண்டு காற்று வாங்குகிறான். " ஆ, என்ன சுகமான காற்று! இங்கே தான் சில்லென்று இருக்கிறது" என்று தனக்குத்தானே சொல்லிக் கொள்கிறான்.

கிளேயில் விளேயாடும் குருவிகள் புது ஆளேயே உற்று நோக்குகின்றன.

ஆண் குயில்:—"கிர்...கிர்" (இவன் யார்?)

பெண் குயில்:—"கிர்ர்......கிர்ர்" (இங்கே என்ன ஜோலி இவனுக்கு?")

வழிப்போக்கன்:—(காத்தாயியை விளித்து) இந்த ஊர்ப் பேரென்ன பெண்ணே!

காத்தாயி:—(மார்பு படபடக்க) தென் கரை.

வழி:—ரொம்பத் தொலேவு போகணும்; எவ்வளவு கல் தொலேவோ? (தனக்குள்ளேயே சொல்லிக் கொள்கிறான்.)

காத்தாயி (ஓரக் கண்ணேக் கொண்டு அந்தப் புது மனுஷ்யனே ஒருதரம் கவனிக்கிறாள்.)

வழிப்போக்கன் சீப்பை எடுத்துத் தலேயை வாரிக் கொள்கிறான். உடனேயே ஒரு சிறு கண்ணுடி ஜேபியிலிருந்து வெளியே வருகிறது...அதில் அழகு பார்த்துக் கொள்கிறான்...பல் வரிசையையும் ஒரு தரம் பார்த்துக் கொள்கிறான்.

...காத்தாயி பக்கமாகத் திரும்பிச் சிரிக்கிறன். அவனுடைய பொன் பற்கள் மின்னுகின்றன.

காத்தாயி (பிரமித்துப் போகிருள்.)

வழி:—தே! உன்னத்தான்...இந்தக் கண்ணுடி வேணுமா?

காத்தாயி:—(வெட்கத்துடன்) எனக்கெதுக்கு? (ஆனுலும் ஆசைதான் அதைப் பெற்றுக் கொள்ள.)

ஆண் குருவி:—"குகுகூ குகுகூ" (என்ன வஞ்சகமோ?)

பெண் குருவி:—"குகூ குகூ" (ஆமாம்; மோசமான ஆள்தான்.)

வழி...(காத்தாயியை ஏற இறங்க நோக்குகிறன். மீசையைத் திருகி விட்டுக் கொள்கிறன்.)

காத்தாயி (அதைக் கவனிக்காதது போல் பானையைத் துலக்க ஆரம்பிக்கிருள்.)

வழி:—பெண்ணே! உங்க ஊரிலே இந்த வருசம் குறுவை அறுவடை சுபாரு தானு?

காத்தாயி:—(சகஜாராக வெளியூரார் விசாரிப்பது போன்ற கேள்வியாக இருக்கவே அவள் பயம் தெளிந்து பதில்தருகிருள்.) அப்படி நல்ல விளேச்சலென்று சொல்ல முடியாது......ஏதோ அரை வயித்துக்குக் கிட்டிச்சு......

வழி:—அது சரி தான்;...உங்கள வங்க இந்த ஊரிலே சற்று பலத்த குடிகள் தானு?

காத்தாயி:—ஆமாம்; நாங்கள் பத்து வீட்டுக்காரார். ரெட்டிமார். ரொப்பவும் சொகவாசிகள்.

வழி:—என்ன! நானும் ரெட்டி தான்.

காத்தாயி ரெட்டியாரை (ஆச்சர்யத்துடன் பார்க்கும் போது அவன் கண் அடிப்பதைக் கவனிக்கிருள்.)

வழி:—மணியாச்சு; இந்த ஊரிலே நான் தேடற சரக்கு கிடைக்கல்லே...வேறு எங்கேயானுலும் தான் போய்ப் பார்க்கணும்.

காத்தாயி:—(சற்றுக் கூச்சம் தெளிந்து) அடிக்கடி மணிக் கட்டையே பார்க்கிருயே...அது என்ன?

வழி:—கைக் கடிகாரம்; நீ பார்த்ததே இல்லையா? இதோ பார்! (அருகில் சென்று உடலைத் தீண்டிய வண்ணம் அவள் காதுக்குச் சமீபத்தில் கடிகாரத்தை வைக்கிறன்.)

காத்தாயி (டிக் டிக்கென்று அது துடிப்பதை உணர்கிருள். ஆச்சரியத்தால் அவள் கண் மலர்கிறது.)

வழி:—நீ நாட்டுப் புறத்திலே இருக்கே. உனக்கு என்ன தெரியப்



"என்ன, ஒரே அலங்கோலமா வரீங்... ? என்ன விசயம்? பஸ்ஸிலே ஏதாவது தகருரா?"

"ஒண்ணுமில்லேங்க; இப்பத்தான் பஸ்ஸை விட்டு இறங்கிவரேன். வழியிலே ஜனங்க ஒரே கும்பலா அடைச்சுக்கிட்டு நின்னுங்க.... அவ்வளவுதான் விசயம்."



அயலூர்வாசி :—"சீச்சீ,........என்னய்யா இது? இந்த ஊர் ஈ இப்படிப் பிடுங்கித் திங்கறதே!...சட்!"

உள்ளூர்வாசி :—"அட, அது ஈ இல்லே ஓய்! இந்த ஊர்க் கொசு!

போறது பட்டணத்து ஷோக்கெல்லாம்? பட்டணம் பாத்திருக்கிறயா?

காத்தாயி:—சென்னப் பட்டணந் தானே!

வழி:—அப்படி என்ன வாயைப் பிளக்கிறயே? பட்டணம் என்ன பட்சணமா தின்று விட? என்ன வேடிக்கையெல்லாம் பார்க்கலாம். உயிர் காலேஜி, செத்த காலேஜி லேட் அவுசு, எலக்ட்ரி வண்டி என்னென்னவோ......

காத்தாயி:—ஆ ...ம்! (மோவாயில் விரலைவைக்கிறள்.) உயிர்காலேஜா? அது என்னவோ?

வழி:—அதுவா?...அங்கே புலி, சிம்மம், எல்லாம் இருக்கும். அந்தக் குரங்குத் தான் எத்தனை தினுசு? (இடி இடி யென்று நகைக்கிறன்.)

ஆண் குருவி:—"கிர் கிர் கீகீ"— (நீ என்னவாம்? நீயும் ஒரு குரங்கு தான்.)

பெண் குருவி:—"கீ...கிக்கீ" (இந்த அசட்டுப் பெண்ணை ஏமாற்ற வந்த பட்டணத்துக் குரங்கு.)

காத்தாயி:—(திக்பிர மித்து அந்தப் பட்டணத்துச் சிங்காரனையே விழுங்கி விடுவது போல் பார்க்கிறள். குடம் ஆற்று ஓட்டத்தில் மெல்ல மிதந்து செல்வதைக் கூடக் கவனிக்கவில்லே.)

வழி:—(குரலைத்தாழ்த்தி) உனக்கு ஆசையா இல்லே பட்டணம் பார்க்க? வரையா என்னேடு... என் வண்டியிலே ஏறிக் கிட்டு ஜோக்காப் போவலாம்!

காத்தாயி:—பார்க்கணுமென்று ஆசைத் தான்...ஆனல் வீட்டிலே அனுப்பு வாங்களோ என்னமோ?

வழி:—நான் இட்டுக்குணு போறேன்; இந்த வயசலே பார்க்காதே பின்னே எப்போ பார்க்கிறது?

காத்தாயி:—ஐயோ! உன்னேடுதனியாக எப்படிப் போறது?...கொன்னுடு வாங்களே தெரிஞ்சுதுன்னு...

வழி:—நீ வரேன்னு தலே ஆட்டு; நாளேக்கே உன்னே இட்டுக்கிட்டு கிளம்பிடுறேன். என்னேப் பிடிக்க எவனும் ஆவாது. என் பேர் சோலேயா, மஜாக்கா?

காத்தாயி (உடலேக் கூசிக் கொண்டு முகத்தை வேறு புறமாகத் திருப்பிக் கொள்கிறள்)

சோலே:—கண்ணுட்டி! உன் பேரைச் சொல்லலேயே?

காத்:—காத்தாயி.

சோலே:—என்ன சொவுசான பேரடி உனக்குத் தங்கமே!

காத்தாயி(உடல் சிலிர்க்கிறது; அவள் வயிற்றுக்குள் ஒரு குளிர்.)

சோலே:—இந்த வெள்ளிக்கிழமை இந்தப் புறம் திரும்பி வருவேன் வண்டி ஓட்டிக்கிட்டு...இதே வேளையிலே நீ இந்தத் துறையண்டையே காத்திரு. உன்னே அழைச்

சிக் கிட்டுப் போறேன். யோசனை பண்ணு என் காத்தாயி!

வழிப்போக்கன் தன் தலைப்பா கையை ஒழுங்காகக் கட்டிக் கொண்டு காத்தாயியின் ஒவ்வொரு அங்கத்திலும் கண்ணைச் செலுத்தி விட்டு மெல்ல எழுந்து செருப்பை மாட்டிக் கொண்டு கரை வழியே வேறு ஊர்ப் பக்கம் செல்லத் தொடங்குகிறான். காத்தாயி மனசு எங்கோ, எந்த சுவர்க்கத்திலோ திரிய அந்த நாகரிகன் சென்ற திசையிலேயே பார்த்துக் கொண்டிருக்கிறாள். அதே சமயம் கரை மறைவிலிருந்து ஒரு கருமேனி யான உருவம் வெளிப்படுகிறது.

எல்லன் காத்தாயியின் பக்கமாக வருகிறான்.

காத்தாயி(இருண்ட சித்திரம் போல் மழுங்கும் அந்திவானுக்கு எதிராக நிற்கிறாள். சல சலவென்று ஆற்றில் விசையாகச் செல்லும் நீரோட்டம்.

எல்லன்(உருட்டியோடும் நீரில் நின்று கொண்டு அவளையே கவனிக்கிறான்.)

காத்தாயி—(மயக்கம் தெளிந்து பானை போன இடத்தைத் தேடு கிறாள்.)

அப்போது எல்லன் கூப்பிடுகிறான்:

காத்தாயீ...காத்தீ!''

காத்தாயி(திரும்புகிறாள்; ஆனால் முன் போல அவனுக்கு ஆறுதல் தர ஒரு சின்ன முறுவலையும் காட்டாமல் கடினம் பாய்ந்த நெஞ்சின ளாகிறாள்.)

ஆண் குருவி:—''கீ...கீ''(அடமடப் பயலே!)

பெண் குருவி:—''கூ கூ''(இவளும் தான் மடப் பெண்.)

எல்லன் :—காத்தாயி!...நான் சொல்றதைக் கேளேன்.

காத்தாயி :—என்ன?

எல்லன் :— ஒன்றுமில்லே; நாளைக்குச் சந்தையிலே உனக்குப் பாங்கான புடவை எடுத்துத் தரேன். ஒரு வார்த்தை பேசேன்.

காத்தாயி :--எனக்குச் சந்தையிலே விற்கும் கலாடாங்கிச் சேலை எதுக்கு?......பட்டணத்துச் சேலை வாங்கித் தர முடியுமா?

எல்லன் :—அது எப்படி இருக்கும் காத்தீ...?

காத்தாயி :—சரி; நான் போறேன்.

எல்லன் : கொஞ்சம் நில்லேன். சற்று பேசலாம். இந்த இருட்டிலே யாரும் பார்க்க மாட்டாங்க.....

காத்தாயி :—ஐயோ......இப்பவே இவ்வளவு நேரமாச்சு...இன்னும் இருந்தாக்கா வீட்டிலே திட்டுவாங்களே. என் குடம் எங்கேயோ

தாத்தா :—(முதல் முதல் பள்ளிக்கூடம் போய்விட்டு வந்த பையனிடம்)''கிட்டு! இன்னிக்கு என்னடா சொல்லிக் கொடுத்தா பள்ளிக்கூடத்திலே?''

கிட்டு :—''ஒண்ணும் சொல்லித்தரலை, தாத்தா! நாளைக்கும் போகணும் போல இருக்கு.''

ஒதுங்கிப்போச்சே; அதைத் தேடித் தாயேன்.......

எல்லன் :—இதோ......காத்தாயி! (குடத்தை எப்படியோ தேடிப் பிடித்துத் தருகிறான்.)

காத்தாயி : (ஜலம் மொண்டு கொண்டு வீட்டை நோக்கிச் செல்கிறாள்.)

எல்லன் :—தோப்பு வரை யாரும் பார்க்க மாட்டாங்க; நான் உனக்காகக் குடத்தைத் தூக்கி கிட்டு வரட்டுமா, காத்தீ?

காத்தாயி:-முடிஞ்சா தூக்கிக்கோ; பொன்னி அம்மன் கோவிலண்டை என் இடுப்பிலே இறக்கி விடு.

காட்சி மாறுகிறது

வெள்ளிக் கிழமை. அதே ஆற்றங்கரை. மாலை நேரம். வழக்கம்போல் வாடி நிற்கும் செங்கால் நாரைக்கு ஒரு மீன் கிடைத்து விட்டது. அதை விழுங்கி விட்டு மீண்டும் தியானத்தில் ஆழ்ந்து கிடக்கிறது. நடையில் புது குலுக்கு. முகத்தில் ஒரு விதக் குதூகலம். மனதுக்குள் ஓர் இன்ப ஊற்று குமிழ்த்துக் கொண்டே இருக்கிறது காத்தாயிக்கு. உள்ளங்கையிலும், உள்ளங்காலிலும் தினவு. கையில் குடம். இங்கும் அங்கும் பார்க்கிறாள். சொன்னபடி வழிப்போக்கன் வருகிறான். அவள் அருகில் வருகிறான். சிரிக்கிறான்... அவள் தோள் மீது கையை வைக்கிறான்.

ஆண்குருவி:— ''குக்கீ.....குவிக்கீ'' (காத்தி! இப்பவும் தப்பில்லே; ஓடி விடு வீட்டுக்கு.)

பெண்குருவி :-''குவிக்கீ...குவிக்கீ'' (ஓடி விடடீ...ஓடி விடடீ!)

வழிப்போக்கன் :- காத்தாயி !...கண்ணுட்டி ! கிளம்புறயா ?

காத்தாயி :—...எங்கே ?

வழி :—பட்டணத்துக்குத் தான் !

(காத்தாயிக்கு பதில் சொல்லத் தெரியவில்லை. இரண்டாகப் பிரியும் நீரோட்டத்தையே நோக்குகிறாள்.)

வழி :—கண்ணே! உனக்குப் பூ போட்ட புடவை வாங்கித் தருவேன்...கை நிறையத் தங்க வளை மாட்டுவேன்...காலுக்குப் பட்டை கொலுசுப் பூட்டுவேன். எழுந்து வா போகலாம்...என் தயங்கறே ?

காத் :—(பதிலே இல்லை.)

வழி:-நான் காசுக்காரனடி; கேட்டதெல்லாம் வாங்கித் தருவேன். உன்னைப் பூ போல வைச்சுக்குவேன். எழுந்து வா...வண்டி அந்த மரத்து நிழலிலே காத்திருக்கு.

ஆண்குருவி :—'' கிக்கீ... குக்கூ'' (காத்தாயி! எல்லனை மறக்காதே.)

பெண்குருவி:—''குவிக்வீ'' (மறக்காதே; பாவம் எல்லன் !)

வழிப்போக்கன்:—நல்லா இருட்டி விட்டது. கிளம்பு...கிளம்பு. யாருக்குமே தெரியாது.

காத்தாயி:—வரேன்; (எழுந்து அவன் பின்னாலேயே செல்கிறாள். ஊர் எல்லையை விட்டு இரு உருவங்கள் மறைகின்றன. தொலைவில் மாட்டுச் சலங்கையின் ஓசை கேட்கிறது. எவ்வளவோ தூரம் போய் விட்டிருப்பார்கள்.)

ஆண் குருவி:—''சீ...சீ'' (சீ...சீ !)

பெண்குருவி:—''கிஇ...கிஇ''(சீச்சீ, அநியாயம்!) சில நாழிகைக்கெல்லாம் வியர்த்து வடிய முழங்கால் வரைக்கும் செம்புழுதி ஏறிய வண்ணம் எல்லன் கையில் சேலையை எடுத்துக்கொண்டு வருகிறான். காத்தாயியைக் காணவில்லை. ஆற்றங்

கரை வெறிச் சென்றிருக்கிறது. 'ஹி ஹி' என்று சிரிக்கிருன். கவனிக்கிருன். காத்தாயிக்கு ஏற்ற புடவையைப் பிடித்து விட்டோமென்ற சந்தோஷத்தால் வாய் விட்டுப் பாடுகிருன்.

ஆண் குருவி:—"கிர்...கிர்" (மடப் பயலே, மோசம் போனயே !)

பெண் குருவி—"கர்...கர்"(மோசக் காரி; ஏமாற்றினளே !)

எல்லன்:—காத்தாயி! காத்தீ...ஆற்றங்கரை எதிரொலிக்கிறது... பதிலே வரவில்லே.

எல்லன்:—(மீண்டும்) காத்தாயி... எங்கே ஒளிந்து கொண்டிருக்கே? இப்படி என் என்னே அழ மூட்டுறே? இருட்டிக்கொண்டே வருகிறது. எல்லனுக்குச் சலிப்புத் தட்டுகிறது. கடைசி முறையாக 'காத்தாயி...காத்தாயி' என்று கூவி அழுகிருன்.

மரத்திலுள்ள குருவிகள் (இரண்டும்):-'சக் ...சக்' (செ...செ) பாவம்...பாவம்! ஊர்ப் பக்கம் போகாமலே எல்லன் திசை தப்பியவன் போல் சேலேயைத் துறையிலேயே போட்டுவிட்டுச் சற்று முன் மறைந்து போன இருவர் போன சுவட்டிலேயே சென்ருன். 'காத்தாயி...திரும்பி வாயேன் காத்தாயி' என்று ஓலமிட்ட வண்ணம்.

நன்ருக அஸ்தமித்து விட்டது. ஒருவர் முகம் ஒருவருக்குப் புலப் படாத இருள் கவிகிறது. மீன்வரும் மீன் வரும் என்று காத்திருந்த நாரையும் இடத்தை விட்டுப் பெயர்ந்து தாழம் புதருக்குள் மறைகிறது. காத்தாயி விட்டுச் சென்ற மண் குடம் நீர் மொண்டதும் மொள்ளாததுமாய் ஆற்றோட்டத் தோடேயே எங்கோ சென்று கொண்டிருக்கிறது.

விலை குறையப்

வேலன் :—

சேதிகேட்டி யாடி,பெண்ணே!
  சேதி கேட்டியா?—சர்க்கார்
சிறுகச்சிறுக விலையைக்குறைக்கும்
  சேதி கேட்டியா?
பாதிவயி றேடுமக்கள்
  பட்ட பாடெல்லாம்—இனி
பஞ்சாய்ப் பறக்கப்போகும்
  சேதி கேட்டியா?

வேலாயி :—

பேப்பரிலே போட்டுவிட்டா
  போதுமா, மச்சான்?—சும்மா
பேச்சுப்பேசித் தீர்த்துப்பிட்டா
  போதுமா, மச்சான்?
பீப்பாபோல வயிறுபெருத்த
  பெரிய வியாபாரிங்க—கொண்ட
பேராசை போறவழி
  என்னவாம், மச்சான்?

வேலன் :—

திட்டம்போட்டு வேலைசெய்யும்
  தில்லு மல்லையும்—சரக்கைத்
திருட்டுத்தன மாகவிற்கும்
  தீய வழியையும்
சட்டம்போட்டு மட்டந்தட்ட
  சர்க்கார் இருக்குது—ஊர்
சனங்கமனசு வச்சாஎல்லாம்
  சரியா நடக்குது!

வேலாயி :—

சனங்கமனசு வச்சாவயிறு
  காயப் போவுது!—சர்க்கார்
சட்டதிட்டம் சேஞ்சாஊழல்
  மலியப் போவுது!
இனத்தைஇனம் காக்குமின்னு
  சொல்வது போல—அந்த
இழவெடுத்த பணத்தைப்பணம்
  காக்கப் போவுது!

போவுதாம்!

வேலன் :—

பணமதிப்புக் குறைஞ்சதாலே
விலைகுறையப் போவுதாம்—உள்ளே
பதுக்கிவச்ச பொருள்களெல்லாம்
வெளியேவரப் போவுதாம்
உணவின்விலை உடையின்விலை
உடனேகுறையப் போவுதாம்—பிறவு
உப்புவிலை பப்புவிலை
எல்லாமிறங்கப் போவுதாம்!

வேலாயி :—

ஏட்டில்எழுதும் சீனிஎங்கே
இனிக்கப் போவுது?—வெறும்
எழுத்தளவில் ஏழைராஜ்யம்
இருக்கப் போவுது!
பாட்டாளிகள் தலையில்எல்லாம்
விடியப் போவுது!—அவங்க
பாடுரொம்ப திண்டாட்ட
மாவப் போவுது!

வேலன் :—

காட்டில்நிலா காய்ந்தகதை
ஆவாது, பெண்ணே!—அட
கழுதைதேஞ்சி கட்டெறும்பா
போவாது, பெண்ணே!
வேட்டுவெறும் வெத்துவேட்டா
ஆவாம லிருக்க—நம்ம
வேழமுக விநாயகனை
வேண்டுவோம், பெண்ணே!

வேலாயி :—

வேழமுக விநாயகனை
வேண்டி நின்னாலும்—இன்னும்
வேறுபல தெய்வங்களை
வேண்டி நின்னாலும்
வாழும்உரிமை உனக்கெனக்கும்
இல்லையே, மச்சான்!—நமக்கு
வரிகொடுக்கத் தானேஉரிமை
இருக்குது, மச்சான்?

—கலியுகக் கவிராயர்

மித்திர பேதம்

“ஒரு காட்டில் ஒரு சிங்கமும், ஓர் எருதும் மிகவும் சிநேகமாகவும் ஒற்றுமையாகவும் வாழ்ந்து வந்தன. ஒரு நரி அவ்விரண்டு பிராணிகளின் சிநேகத்தை மித்திர பேதம் செய்து கெடுத்தது” என்று சோமவன்மா கதை சொல்லத் தொடங்கினார்.

அதைக் கேட்ட அரச குமாரர்கள் “அந்தக் கதையை எங்களுக்குச் சொல்ல வேணும்” என்று ஆவலுடன் கேட்டார்கள்.

சோமவன்மா சொல்வார் :

தென்னாட்டில் மகிழாரூப்பியம் என்னும் பட்டணத்தில் ஒரு வர்த்தகன் இருந்தான். அவனுக்கு ஏராளமான சொத்து இருந்தது. ஆயினும், மேலும் பொருள் ஈட்ட விரும்பிய அவன் தன்னிடமிருந்த சரக்குகளை வெளியூரில் கொண்டுபோய் வியாபாரம் செய்யும் பொருட்டு வண்டியில் ஏற்றினான். சஞ்சீவகன், நந்தகன் என்னும் இரு எருதுகளை வண்டியில் பூட்டிக் கொண்டு புறப்பட்டான். போகும் வழியில் காடு குறுக்கிட்டது. அதிக பாரம் காரணமாக வண்டியை இழுக்கச் சக்தியற்ற சஞ்சீவகன் என்னும் எருது கால் இடறிக் கீழே



விழுந்து நொண்டியாயிற்று. எனவே, வர்த்தகன் வேறொரு எருதைக் கொண்டு வந்து வண்டியில் பூட்டிக் கொண்டு சென்ருன். காட்டில் தனியாக விடப்பட்ட கால் ஒடிந்த சஞ்சீவகன் எப்படியோ பிழைத்துக் கொண்டது. காட்டில் செழிப்பாக வளர்ந்திருந்த புல்லைத் தின்று கொழுத்து வளர்ந்ததுடன் காடு முழுதும் யதேச்சையாகச் சுற்றிக் கொண்டிருந்தது.



ஒரு நாள் அந்தக் காட்டுக்கு அரசனை சிங்க ராஜா தண்ணீர் குடிக்கும் பொருட்டு நதிக் கரைக்குச் சென்றது. அங்கே, சிங்க ராஜா இதற்கு முன் கேட்டிராத பேரிடி முழக்கம் போன்ற ஒரு பயங்கரக் குரலைக் கேட்டு பயத்தினல் தண்ணீர் குடிக்காமலேயே திரும்பி விட்டது. சிங்க ராஜாவுக்கு இரண்டு நரிகள் மந்திரிகளாயிருந்தன. நரி மந்திரிகளுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தன. அந்தக் குமார நரிகள் இரண்டும் எருதின் குரல் கேட்டுச் சிங்க ராஜா பயந்து தண்ணீர் குடிக்காமல் ஓடும் அதிசயத்தைப் பார்த்து விட்டுத் தங்களுக்குள் பேசிக் கொண்டன:

"சிங்க ராஜா என் பயந்து ஓடுகிருர்?" என்று தமனகன் என்ற நரி கரடகன் என்னும் நரியைப் பார்த்துக் கேட்டது.

கரடகன் என்ற நரி "நமக்கேன் அந்தக் கவலே? கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் என்னத்திற்கு? நாம் இங்கே வந்தது இரை தேடுவதற்கல்லவா? வா, போகலாம்" என்றது.

தமனகன் "ராஜாவுக்கு நம்மால் இயன்ற உதவியைச் செய்வோம்; இரை தேடுவதும் வயிறு வளர்ப்பதும் தான் முக்கிய காரியமா? நாய் கூடத்தான் இரை தேடி உயிர் வாழ்கின்றது. உயிர் வாழ்வது தானு பெரிது? புகழோடு உயிர் வாழ்வது தான் சிறந்த வாழ்க்கை. ஆகையால் ராஜ காரியம் பாத்துப் பெருமையுடன் வாழ்வதே நல்லது" என்றது.

"நீ வீணை மனோராஜ்யம் செய்கிருய்; உனக்கு ராஜ சேவை கிட்டுமா? ராஜா உன்னை லட்சியம் செய்யமாட்டார். அரசனையும், பாம்பையும், நெருப்பையும் அண்டும்போது மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்' என்று கூறியது கரடகன்.



தமனகன், “ நல்லது ; நான் என்னுடைய சாமர்த்தியத்தினால் சிங்க ராஜனை அணுகி சிநேகம் செய்கிறேன் பார்; பறவைகளுக்கு எது தூரம்? வித்வானுக்குப் பரதேசம் எது? பிரியமாகப் பேசுகிறவர்களுக்குச் சத்துரு யார்?” என்று கூறி விட்டுப் புறப்பட்டது.

சிங்க ராஜாவை அணுகிய தமனகன் வணக்கத்துடன் நின்றது. சிங்க ராஜா உடனே தமனகனைப் பார்த்து “எங்கே வந்தாய்?” என்று கேட்டது.”

அரசனே! என்னைச் சிறு நரி என்று அலட்சியம் செய்ய வேண்டாம். சிறு துரும்பும் பல் குத்த உதவும்; ஆகையால் என்னாலும் தங்களுக்குப் பெருமை ஏற்படும். “வாள் முதலிய ஆயுதங்களும், வீணை முதலிய வாத்தியங்களும், பூமியும், ஸ்திரீகளும், சாஸ்திரங்களும் தாமாகவே பெருமை அடைவதில்லை. இவையாவும் அவற்றை ஆள்பவர்களாலேயே புகழும் கீர்த்தியும் பெருகின்றன” என்றது தமனகன்.

“ சரி; நீ இப்போது சொல்ல வந்த முக்கிய விஷயம் என்ன?” என்று சிங்க ராஜா கேட்டது.

“ தாங்கள் தண்ணீர் குடிக்க நதிக் கரைக்குச் சென்ற சமயம் ஒரு பேரிடி முழக்கம் போன்ற குரலைக் கேட்டு பயந்து ஓடி வந்து விட்டீர்கள் அல்லவா?”

“ ஆமாம்; ஆமாம்; அதை இப்போது நினைத்தாலும் பயமாயிக்கிறது. இதுவரை இந்தக் காட்டுக்கு நான்தான் அரசன் என்று எண்ணி வந்தேன். இனி அதற்கு ஆபத்து ஏற்படும் போலிருக்கிறது. அவ்வளவு வலிமை பொருந்திய அந்தப் பிராணி யார் என்று உனக்குத் தெரியுமா?” என்று ஆவலோடு கேட்டது சிங்க ராஜா.

“ அரசனே! வெறும் சப்தத்தைக் கேட்டு பயந்துவிடக் கூடாது. தாங்கள் உத்தரவு கொடுத்தால் இப்போதே சென்று அந்தப் பிராணி

யார் என்பதை அறிந்து வருகிறேன்'' என்று கூறியது தமனகன்.

சிங்கம் உத்தரவு கொடுத்ததும் தமனகன் எருதினிடம் சென்று விஷயத்தைச் சொல்லி சஞ்சீவகன் என்னும் எருதுக்கும் சிங்கத்துக்கும் சிநேகம் செய்து வைத்தது. அன்று முதல் சிங்கமும் எருதும் காட்டில் மிகவும் அந்நியோன்யமாக வாழ்ந்து வந்தன.

இதைக் கண்ட தமனகனும், கரடகனும் சிங்கமும், எருதும் சிநேகமா யிருப்பதைச் சகிக்காமல் மித்திர பேதம் செய்து அவற்றின் சிநேகத்தைக் கெடுக்கத் தொடங்கின.

(தொடரும்)

வேடிக்கைக் கணக்கு



எதிரிலுள்ள பெரிய வட்டத்தில் ஒவ்வொரு நேர்க்கோட்டிலும் மூன்று சிறு வட்டங்கள் இருக்கின்றன அல்லவா? வட்டங்களிலுள்ள மூன்று எண்களையும் கூட்டினால் பத்தொன்பது வருகிறது. எந்த மூன்று எண்களை வேண்டுமானாலும் கூட்டிப் பார்க்கலாம். ஒரே மாதிரி எண்ணிக்கைதான் வரும்.

இந்த எண்களை மாற்றி அமைத்து எந்த நேர்க்கோட்டிலுள்ள மூன்று எண்களைக் கூட்டினாலும் இருபத்தாறு வரும்படி செய்ய வேண்டும். முடியுமா பாருங்கள்.

[விடை அடுத்த இதழில்]

மூலம் : கவி ரவீந்திரநாத் டாகூர்

மொழிபெயர்ப்பு : **"பார்த்தன்"**

முதல் அத்தியாயம்

விதேசப் பிரயாணம்

வங்காளப் புரட்சி இயக்கத்தில் ஈடுபட்டவன் நான். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஆகர்ஷண சக்தி என்னை அந்தமான் தீவு வரை இழுத்துச் சென்றது. அங்கிருந்து நான் படாத பாடு பட்டு, ஸி. ஐ. டி. போலீஸ் புலிகளின் மோப்பத்துக்கும் வலைகளுக்கும் தப்பி, ஏதோ கோணல்மாணல் வழியாக ஆப்கனிஸ்தானுக்குப் போய்ச் சேர்ந்தேன். அங்கிருந்து கப்பலோட்டிகளோடு கப்பலோட்டியாக அமெரிக்காவை அடைந்தேன். அப்போது என் தேகத்தின் ஒவ்வொரு தசை நாரிலும் கிழக்கு வங்காளிகளின் வீரம் துடித்துக் கொண்டிருந்தது.

"பாரதமாதாவின் கை விலங்குகளை அறுத்தெறிய உடலில் உயிருள்ள மட்டும் உழைக்க வேண்டும்; அந்த விலங்கின் மீது அரம் கொண்டு அராவியபடியேதான் இருக்க வேண்டும்" என்று என் மனம் சதா எண்ணமிட்டுக் கொண்டே இருந்தது.

ஆனால், அயல் நாட்டு அனுபவத்தின் முதற்படியிலேயே எனக்கொரு புது ஞானோதயமாயிற்று. நாங்கள் இதுவரை புரட்சி வேலை என்று பிரமாதமாகச் சொல்லி வந்ததெல்லாம் வெறும் பட்டாசு சுடும் வேலைதான் என்பதை நான் தெரிந்து கொண்டேன். அதனால் என்னுள் எரிந்தும் அவிந்தும் புகைந்து கொண்டும் இருந்த பாழும் விதி ஒரேயடியாகப் பற்றி எரிய ஆரம்பித்தது.

ஆனால், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் உயர்ந்த சிம்மாசனத்தின் மீது அதன் சிறு பொறி கூட விழவில்லை!

அப்போது ஐரோப்பாவில் பயங்கர மஹா யுத்தம் ஆரம்பமாயிற்று! அதைப் பார்த்ததும் பயங்கரப் புரட்சி வேலையை—தன் குடிசையிலேயே தீ வைத்துக் கொள்வது போல்—ஆரம்பிக்க வேண்டுமென்ற கொஞ்சநஞ்சமிருந்த என்னுடைய எண்ணமும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது!

பகவான் கொடுத்த கை நகங்களை ஆயுதமாக நம்பிப் போர் முழக்கம் செய்வது பைத்தியக்காரத்தனம்! நிமிஷத்துக்கு நிமிஷம் விஞ்ஞானத் துறையில் முன்னேறி வரும் இன்றைய உலகில் எவ்வளவு தான் பலசாலியாக இருந்த போதிலும் இயந்திரங்களோடு போட்டி போட முடியுமா? 'மெஷின்—கன்'னை எதிர்க்க 'மெஷின் கன்'னைத்தானே நிறுத்த வேண்டும்? 'வீர மரணம்' என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டு போர் முனைக்கு வெகு தூரத்திலேயே குண்டடி பட்டு மடிவது சுலபம்!—ஆனால், அதனால் நமக்கும், நம்முடைய தாய் நாட்டுக்கும் என்ன பயன்?

எனவே 'அடியைப் பிடடா பரதபட்டா' என்று, செய்யும் வேலையை அடிமுதலாகவே சரிவரச் செய்ய வேண்டும்'' என்று முடிவு செய்தேன். அதற்காக நீண்ட பிரயாணமும், கடின சாதனையும் செய்ய வேண்டியிருந்தது.

ஆகையால் தான் நான் இயந்திரத் தொழில் பயில முனைந்தேன். 'போர்டு' மோட்டார் தொழிற்சாலையில் எப்படியோ இடம் பிடித்தேன். பயிற்சி தொடங்கும் போதே ஏதோ பெரிய நிபுணன் போல் வேலை செய்வதாகத் தோன்றி ஊக்கமும் உற்சாகமும் அதிகரித்தது!

ஒரு நாள் எனக்கொரு யோசனை தோன்றிற்று: "நான் யந்திரப் பயிற்சி பெறுவது சுயநலம் கருதி அல்ல; தேசத்தை உத்தாரணம் செய்வதற்காகத் தான் என்பதை 'போர்டு' துரையின் மனதில் பதிய வைத்தால், சுதந்திர தேவியை உபாசிக்கும் மக்கள் நிறைந்த அமெரிக்காவின் டாலர் சிருஷ்டிகர்த்தாவான அந்த ஒரு தலைப் பிரமன் சந்தோஷமடைவார். என் இலட்சியப்பாதையின் இருளை அகற்றிக் கட்டாயம் உதவி புரிவார்'' என்பது தான் அந்த யோசனை.

'போர்ட்' துரையிடம் எண்ணத்தை வெளியிட்டபோது அவர் மெள்ள ஓர் ஏளனப் புன்னகை பூத்து விட்டுப் பதில் சொன்னார்: "என் பெயர் ஹென்ரி போர்ட் என்பது; அதாவது ஒரு பழைய ஆங்கிலப் பெயர். என் ஆங்கிலச் சகோதரர்கள் வேலை செய்யாமல் வெட்டிப் பொழுது போக்குகிறார்கள். அது எனக்குப் பிடிக்கவில்லை. அவர்களை எப்படியாவது தொழில் துறையில் முனையச் செய்வது தான் என் முதல் நோக்கம்.''

அவர் இந்தியர்களையும் இதே மாதிரி ஊக்குவார் என்று நினைத்தேன். ஆனால், இனம் இனத்தைத்தானே சேரும்? பணக்காரர்கள்

பணமுள்ளவர்களின் நலனிலேயே அக்கரை கொள்வார்கள் என்பதைத் தெரிந்து கொண்டேன்!

அது மட்டுமல்ல; இத்தகையவர்களிடம் நான் இயந்திரப் பயிற்சியில் கூட அப்படியொன்றும் பிரமாதமாக முன்னேறி விட முடியாது என்பதையும் உணர்ந்தேன்.

இந்த சந்தர்ப்பத்தில் இன்னொரு விஷயத்திலும் என் கண் திறந்தது. முதலில் இயந்திரப் பயிற்சிக்கு வேண்டியது ஆதாரக் கல்வி என்பதே அந்த விஷயம்.

அன்னை பூதேவி தன் வயிற்றினுள் எத்தனையோ உபயோகமுள்ள புதை பொருள்களை ஒளித்துப் பத்திரமாக வைத்திருக்கிருள். சக்தியுள்ளவர்கள் கஷ்டப்பட்டு அவைகளைக் கண்டு பிடித்துப் பயன்படுத்திக் கொள்ளுகின்றனர். உலகம் முழுமைக்கும் அவற்றை உபயோகப்படும்படியும் செய்கின்றனர்.

பூமியின் மேல் பரப்பில்—அதாவது பூமாதாவின் மடியில்—வறுமையிலடிபட்டு வயிரொட்டி எலும்பும் தோலுமாகக் காட்சி தரும் ஏழைகளின் வயிற்றுப் பாட்டுக்காகச் சில விளைபொருள்களும் விளைகின்றன!

எனவே, நான் எனக்கேற்ற புதைபொருள் ஆராய்ச்சியில் முனைந்தேன்.

* * *

நான் கடற்கரையிலிருந்தபடியே கை கூப்பி "ஜம் சேத்ஜீ டாடா" அவர்களை வணங்கினேன். என் வேலை பட்டாசு சுடுவதல்ல; இப்போது நான் பாதாள உலகின் கற் கோட்டையில் கண்ணம் வைத்தாக வேண்டும்!......பாரதமாதாவின் முந்தானையைப் பிடித்துக் கொண்டு நிற்கும் பெரிய குழந்தைகளோடு நானும் கண்ணீர் பெருகிய வண்ணம் "அம்மா!......அம்மா!..." என்று அழுது புலம்பிக் கொண்டிருக்கப் போவதில்லை.

சுதேசிகளான ஏழை மக்களைக் கையாலாகாதவர்களென்றும் கல்வி அறிவும், கலாசாரப் பண்புமில்லாத அறிவிலிகளென்றும் ஒரு புறம் தூற்றிக் கொண்டு, மற்றொரு புறம் அதே தரித்திர நாராயணர்களுக்கு உரத்த குரலில் புதுப் புது மெட்டுகளில் தேசிய கீத மந்திரத்தை உபதேசித்துக் கொண்டிருக்க மாட்டேன்.

சிறு வயதில் இந்த மாதிரி தேசீயக் கூச்சலை வேண்டிய மட்டும் போட்டிருக்கிறேன். கவிஞர்களின் பொம்மைக் கடைகளில் பக்குவமடையாத தேச பக்திப் பூச்சுப் பூசி விலைக்குத் தயாராக வைத்துள்ள வெறும் மண் பிண்டங்களுக்குப் பஞ்சமே யில்லை! அவைகளின் எதிரில் அமர்ந்து நானும் ஒரு காலத்தில் மாலை மாலையாகக் கண்ணீர் பெருக்கி யிருக்கிறேன். ஆனல் அதெல்லாம் இப்போது பயன்படாது! எதிலும் ஜாக்கிரதையாக புத்தியை உபயோகிக்கும் இந்த தேசத்தில் உண்மையை உள்ளபடி அறிந்து

கசியும் கண்ணைத் துப்புறத் துடைத்து விட்டுக் கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு இலட்சிய சாதனையில் முனையவேண்டும்! இந்தத் தடவை கைகளில் கடப்பாறையையும் மண் வெட்டியையும் பிடித்து தேசத்தின் பாதாள பொக்கிஷத்தைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும்.

கவிஞர்களின் தழதழத்த குரலில் மனதைப் பறிகொடுத்து நிற்கும் மாணவர் சமுதாயத்தால், இந்தக் காரியம் தாய் நாட்டின் சேவைதான் என்பதை ஒரு நாளும் புரிந்து கொள்ள முடியாது.

இரண்டாம் அத்தியாயம்

இலட்சிய வாழ்க்கை

போர்ட் துரையின் தொழிற்சாலையிலிருந்து வெளியேறிய பின்பு புதை பொருள் ஆராய்ச்சியில் ஒன்பது வருஷங்களைக் கழித்து விட்டேன். அந்த நாளில் நான் ஐரோப்பாவின் பல முக்கிய பகுதிகளில் சுற்றியலைந்தேன். சொந்தமாக நான் என் கையாலேயே உழைத்தேன். இரண்டொரு புது இயந்திரங்களையும் கண்டு பிடித்தேன். இவ்வேலைகளில் என்னை ஆசிரியர்களும் ஊக்கினர்கள். தன்னம்பிக்கையின் பலத்தால் என்னை நானகவே வேறு உற்சாகப் படுத்திக் கொண்டேன்.

'மந்திரத்தில் மாங்காய் விழும்' என்று நம்பிக்கொண்டிருந்த என்னுடைய பழைய வாழ்வை நினைக்கும் போது எனக்குச் சிரிப்புத்தான் வந்தது!

என் சின்னஞ் சிறு சுய சரிதையினிடையே இந்தப் பெரிய பெரிய பிரச்னைகளைப் புகுத்த வேண்டியதில்லை. இவைகளை விட்டு விட்டு என் கதையை மட்டும் சொல்லிக்கொண்டு போகலாம்! ஆனால், பேச்சு வாக்கில் இன்னும் ஒரே ஒரு விஷயத்தையும் இங்கே சொல்லி விடுகிறேன்!...

யௌவனத்தின் திளைப்பில், வறண்டுகிடக்கும் வாழ்க்கைப் பாலைவனத்தின் வானவெளியில் பெண்மையின் கவர்ச்சி வர்ண ஜால வேலை செய்யுமே! இலட்சியப் பாதையில் முன்னேறிச் செல்லும் வீரனைப் பிடித்திழுத்து ஆசை வலையில் சிக்க வைத்து அன் பணைப்பில் மெய்ம் மறக்கச செய்யுமே!—அத்தகைய சூழ்நிலைக்கு நான் மட்டும் விதி விலக்கா யிருந்தேன்.





"நான் சந்யாசி; நான் கர்மயோகி" என்றெல்லாம் பலமாகக் கூச்சல் போட்டு என் மனதை என் பிடியிலேயே வைத்திருந்தேன்.

பெண்ணைப் பெற்றவர்கள் வரதட்சணைக் கடனைக் கொடுத்துப் பெண்ணையும் என் கழுத்தில் கட்டிவிட வேண்டுமென்று முனைந்து நின்றபோது—"இதோ பாருங்கள்! உங்கள் பெண்ணுக்கு அகாலத்தில் விதவையாகும் துர்த்தசை இருந்தால் என்னிடம் பேசுங்கள்" என்று கரூராகச் சொல்லி விட்டேன்.

ஆனால், மேல்நாடுகளில் இப்படிப் பெண்ணுறவை அடியோடு விலக்கி விடமுடியாது; அத்தகைய சூழ்நிலை அங்கே இல்லை.

மேலும் நான் அழகுள்ளவன். இதை நானாகச் சொல்லவில்லை. தாய் நாட்டில் இருக்கும் போது எத்தனையோ வாலிபப் பெண்கள் சொல்லியிருக்கிறார்கள். வாய் விட்டல்ல; வாய் மொழியை விட அர்த்தபுஷ்டியும் சக்தியும் வாய்ந்த நயன பாஷையால்தான்!

எனவே, என்னால் அங்கே அசல் கட்டை பிரம்மசாரியாகக் காலந் தள்ள முடியவில்லை. அங்கே என்னை நல்ல புத்திசாலி என்று பாராட்டியதோடு மிகவும் அழகன் என்றும் புகழ்ந்தார்கள்.

என் கதையைப் படிக்கும் வாசக சகோதரர்களின் மனதில் பொறுமையை உண்டுபண்ணத் தக்க எத்தனையோ சூழ்நிலைகள் எனக்கேற்பட்டிருக்கின்றன; ஆனால், சத்தியமாகச் சொல்லு

கிறேன். அத்தகைய சம்பவம் ஏதும் நடைபெற்று விட வில்லை. காரணம், நான் என் மனதைக் கல்லாக்கிக் கொண்டு இலட்சிய வழியில் செலுத்தியது தான். மேற்கு வங்காளத்துக் குஷிப் பேர்வழிகள் ஒருவேளை என்னை அழகனென்றும் அப்பாவி யென்றும் கருதலாம். ஆனல், கண்ட கண்ட பெண்களோடெல் லாம் காதல் கொண்டு, பிறகு சமயத்துக்கேற்றுற் போல் அதை மறந்து விடுவதோ முறித்து விடுவதோ என் இயல்பல்ல என் பதை அவர்கள் அறிவார்களோ என்னவோ?

என்னைப் பற்றி எனக்கு நன்கு தெரியும். இலட்சிய சாதனைக் காக நான் எவ்வளவோ கஷ்டப் பட்டிருக்கிறேன். இன்றளவும் நான் என் திடசங்கல்பத்துக்கு அடைக்கலமாக இருக்கிறேன். ஒரு அடி சறுக்கினல் போதும், நான் என் இலட்சியத்தோடு கூட உருண்டு விழுந்து மலைப்பாறையில் மோதி உயிரை விட வேண்டியதுதான்.

ஒன்று, இலட்சியப் பாதையில் சென்று வெற்றிச் சிகரத்தை எட்டிப் பிடிக்க வேண்டும்; அல்லது குறி தவறிக் கீழே விழுந்து குற்றுயிராய் மடிய வேண்டும். இவையன்றிவேறு வழி இருப்பதாக என் அறிவுக்கு எட்டவில்லை.

மேலும், நானே கிராமவாசி; பெண்களைக் கண்டால் வெட்கமடைவதும் சங்கோசப் படுவதும் என் பிறவிக் குணங்கள். அதனல்தானே என்னவோ, பெண் மீது காதல் கொள்வதைப் பெருமையாகக் கருதுகிறவர்களை என்னல் கண்ணிய புருஷர்களாகக் கருத முடிவதேயில்லை.

மூன்றும் அத்தியாயம்

கண்டெடுத்த கடிதம்

அயல் நாட்டில் படித்து வந்த எனக்கு நல்ல 'டிக்ரி' கிடைத்தது. ஆனால், அதற்குத் தக்க உபயோகம் ஏதாவது சர்க்கார் உத்தியோகம் பார்ப்பது தானே ?

நான் சின்ன நாகபுரத்தில் ஒரு சந்திர வம்சத்து ராஜா விடம் (பெயர் சண்டி வீர சிம்மன் என்று வைத்துக் கொள்ளுங்களேன்) வேலைக்கமர்ந்தேன். அதிருஷ்ட வசமாக அவருடைய பிள்ளை தேவிகா பிரசாத் கொஞ்ச காலம் கேம்பிரிட்ஜில் படித்துக் கொண்டிருந்தார். எதிர்பாராத விதமாக ஜ்யூரிச்சில் அவரோடு எனக்குச் சந்திப்பும் தொடர்பும் ஏற்பட்டது. நான் பிரபல மாணவன் என்பது அவருக்கு முன்பே தெரியும். என் திட்டத்தை அவரிடம் சமர்ப்பித்தேன். அவர் எல்லையில்லா மகிழ்ச்சியும் உற்சாகமுமடைந்தார். தம்முடைய சமஸ்தானத்திலேயே என்னை 'ஜியாலாஜிகல் ஸர்வே' வேலையில் அமர்த்தி விட்டார். இந்த வேலைக்கு இதுவரை யாராவதொரு வெள்ளைக்காரனைத் தேடிப் பிடிப்பது தான் வழக்கம். அந்தச் சம்பிரதாயத்தை மாற்றிய தால் வாயு மண்டலம் வரையில் ஒரு பெருங் கலக்கம் ஏற்பட்டது. தேவி பிரசாத் கொஞ்சம் கண்டிப்பான பேர்வழி. எனவே, கிழத் தந்தையின் (மகாராஜா) திருவுள்ளக் கலக்கம் என்னை ஒன்றும் செய்ய முடியவில்லை.

இங்கே நான் புறப்பட்டு வரும் போது என் தாயார் "அப்பா!...வேலை யென்னவோ நல்லதாகக் கிடைத்து விட்டது; நல்ல பெண் ஒருத்தியைக் கல்யாணம் செய்து கொண்டு இந்தக் கிழவியின் வெகு நாளைய மனக்குறையையும் போக்கி விடேன்!" என்று கெஞ்சினள்.

"அதாவது, கிடைத்த வேலைக்கும் கை கழுவி விடச் சொல்கிருயா? என் வேலைக்கும் விவாகத்துக்கும் ஒத்து வராதம்மா...!" என்று நான் பதில் சொல்லி விட்டேன்.

என் சங்கல்பம் திடமாகவே இருந்தது. எனவே அன்னையின் கண்ணீருப் வேண்டுதலும் வீணாயின. எனக்கு வேண்டிய இயந்திர சாதனங்களையும் உப கருவிகளையும் கட்டி எடுத்துக் கொண்டு நான் காட்டுக்குப் புறப்பட்டு விட்டேன்.

இம் மண்ணுலகினுள்ளே மறைந்து ஒளிந்து கொண்டிருக்கும் கற்குவியல்களைத் தோண்டி யெடுத்து அவைகளுடன் விஞ்ஞான ஆராய்ச்சி செய்தபடியே வன வனந்திரங்களில் அலைந்து திரிந்து கொண்டிருந்தேன்.

அன்று வானவெளி கல்யாண முருங்கைப் பூவைப் போலச் சிவந்து போதையேறிக் கிடந்தது. தேக்கு மரங்களின் சின்னஞ் சிறு கிளைகளில் பூங்கொடிகள் மந்தமாருதத்தின் உதவியால் ஊஞ்சலாடிக் கொண்டிருந்தன.

பாட்டாளி மக்கள் அரக்கையும், இலந்தை இலைகளிலிருந்து பட்டுப் பூச்சியையும், இலுப்பைக் கொட்டைகளையும் சேகரிப்பதில் முனைந்திருந்தார்கள்.

சிலம்பொலியுடன் சிரித்துக் குதித்து ஆடிப்பாடிய வண்ணம் ஒரு சிற்றாறு நாட்டிய ராணி போல் எதிரில் தோன்றிற்று. இவ் வழகிய நெஞ்சை யள்ளும் மலையருவிக்கு நான் "தனிகா" என்று பெயர் சூட்டினேன்.

நான் வந்திருக்குமிடம், தொழிற்சாலையோ கலாசாலை வகுப்போ அல்ல; இது மகாராணி நிசாதேவியின் தர்பார் ஆரம்பமாகி விட்ட தென்பதை அறிவிக்கும் அந்தி சுந்தரியின் சந்திப்பு வேளை!......இந்த இடத்தில் தனித்திருப்பது தெரிந்தால் போதும்; ......மஹா ஜாலக்காரியான இயற்கை தேவி வர்ண நீரைக் கொட்டி வண்ணப் பௌடரைப் பூசி வலியத் தன் வழிக்கு இழுத்துப் போய் விடுவாள்.

உணர்ச்சி வெறி உள்ளத்தைத் தொட்டது; வாலிபத் திமிர் வாய்ப்பை எதிர் பார்த்தது. வேலையில் சுறு சுறுப்பு மங்கி சோம்பேறித்தனம் தலையெடுத்து நின்றது. எனக்கே என் மீது அடங்காக் கோபம் வந்தது. உணர்ச்சி வெள்ளத்தை எதிர்த்து இலட்சியக் கப்பலை ஓட்டினேன்.

இந்த தேசத்தில் வீசும் குளிர்ந்த காற்றின் தன்மையே இது தான். இது வெளியே வீசும் போதே உள்ளே புகுந்து நம் ரத்தத்தில் உறைந்து......"தோற்று விடு!......தோற்று விடு" என்று திருட்டு மந்திரம் ஓதுகிறது. இதைச் சும்மா விட்டுவிடக் கூடாது. நன்கு உழைத்து வியர்வை மந்திரம் கொண்டு விரட்டியடிக்க வேண்டும்.

பகல் பொழுது குறைந்து கொண்டே வந்தது. சிற்றாறு நடுவில் இருந்த மணல் திட்டை விட்டு இரு கிளைகளாகப் பிரிந்து செல்லும் இடம். அந்த மணல் தீவில் கொக்குகள் அணி வகுத்தாற் போல் ஆடாமல் அசையாமல் நின்றிருந்தன. அந்தி மயங்கும் வேளை. இது எப்போதும் என்னை 'வேலை செய்தது போதும்; ஓய்வெடுத்துக்கொள்' என்று எச்சரிப்பது வழக்கம். அதன் சமிக்ஞையைப் புரிந்து கொண்டு கைப் பையில் மாதிரிக் கற்களை நிரப்பிக்கொண்டு திரும்பி வந்து கொண்டிருந்தேன்.

என் 'லெபரேட்டரி'யில் இந்தக் கற்களை ஆராய்ந்து பார்ப்பேன். அந்தி வேளையில் மனம் வெறிச் சென்றிருக்கும். இன்று எனக்குக் கிடைத்த கற்களில் ஒரு பகுதியில் 'மைன கேனீஜி'ன் அறிகுறி தென்படுவது போலிருந்தது. எனவே நான் வழக்கத்தை விட அதிக உற்சாகத்துடன் விரைந்து வந்து கொண்டிருந்தேன்.

செக்கர் வானத்தை அவசர அவசரமாக அளந்து கொண்டு காகங்கள் கூடு நோக்கிப் பறந்து கொண்டிருந்தன. என்னுடைய

சொந்த வேலையைக் கவனிக்க நான் அவசர அவசரமாக வந்து கொண்டிருந்த போது வழியில் ஒரு தடை குறுக்கிட்டது. காட்டு வழியிடையே ஒரு மேட்டில் ஐந்து தேக்கு மரங்கள் வரிசையாக நின்றிருந்தன. அவைகளுக்கிடையே தெரிரிந்தும் தெரியாமலும் ஏதோ ஒரு மனித உருவம் போல் தோன்றிற்று. பக்கவாட்டின் தோற்றம்தான் அது.

* * *

மலை வாயில் விழும் சூரியனை மேக மண்டலம் மறைத்துக் கொண்டிருந்தது. அந்த மண்டலத்தையும் துளைத்துக் கொண்டு பரிதியின் இனிய ஒளி சமீபத்திலுள்ள வான வெளியில் வர்ண ஜால வேலை செய்தது. திசைக் கோடியிலுள்ள தேவ மாது முந்தானையில் முடித்து வைத்திருந்த தங்கப் பொடியை வாரி இறைத்தாற் போல் செக்கர் வானத்தின் வண்ணம் மனதை வலிய இழுத்தது. அந்த ஒளி வழியைப் பின்னணியாகக் கொண்டு சிறந்த கலைஞனின் உயிரோவியம் போல ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். தேக்கு மரத்தின் அடிப்பாகத்தை உதைத்துகொண்டு இரு கால்களையும் மார்புக் கருகே மடித்து வைத்துக் கொண்டு அவள் தன்னையும் மறந்து 'டயரி' எழுதுவதில் முனைந்திருந்தாள்.

இத்தகைய காட்சியைக் காணும் சந்தர்ப்பம் அதிர்ஷ்ட வசமாகத்தான் ஏற்படுகிறது. மரத்தின் மறைவில் நின்றபடியே நான் உற்று நோக்கினேன். என் இதயத்தினடியில் நன்றாக நினைவில் வைக்க வேண்டிய புதியதொரு ஒளி வீசிற்று. என் வாழ்வில் எத்தனையோ கவர்ச்சிகரமான கட்டங்களில் என் மனம் வீழ்ச்சியின் படியை நெருங்கி யிருக்கிறது. ஆனால் அப்போதெல்தாம் நான்—

தமிழ்ப் பேரறிஞர்

டாக்டர் மு. வரதராசனார்

அவர்கள் எழுதும்

இலக்கியக் கட்டுரைகள்

அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து

வெளிவரும்

அதை வலிய இழுத்துக் கொண்டு இலட்சியப் பாதையில் முன்னேறி யிருக்கிறேன் ...ஆனால், இன்று வாழ்வின்பத்தின் எல்லையை எட்டிவிட்டதைப் போலவும், பிறவிப் பயன் பெற்று விட்டாற் போலவும் எனக்குத் தோன்றிற்று. இம் மாதிரி எண்ணுவதும், வாய் விட்டுச் சொல்வதும் என் இயல்புக்கு முற்றிலும் முரண்பட்டவை.

ஆனால், இதென்ன விபரீதம்!

எப்போதுமே என்னை நான் திடசித்தமுள்ளவன் என்றும் உணர்ச்சி வசப்படாதவன் என்றும் எண்ணி வந்தேன். ஆனால் திடீரென்று என்னைப் பரம ரஸிகனாகவும் சபல சித்தனாகவும் நிரூபிக்கும் ஊற்று என் இதயத்திலிருந்தே வெளிப்பட்டு விட்டது.

ஏதாவது பேச வேண்டும் போலிருந்தது; ஆனால் மனிதப் பிறவியோடு நெருங்கிய தொடர்பு கொள்ள முதன் முதலாக என்ன வார்த்தை பேச வேண்டு மென்பது எனக்குத் தெரியவில்லை. கிறிஸ்துவ புராணங்களில் சிருஷ்டியின் முதல் வார்த்தை இதுதான்: "ஒளி மிளிர்ந்தது; புரியாதது புரிந்து விட்டது!"

அந்தப் பெண், அவள் உண்மைப் பெயர் பின்பு எனக்குத் தெரிந்தது. ஆனால் அதை நான் வெளியிடமாட்டேன். எனவே அவளுக்கு * "அசிரா" என்று புனை பெயர் சூட்டுகிறேன். எனக்குத் திடீரென்று அந்தப் பெயர் தான் மின்வெட்டுப் போலத் தோன்றிற்று. அவளும் **மின்னல் கொடி** போலவே தானிருந்தாள். எனவே நான் வைத்த பேர் மிகப் பொருத்தந்தான். ஆமாம்; அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்ததும் மரத்தின் மறைவிலிருந்து நான் பார்ப்பதைத் தெரிந்து கொண்டு விட்டாளென்றே தோன்றிற்று.

அவள் டயரி எழுதுவதை என்னவோ நிறுத்திவிட்டாள்; ஆனால் எழுந்து விடவில்லை. மோகனப் புன்கையுடன் அப்படியே தான் உட்கார்ந்திருந்தாள். ஒரு வேளை எழுந்திருந்தால் அந்த இடத்தை விட்டு ஓடிவிட வேண்டுமே என்றுதான் எழுந்திருக்கவில்லையோ, என்னவோ?

"மன்னித்து விடுங்கள்!" என்று இப்படிப் பேச்சைத் தொடங்கலாமா வென்று யோசித்தேன். ஆனால், எதற்காக மன்னிப்புக் கேட்பது?...குற்றமே செய்யாமல் எங்கேயாவது மன்னிப்புக் கேட்க முடியுமா என்ன?

பிறகு அவளிருக்கு மிடத்திற்குச் சிறிது தூரத்தில் சீமைப்பிடி போட்ட மண் வெட்டியால் ஏதோ வெட்டி எடுப்பவன் போல் நடித்தேன். கையில் கிடைத்த இரண்டொரு கூழாங் கற்களைப் பொறுக்கிப் பையில் போட்டுக் கொண்டேன். அவை எந்த

---

* 'அசிரா' என்பதற்கு நிலையற்ற "சஞ்சலை" என்று பொருள். 'சஞ்சலை' என்றால் மின்னல் என்று பொருள்.

ஆராய்ச்சிக்கும் உபயோகமற்றவை என்பது எனக்கு நன்கு தெரியும். பின்பு கீழே குனிந்தபடியே என் விஞ்ஞான திருஷ்டியால் ஆராய்ந்து கொண்டே மெள்ள மெள்ள முன்னேறினேன். ஆனால் யாருடைய கவனத்தைக் கவரும் நோக்கத்துடன் இப்படியெல்லாம் சங்கடப் பட்டேனோ அந்தப் பெண் இந்த மறைமுக அழைப்பை ஏற்றுக் கொள்ள வில்லை.

மோகப் பித்துப் பிடித்த ஆடவரின் இதய பலவீனத்தை அறிய அவளுக்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைத்திருக்கலாம். என்றாலும் நான் ஒரேயடியாக நிராசை அடைந்து விடவில்லை. இந்த முற்றுகையை இன்னும் கொஞ்சம் நீடிக்க விட்டால்?...... அப்போது அவள் என்ன செய்வாள்? கிறீச்சிட்டுக் கூக்குரலிடுவாளோ?...அல்லது அப்படிச் செய்வதாகப் பாசாங்கு செய்வாளோ?

இவ்வாறெல்லாம் மனதைத் தளர விட்டபடி நான் என் கூடாரத்தை நோக்கித் திரும்பி வந்து கொண்டிருக்கும்போது, இரண்டாகக் கிழிக்கப்பட்டு கீழே விழுந்து கிடந்த காகிதக் கவர் ஒன்று என் கண்ணில் தென்பட்டது. இந்தக் காகிதத் துணுக்குகள் ஜியோலாஜி ஆராய்ச்சிக்கு உபயோகப் படமாட்டா என்பது உண்மைதான்; என்றாலும் நான் அவைகளை எடுத்து ஒன்று சேர்த்துப் பார்த்தேன்.

"பவ தோஷ் மஜூம்தார். முகாம்: சப்ரா."

என்று அக்கடிதத்தில் விலாசம் எழுதப்பட்டிருந்தது. கையெழுத்து பெண்ணுடையது போலிருந்தது. ஸ்டாம்பு ஒட்டியிருந்தது. ஆனால் போஸ்டு செய்யாமலே கிழித்து எறிந்து விட்டதால் தபால் ஆபீஸ் முத்திரை விழவில்லை. சரிதான்; அந்த விலாசதாருக்கும் இந்தப் பெண்ணுக்கும் ஏதோ நெருங்கிய இதயத் தொடர்பு இருக்க வேண்டும். என் விஞ்ஞான மூளைக்கு இந்தக் கிழிந்த கடிதக் கவரில் ஏதோ ஒரு சோக நாடகத்தின் அறிகுறி தென்படுவதாகத் தோன்றியது. இந்நில வுலகில் வெடிப்புகளை ஆராய்ந்து அவைகளின் சோகக் கதையைக் கண்டு பிடிப்பது தானே என் போன்றவர்களின் வேலை? அதே வேலையில் பழக்கப் பட்ட என் கைகள் எப்பாடு பட்டாவது இந்தக் கிழிந்த கடிதத்தி லுள்ள மர்ம வாழ்க்கையைக் கண்டு பிடிப்பதென்று பிரதிக்ஞை செய்து கொண்டன.

இன்னொரு புறம் என் சொந்த இதயத்தின் திடீர் மாறுதல் மர்மத்தையும் நான் ஆராய வேண்டி யிருந்தது. ஒவ்வொரு சமயத்தில் இந்தப் பொல்லாத மனம் என் சுபாவத்தையும் இலட்சியத்தையும் அடியோடு மறந்து விட்டு முற்றும் புதிய வழியில் இறங்கி விடுகிறது. அதைக் கண்டு நானே திடுக்கிடும்படி நேரிடுகிறது. இன்று வரை பல கஷ்டங்களிடையே நான் ஊரை விட்டு ஊராக என் வாழ்வின் இலட்சியத்தைத் தேடி அலைந்தபோது அது பரி

பூர்ணமாக ஒத்துழைத்திருக்கிறது. எனவே, இதுவே தான் என் உண்மை இயல்பென்று எண்ணி யிருந்தேன். என் இயல்பைச் செயலில் காட்டும் விஷயத்தில் மற்றவர்களிடம் நான் சபதம் செய்யவும் தயாரா யிருந்தேன். ஆனால் அதே சுபாவத்தின் அடித்தளத்தில் அறிவாட்சிக்கு அடங்காத தொரு மடமை குடி கொண்டிருக்கிறதே!...இதற்கு நான் என்ன செய்வேன்?...

காட்டின் நடுவே கூட ஒரு மாயா மோஹினி உண்டு; அவள் அரசாட்சியில் மரங்களும் இலைகளும் சதியாலோசனை செய்கின்றன. அங்கே ஆதி சிருஷ்டிக்குட் பட்ட ஜீவாத்மாவின் மந்திரம் ஒலித்த வண்ண மிருக்கிறது. அந்த உரத்த குரல் நடுப் பகலின் வெறிச்சோட்டத்தில் "ஙொய் ஙொய்" என்று ரீங்கார மிடுகிறது. நள்ளிரவின் நிச்சந்தடியில் அதே குரல் இனிமையாக மாறி ஜீவராசிகளின் உணர்வில் புகுந்து மனிதனை மோக வலையில் வீழ்த்துகிறது.

ஜியாலஜிக் கல்வி ஆராய்ச்சியோடு கூட இந்த வனமாயையும் ஆராயப்பட வேண்டும். கரடு முரடான கற்களினுள்ளே துளி ரேடியமாவது கிடைக்காதா என்ற சபலத்துடன் கல்லிலும் முள்ளிலும் அலைந்து கொண்டிருக்கும் இந்நாளில், பூத்த தேக்கு மரங்களின் நிழலில், மலைவாயில் விழும் பரிதியின் ஒளியில் பூங்கொடி அசிராவை நான் கண்டேன். இதற்கு முன்பு எத்தனையோ வங்காளிப் பெண்களைப் பார்த்திருக்கிறேன்; ஆனால் எல்லாப் பெண்களையும் விட்டுத் தனியாக முழு சுதந்திரத்துடன் இப்படி ஏகாந்தமாக இவளைப் பார்க்கும் வாய்ப்பு இப்போதுதான் கிடைத்தது. இங்கே இவளது பொன் வண்ணத் தேக காந்தியோடு காட்டுப் பூக்கள் தங்கள் மௌன பாஷையின் மாதுர்யத்தையும் சேர்த்து அழகு செய்கின்றன.

அயல் நாட்டு அழகிகளை ஏதேஷ்டமாகப் பார்த்திருக்கிறேன். அவர்களில் சிலர் பிரமனையே வியப்பிலாழ்த்தும் பேரழகிகள் கூட. ஆனால் இந்த வங்காளப் பெண்ணின் சௌந்தர்யத்தைக் காணும் போது என் வாழ்வில் பெண் என்பவளையே இப்போது தான் முதன் முதலாகப் பார்ப்பது போல் பிரமை தோன்றுகிறது.

இவள் யார்?...தலைப் பின்னலைச் சாட்டை போல் சுழற்றிய படி "டயோ ஸீசன்" போன்ற தற்கால ஸ்தாபனத்தில் படித்து வருகிறவளா?...இல்லை.

"பேதுன்" காலேஜில் 'டிக்ரி' வாங்கினவளா? இல்லை. "பானீ கஞ்" சின் டென்னிஸ் பார்ட்டிகளில் கல கல வென்ற நகையுடன் தேநீர் வார்ப்பவளா? இல்லை; யார் இவள்?

எனக்கொன்றும் தெரியவில்லை. வெகு காலத்துக்கு முன்பு சின்னஞ் சிறு வயதில் யாரோ ஹரு டாகுரோ, இமவஸுவோ பாடிய பாட்டை நான் கேட்டதுண்டு. அந்தப் பாட்டு முழுவதும் எனக்கு ஞாபகமில்லை. அது எப்போதோ மறந்து போய் விட்டது.

அதை நாளது வரை யாரும் ரேடியோவில் பாடவில்லை; கிராம போனில் ரிகார்டு செய்யவுமில்லை.

என்ன காரணமோ, இவளைப் பார்த்ததும் அந்தப் பாட்டின் அதிதேவதையே இப்படிப் பெண்ணுருவில் எதிரில் வந்திருக்கிறதோ என்று தோன்றிற்று. அந்த இசையிலுள்ள உருக்கமே இவ்வாறு உரு வெடுத்துக் கண்ணெதிரே வந்திருப்பது போல் தோன்றிற்று.

இன்று என் வாழ்வில் இது கூட சகஜமாகி விட்டது!... ஆக லாமா?... ஆக முடியுமா?

ஜியாலஜிக் சாஸ்திரம் படித்தேன். அதில் 'பூமியின் அடித் தளத்தில் மறைந்து கிடைக்கும் அக்னிப் பொருள்கள் திடீரென்று பூகம்ப அதிர்ச்சியில் தாக்குண்டு வெடிப்புகள் வழியாக வெளி யேறும்' என்று சொல்லி யிருக்கிறது. இன்று என் இதயத்தின் அடித்தளத்திலேயே இருளில் மறைந்து கிடந்த தாபத் துணுக்குகள் திடீரென்று வெளிக் கிளம்பி விட்டனவே!

கட்டை பிரம்மசாரியும், உண்மை விஞ்ஞானியுமான இந்த நீல மாதவனின் கல்நெஞ்சம் இப்படிக் கலங்கி விடுமென்று கனவிலும் கருதியதில்லையே!

நாலாம் அத்தியாயம்

அந்தி சுந்தரி

தினந்தோறும் மாலை நேரத்தில் என் வேலை முடிந்து இந்த வழி யாகத் திரும்பிச் செல்லும் போது அவள் என்னைப் பார்த்து வந்திருக்கிறாள் என்பது தெரிந்தது. சதா சர்வகாலமும் சிந்தையில் ஆழ்ந்தபடியே இருப்பதால் நான் அவளை இது வரை கவனிக்க வில்லை.

மேல் நாட்டுக்குப் போய் வந்தது முதல் என் நடையுடை பாவனைகளில் என்னையுமறியாமல் ஒரு மிடுக்கு ஏறி யிருந்தது. "வெரி ஹேண்ட்ஸம்!" என்று காதோடு காதாகப் பேசும் புகழ் மொழி கேட்டு எனக்கு வழக்கமாகி விட்டது. ஆனால் அயல் நாட்டிலிருந்து திரும்பி வந்த சில நண்பர்கள் சொல்லக் கேட்டிருக் கிறேன். வங்காளிப் பெண்களின் ரஸிகத் தன்மையும் போக்கும் விசித்திரமா யிருக்குமாம். அவர்கள் ஆடவர்களிடம் பெண்க ளுக்குள்ள அழகிய தோற்றத்தையும் மிருது சுபாவத்தையுமே விரும்பி வர வேற்கிறார்களாம்.

"குமரனைப் போல் அழகிய முகம்" என்று ஆண்களை வர் ணிப்பதுண்டு. வங்காளிகள் குமரனைப் போல் இருப்பார்களோ மாட்டார்களோ தெரியவில்லை ஆனால் அவர்களிடம் வீர புருஷ னுக்கு வேண்டிய கம்பீரத் தோற்றமும் தேவேந்திரனின் தேஜ ஸும் கிடையாது என்பது மட்டும் நிச்சயம்.

வெயிலில் அலைந்து திரிந்து என் இயற்கையான நிறம் மாறி யிருக்கிறது. கல்லையும் மண்ணையும் வெட்டிக் கைகள் காடுமுர டாகியிருக்கின்றன.

என்றாலும் என்னை அழகன் என்று சொல்கிறார்கள். என் பார்வை கூர்மையானதாம். மூக்கு, முகவாய், நெற்றி—எல்லாம் சேர்ந்து என் முகம் அழகாயிருக்கிறதாம். பார்த்த உடனேயே 'இவன் ஒரு வீரன்' என்று சொல்லிவிட முடியுமாம்.

இந்த விஷய மெல்லாம் என் இதயத்தில் புகுந்து என்னை ஆத்திரமடையச் செய்தன. உட்கார்ந்தபடியே நான் கற்பனையில் அசிராவோடு சண்டை பிடிக்கத் தொடங்கினேன்.

"நீ அழகனென்று நினைத்துக்கொண்டிருக்கிறாயே, அவன் ஓர் உதவாக் கரை. நீ வேண்டுமானால் அவனை வாழ்த்தலாம்; ஆனால் அந்த அப்பாவி அதிக நாள் நிலைத்திருக்கமாட்டான். நான் சாதாரண மனிதனல்ல......எத்தனையோ தேசங்களில் சுயம்வர மண்டபங்களில் பூங்கொடிகள் கரகமலங்களிலேந்தி வந்த சுயம்வர மாலையை நிராகரித்து விட்டு வந்தவன். என்னை நீ அலட்சியம் செய்து விடுவாயா, அசிரா?......"

இப்படிப் பலவந்தமாக, ஒருதலைப்பட்சமாக ஒருத்தி மேல் காதல் கொண்டு இவ்வாறெல்லாம் கற்பனையில் சந்தித்துச் சண்டை பிடிப்பது சிறு பிள்ளைத்தனம். இதை நினைத்த போது எனக்கே என் வாலிபத் திமிர் மீது சிரிப்பு வந்தது.

இன்னொருபுறம் விஞ்ஞானியின் தர்க்க புத்தியும் உள்ளுக்குள்ளேயே தன் வேலையைச் செய்து வந்தது. அதுவும் எனக்குச் சாதகமாகத்தான்.

"இதைக் கொஞ்சம் கவனி......அவள் அடிக்கடி நீ நடமாடும் அதே வழியில் வந்து உட்காருகிறாள். இயற்கையழகைத் தனிமையில் கண்டு களிக்க வேண்டு மென்ற விருப்பமிருந்தால் அந்த இடத்தைத் தவிர வேறு இடமே அவளுக்குக் கிடைக்காதா? வேறு எங்கேயாவது இதை விட நல்ல இடத்தில் போய் உட்கார மாட்டாளா?......

முதலில் கொஞ்ச நாள் அவளை நேருக்கு நேர் சந்திக்கத் துணியவில்லை. கடைக் கண்ணால் மட்டுமே கவனித்து வந்தேன். அதாவது அந்தப் பக்கம் பார்க்காமலே போகிறவன் போல. இதனிடையே எங்கள் கண்கள் சந்திக்கக்கூடச் சந்தித்து விட்டன. நான் செய்த முயற்சியை அவளும் செய்திருக்கலாமே தவிர, இதை இருவருடைய கண்களும் அளவளாவியதாகச் சொல்வதற்கில்லை.

இதைவிட முக்கியமானதொரு பரீட்சை செய்து பார்த்து விட்டேன். இதற்கு முன் ஒரே ஒரு தடவை மட்டும் தான் என் மண்ணுங்கட்டி வேலையை முடித்துக் கொண்டு அந்தி மயங்கும் வேளையில் அந்தப் பஞ்சவடி வழியாக என் கூடாரத்தை நோக்கி செல்வேன். ஆனால் இப்போதெல்லாம் அந்த வழியில் என் போக்குவரத்து அதிகரித்து விட்டது. இது விஷயம் ஜியோலாஜிக்கைச்

சேர்த்ததல்ல என்பதைப் புரிந்து கொள்ளாமலிருக்க அவள் ஒன்றும் அப்படிப் பச்சைக் குழந்தையல்ல! நான் இவ்வளவு தூரம் ஒழுங்கு மீறியும்கூட அவளிடம் எத்தகைய மாறுதலு மேற்படாததால் என் துணிச்சல் தானகவே அதிகரித்து விட்டது.

ஒவ்வொரு சமயம் அங்கிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கும் போது திடீரென்று பின் பக்கம் திரும்பிப் பார்ப்பேன். அசிரா நான் சென்று மறையும் வரை வழி மேல் விழி வைத்திருப்பாள். நான் திரும்பிப் பார்ப்பதைக் கண்டதும் டக்கென்று தன் பார்வையை டயரிமேல் திருப்பி விடுவாள்.

முன் போல் டயரி எழுதுவதில் அவள் அவ்வளவு சுறு சுறுப்பாகவும், உற்சாகமாகவும் ஈடுபடவில்லை. என் விஞ்ஞான புத்தி இந்தப் பிரச்னையை அக்கு வேறு,ஆணி வேருக அலசிப் பார்த்தது. அதன் முடிவு ‘ அவள் யாரோ ஒரு புருஷனுக்காகத் தவம் கிடக்கிருள். அந்தப் புண்யவானின் பெயர் பவதோஷ் என்பது. வெளி நாட்டிலிருந்து திரும்பி வந்து சப்ராவில் அஸிஸ்டெண்ட் மாஜிஸ்ட்ரேட்டாக இருக்கிருனே அவனே தான். அவன் வெளி நாடு செல்வதற்கு முன் இவ்விருவரிடையேயும் காதல் ஏற்பட்டிருக்க வேண்டும். திரும்பி வந்து பதவி யேற்றதும் அதை அவன் உதறித் தள்ளும்படி தவிர்க்க முடியாத நிலை ஏற்பட்டிருக்க வேண்டும். உண்மை என்ன என்பதைக் கண்டு பிடித்து விடுகிறேன். அதொன்றும் அப்படிக் கஷ்டமல்ல. என் கேம்பிரிட்ஜ் பள்ளித் தோழன் வங்கிம் பாட்ன சர்வ கலாசாலையில் வேலையிலிருந்தான். அவனுக் கொரு கடிதம் எழுதிப் போஸ்ட் செய்தேன்.

“விஹார் ஸிவில் ஸர்விஸில் பவதோஷ் என்றெருவர் இருக்கிருர். பெண்ணைப் பெற்றவர்களின் சங்கத்தில் அவருக்கு நல்ல கிராக்கி இருப்பதாகத் தெரிகிறது. என் நண்பரொருவர் தம் பெண்ணை அவருடைய தலையில் கட்டும் விஷயத்தில் என் உதவியைக் கோருகிருர். விஷயம் சரிப்படுமா? இதைப் பற்றி நன்கு விசாரித்து எனக்கு விவரம் தெரிவித்தால் ரொம்பவும் நன்றியுடையவனு யிருப்பேன். அவருடைய நடை, உடை, பாவனை மனப் போக்கு முதலியவைகளையும் கவனித்து எழுதவும்.”

பதில் வந்தது. “விஷயம் சரிப்படாது; இதோ அவரைப் பற்றி விவரம் வருமாறு:—

“நான் காலேஜில் படித்துக் கொண்டிருந்த போது டாக்டர் அநில்குமார் சர்க்கார் மாணவராக இருந்தார். அரிச்சுவடியின் எத்தனையோ எழுத்துக்கள் அவர் பெயரோடு ஒட்டிக் கொண்டிருந்தன. அறிவில் முதிர்ந்த அவர் உணர்ச்சியில் சின்னஞ்சிறு குழந்தை போலிருந்தார். அவருடைய குலவிளக்கான பேத்தியைப் பார்த்தால், சரஸ்வதி தேவி அவாது புத்தி கூர்மையை மெச்சி வெறும் புகழை மட்டும் கொடுக்கவில்லை. பேத்தியாகவே உருவெடுத்து அவர் மடியில் விளையாடினுள்” என்பதை நீ உணர்ந்து கொள்வாய்.

அந்தப் பாவி பவதோஷ் இவர்களின் இன்ப மயமான வாழ்வில் குறுக்கிட்டான். அவன் நல்ல புத்திசாலி ; சுற்றி வளைத்துப் பேசி ஆளை மயக்குவதில் வல்லவன். அவனிடம் முதலில் ஆசிரியர் மோசம் போனார். அவர்களுடன் அந்தப் படுபாவி அவ்வளவு அந்தரங்கமாக, அந்நியோன்யமாக உறவாடியதைக் கண்டதும் எங்கள் கை தினவெடுத்தது. ஆனால், எங்களால் வாய் விட்டு எதுவும் சொல்ல முடியவில்லை. இதனிடையே விவாகம் வேறு நிச்சயமாகி விட்டது. பவதோஷ் சீமைக்குப் போய் பாஸ் ஆகி வர வேண்டிய தொன்றுதான் பாக்கி. அங்கே போகவும் போய்ப் படித்து வரவும் ஏற்படும் மொத்தச் செலவையும் ஆசிரியரே கொடுத்தார். நாங்கள் செவிட்டு பிரமனை நோக்கி அந்தி சந்தி தவறாமல் 'இந்தக் கல்யாணம் நடைபெறு முன்பே அவன் டபிள் நிமோனியாவில் போய்விட வேண்டும்' என்று பிரார்த்தனை செய்தோம். ஆனால் அத்தப் படுபாவி சாகவில்லை. பரீட்சையிலும் பாஸ் செய்து விட்டு வந்து சேர்ந்தான். வந்ததும் வராததுமாக இந்தியா கவர்ன்மெண்டிலிருந்த யாரோ ஒரு உயர்தர அதிகாரியின் பெண்ணை மணந்து கொண்டான். வெட்கமும் துயரமும் தாங்க மாட்டாமல் ஆசிரியர் தம் பதவியை ராஜினாமாச் செய்து விட்டு மனமுடைந்த தம் பேத்தியை அழைத்துக் கொண்டு எங்கே போனாரோ, தெரியாது. பகவானுக்குத்தான் வெளிச்சம்."

கடிதத்தைப் படித்தேன். இந்தப் பெண்ணின் கண்ணீரைத் துடைத்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பது என்று திடசங்கல்பம் செய்து கொண்டேன்.

ஐந்தாம் அத்தியாயம்

முரடனும் டயரியும்

இதே சந்தர்ப்பத்தில் எப்படியாவது அசிராவோடு பேச வேண்டும் என்னும் துடிதுடிப்பு அதிகரித்து வந்தது. ஆனால் வங்காளிப் பெண்ணிடம் நெருங்கிப் பேச பயப்படுவதற்கு அவர்களோடு நெருங்கிய தொடர்பில்லாததே காரணம். ஹிந்துப் பெண்களிடம் முன்பின் அறிமுகமில்லாத அந்நிய புருஷர்கள் நெருங்கிப் பேச முடியா தென்பது பிரசித்தமான விஷயம். முக்கிய காரியமேது மில்லாமல் ஒரு பெண்ணுடன் ஓர் ஆண் வலுவில் சென்று பேசி விட்டால் அந்தப் பெண்ணின் புனிதமே கெட்டு விட்டதாக இந்தச் சமூகம் அடித்துக் கொள்ளுகிறது. இந்த மூடக் கொள்கை இப்படியே தான் இன்னும் உயிர் வாழ்ந்து வருகிறது.

அசிராவோடு நெருங்கிப் பழகாததற்கு முன்பே அவள் வேறு ஏதோ ஜாதியைச் சேர்ந்தவள் என்பது எனக்குத் தெரிந்து விட்டது.

இந்தக் காலத்துப் பெண் அல்ல அவள். அப் பழுக்கற்றவள். சுய மரியாதை யுள்ளவள். பால் வண்ணம் மாறுப் பாவிகை அவள்.

மனதிற்குள் நான் வெகுவாக யோசித்துப் பார்த்தேன்:— அவளிடமிருந்து எப்படி முதன் முதலாக வார்த்தையை வரவழைப்பது ?

அக்கம் பக்கங்களில் அப்போது கொஞ்சம் திருட்டுப் பயம் இருந்தது. அதையே சாக்காக வைத்துக் கொண்டு "மகாராஜாவுக்குத் தகவல் தெரிவித்து உங்களுக்கொரு பாராக்காரன் ஏற்பாடு செய்யட்டுமா ?" என்று கேட்கலாமென எண்ணினேன்.

ஆனால், இந்த மாதிரி வலுவில் நான் போய்ப் பேசினால் என்ன நினைப்பாளோ என்னவோ?

பகற்பொழுது குறைந்து இரவு நெருங்கி வந்தது. இந்த வேளையில் ஒன்று அசிரா வீடு திரும்பிக் கொண்டிருக்க வேண்டும். அல்லது தாத்தாவுடன் வெளியே உலாவி வரப் போயிருக்க வேண்டும். நான் அந்தப் பக்கம் கவனித்தபோது யாரோ ஒரு பட்டிக்காட்டு முரடன் அசிராவின் கையிலிருந்த டயரியையும் கைப் பையையும் பலவந்தமாகப் பிடுங்கிக் கொண்டு ஓடினான். இதுதான் சரியான சமயமென்று நான் ஓடிப்போய் 'தாங்கள் பயப்படவேண்டாம்; அவனை என்ன செய்கிறேன் பாருங்கள்" என்று திருடனைப் பின் தொடர்ந்து ஓடி அவன் பிடரியைப் பிடித்தேன். உடனே அவன் பையையும் டயரியையும் வீசி விட்டு 'செத்தேன் பிழைத்தேன்' என்று ஓடி விட்டான். நான் திருட்டுப் போன பொருள்களைப் பெருமிதத்துடன் அசிராவினிடம் கொண்டுபோய்க் கொடுத்தேன். (தொடரும்)

Karim

WATCH COMPANY.

(Guaranteed Watch Repairers)

கார்த்திகை பட்டாஸ்

★

கார்த்திகை, பட்டாஸ், பலவித மத்தாப்புகள், வாண வெடிகள் இவையெல்லாம் எங்களிடம் ஏராளமாய் வந்துள்ளன.

●

இன்றே விஜயம் செய்யுங்கள்

★

கரீம் வாட்ச் கம்பெனி

53, ஸர் உஸ்மான் ரோடு,

தியாகராயநகர் :: சென்னை-17.

சாவி எழுதிய

வத்ஸலையின் வாழ்க்கை

வெளிவந்து விட்டது

விலை 1 ரூ.

வாடாமலர் பதிப்பகம்
மாம்பலம் - சென்னை 17.

கண்ணன்

Printed by Sriram at Commercial Printing and Publishing House, 46, Armenian Street, Madras 1. Published by S. S. Mani Iyer at Vadamalar Pathippagam, Thyagarayanagar, Madras 17. Editor : M. S. Visvanathan (Savi)

தங்கம் வைர நகை வியாபாரம்
கே. ஆர். அண்டு சன்ஸ்
பெரிய கடை வீதி கோயமுத்தூர்
தந்தி BULLION
KR
சீல்
டெலிபோன் 226